THESAM MONTHLY FREE MAGAZINE

# தேசம்

மாதம் ஒருமுறை
வெளிவரும்
இலவச இதழ்

ஏப்ரல் - 2016

குரல் 45




மாற்றுக் கருத்துக்களுக்கான களம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 2016 முள்ளிவாய்க்கால் தினத்தை குழப்ப ரிசிசி முயற்சி!

பிரிஎப் ஏற்பாடு செய்யும் மே. 2016 முள்ளிவாய்க்கால் நிகழ்வுகளை குழப்பும் நடவடிக்கைகளை ரிசிசி (**Tamil Co ordinating Committee**) மேற்கொண்டு வருவதாக பிரிஎப் உறுப்பினர்கள் குற்றம் சாட்டுகின்றனர். மாவீரர் தினம் ஏட்டிக்குப் போட்டியாக நடத்தப்படுவது போல முள்ளிவாய்க்கால் நினைவு தினத்தையும் ரிசிசி கொச்சைப்படுத்த முற்படுவதாக பிரிஎப் உறுப்பினர்கள் கூறுகின்றனர்.

2009ற்கு பின் 2013 வரை மாவீரர் நாளை ரிசிசி அமைப்பே நடத்தி வந்தது. 2014, 2015ம் ஆண்டுகளில் சங்கீதன் தலைமையிலான தலைமைச் செயலகம் ரிசிசி இற்கு சவாலாக வேறொரு இடத்தில் நடத்தியது. ரிசிசி தமிழீழ விடுதலைப் புலிகளின் பெயரில் திரட்டிய நிதியின் கணக்கு வழக்குகளை காட்டவில்லை என்று தலைமைச் செயலகம் குற்றம் சாட்டியதுடன் மாவீரர் நாளை தனித்து நடத்துவதற்கும் அதனையே காரணமாகக் கூறுகின்றனர். இந்த முரண்பாடு பாரிஸில் வன்முறை வடிவம் எடுத்ததுடன் பருதியின் கொலைக்கு வழிகோலியது.

ரிசிசி பொம்மைத் தலைமைகளை முன்நிறுத்தி தனம் போன்றவர்களால் பின்னாலிருந்து தலைமறைவில் இயக்கப்படுகிறது. குறுகிய காலத்தில் ஆறு தலைவர்களை மாற்றிய ரிசிசியின் தற்போதைய தலைமைப் பொறுப்பை குறொய்டனைச் சேர்ந்த ஆனந்தன் என்ற இளைஞர் ஏற்று உள்ளார். இவரும் ரிசிசியின் மற்றுமொரு பொம்மைத் தலைவராகவே கருதப்படுகிறார்.

முள்ளிவாய்க்கால் தினத்தை 2009ற்கு பின் பிரிஎப் நடத்தி வருகின்றது. கடந்த ஆண்டு முள்ளிவாய்க்கால் தினத்தில் புலிக்கொடியை உயர்த்தி சர்ச்சையை ஏற்படுத்த ரிசிசி முயற்சி செய்தது. ஆனால் புலிக்கொடியை ஏற்றாமல் ஒரு பொது நினைவு நிகழ்வாக அதனை நடத்தவே பிரிஎப் ஏற்பாடுசெய்ததுடன் புலிக்கொடியை ஏற்றுவதை தவிர்க்க ஸ்கொட்லண்யாட் வழங்கிய ஆலோசனையையும் ஏற்றுக் கொண்டிருந்தது.


இந்தப் புலிக்கொடியைக் காட்டி விசிலடிச்சான் குஞ்சுகளுக்கு கிலுகிலுப்பூட்டும் வித்தையை ரிசிசி எப்போதும் செய்து வருவதாக பிரித்தானிய தமிழ் விளையாட்டுக் கழகத்தைச்சேர்ந்த ஒருவர் தெரிவித்தார். தமிழ் விளையாட்டுக் கழகத்தின் நிகழ்வொன்றில் ரிசிசி புலிக்கொடியைக் காட்டி கிலுகிலுப்பை ஏற்படுத்த முற்பட்டபோது அவர்கள் தடுத்து நிறுத்தப்பட்டதுடன் நிகழ்வில் இருந்து வெளியேற்றப்பட்டனர்.

கனடாவில் மக்கள் அவை, நோர்வேயில் பொது ஸ்தாபனக் கட்சி போன்ற மென்போக்குடனான அரசியல் நகர்வுகளையே முன்னைய புலி ஆதரவு அமைப்புகள் எடுத்துள்ளன. பிரிஎப் உம் அவ்வாறான ஒரு நகர்வையே செய்ய முற்படுகிறது. ஆனால், ரிசிசி இலங்கையில் மீண்டும் ஒரு குண்டு வெடிப்பைச் செய்வதன் மூலம் சேர்த்து வைத்த நிதியைப் பாதுகாக்கவும் மேலும் நிதியை திரட்டவும் திட்டமிடுவதாக புலி ஆதரவாளர்கள் சிலர் குற்றம்சாட்டுகின்றனர்.

கிளிநொச்சியில் ஒரு வீட்டில் வைத்து மூவர் கைது செய்யப்பட்டு பின்னர் வவுனியாவில் அவர்கள் படுகொலை செய்யப்பட்ட சம்பவம் தெரிந்ததே. இச்சம்பவத்தின் பின்னணியில் பிரான்ஸில் இருந்த ரிசிசி உறுப்பினர்களே இருந்துள்ளனர் எனத் தெரிய வருகிறது. தங்கள் சுயலாபத்திற்காக ரிசிசி உறுப்பினர்கள் அப்பாவித் தமிழர்களை பலிகொடுக்கவும் துணிந்து விட்டனர் என்றும் தற்போது ரிசிசி மீது குற்றச்சாட்டப்படுகிறது.

தலைமைச் செயலகம் மாவீரர்நாளை தனித்து நிகழ்த்த திட்டமிட்டபோது அவர்களை அரசின் ஏஜென்டுகள் என்று குற்றம் சாட்டியவர்கள் தற்போது முள்ளிவாய்க்கால் தினத்தை யாரின் ஏஜென்டாக இருந்து குழப்ப முற்படுகின்றனர் என்று பிரிஎப் கேள்வி எழுப்புகின்றது.

## தமிழீழம் அமையும் என்று சூளுரைத்து நாடு கடந்த அரசில் எம்பி ஆனவர் அளவெட்டியில் தூள் கிளப்புகிறார்!



தமிழீழம் அமையும் என்றும் இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தி கொல்லப்பட வேண்டியவர் என்றும் சூளுரைத்த இல்பேர்ட் செல்வ விநாயகர் ஆலய வர்த்தகர் செல்வராஜா யாழ் அளவெட்டி ஆலயத் தேரில் தூள் கிளப்பி உள்ளார். இலங்கையில் ஆயிரம் பெற்றோரை இழந்த பிள்ளைகளைப் பராமரிப்பதாக ஜிரிவி யில் விளம்பரப்படுத்தி ஆலயத்தின் வருவாயை அதிகரித்த இவர், அவ்வாறான குறிப்பிடத்தக்க உதவித் திட்டங்கள் எதனையும் அங்கு மேற்கொள்ளவில்லை. சில நூறு பவுண்களில் கணனி மையத்திற்கு மட்டும் அண்மையில் உதவ முன்வந்து இருந்தார்.

தனது ஊர் ஆலயத்தில் தன்னை கௌரவிக்க வேண்டும் என்பதற்காக அந்த ஆலயக் குருக்களுக்கு வாரி வழங்கிய அவர் ஆலயத் திருவிழாவின் போது அங்கு கௌரவத்தை பெற்றுக் கொண்டதாக செல்வ விநாயகர் ஆலயத்துடன் நெருக்கமான ஒருவர் தெரிவித்தார்.

தனது தூள் ஆனா வ ர லா ற றை வெள்ளையடிக்க அவர் தற்போது சொந்த ஊருக்கும் சென்று தனது இமேஜை பில்ட் அப் செய்கின்றார் என சைவ முன்னேற்றச் சங்கத்தைச் சேர்ந்த ஒருவர் தெரிவித்தர். அவர் மேலும் குறிப்பிடுகையில் லண்டனில் சைவ முன்னேற்றச் சங்கத்தின் ராமநாதன் போன்ற வெள்ளை வேட்டிக்காரரர் போல் ஊரிலும் சிலரை செல்வராஜா தனக்கு வெள்ளையடிக்க வைத்திருப்பதாகத் தெரிவித்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடக்கில் கல்வி நிர்வாகத்தை மாகாணசபை உறுப்பினர்களின் – மாகாண அமைச்சர்களின் நாடாளுமன்ற உறுப்பினர்களின் தலையீடுகள் பாதிக்கின்றது!

## வடக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் இராசா இரவீந்திரன்

தனியார் கல்வி நிலையங்கள் தான்தோன்றித் தனமாக நடப்பதற்கு எதிராக நடவடிக்கைகள் எடுக்கப்படும்!

புலம்பெயர் நாடுகளில் உள்ள பழைய மாணவர் சங்கங்கள் தங்கள் கல்லூரிக்கு நிதி வழங்குவதன் மூலம் நிதி ஊழல்களையே ஏற்படுத்துகின்றனர்!

இவ்வாறு, லண்டனில் நடைபெற்ற கல்விக் கருத்தரங்கில் வடக்கு மாகாண அமைச்சின் செயலாளர் இராசா இரவீந்திரன் தெரிவித்தார். ஏப்ரல் 24, 2016 அன்று லண்டன் அச்சுவே உயர் வாசற்குன்று முருகன் ஆலயத்தில் இடம் பெற்ற கருத்தரங்கல் அவர் இவ்வாறு தெரிவித்தார்.

வட இலங்கைக்கான கல்வி அபிவிருத்திக் குழு – பிரித்தானியா **(Education Development Forum for Northern Sri Lanka - UK)** என்ற என்.சச்சிதானந்தன் தலைமையிலான அமைப்பு இக்கருத்தரங்கை ஏற்பாடு செய்திருந்தது.

இரண்டு மணி நேரங்களுக்கு மேலாக வடமாகாண கல்வி நிலைதொடர்பாக அழகாகவும் ஆழமாகவும் வட மாகாணக் கல்வி எதிர்கொள்ளும் பிரச்சினைகளை முன்வைத்து உரையாற்றும் போதே இராசா இரவீந்திரன் மேலுள்ள கருத்துக்களை வெளிப்படுத்தினார்.

**இடமாற்றங்களில் தலையீடு:**

ஆசிரியர்கள், அதிபர்கள், அதிகாரிகள் நியமனங்கள், இடமாற்றங்களில் அரசியல் தலையீடுகள் இருப்பதால் பின்தங்கிய பிரதேசங்களுக்கு நியமனம் பெறுபவர்கள் அரசியல் செல்வாக்கைப் பயன்படுத்தி மீண்டும் தங்கள் சொந்தப் பிரதேசங்களுக்கே திரும்பி வந்துவிடுவதாகவும் அதனால் பின்தங்கிய பிரதேசங்களில் ஆசிரியர் பற்றாக்குறை நிலவுவதாகவும் நகர்ப்பிரதேசங்களில் தேவைக்கதிகமான ஆசிரியர்கள் இருப்பதாகவும் இராசா இரவீந்திரன் குற்றம்சாட்டினார்.

**தனியார் கல்வி நிலையங்கள்:**

தனியார் கல்வி நிலையங்கள் தான் தோன்றித்தனமாக நடந்து கொள்வதை கட்டுப்படுத்துமாறு கேட்டுக்கொள்ளப்பட்ட போதும் அவர்கள் அவ்வாறான ஆலோசனைகளைப் பொருட்படுத்தாமல் செயற்படுகின்றனர் என்றும், தனியார் கல்வி நிலையங்கள் தொடர்பான நியதிச் சட்டங்களை உருவாக்கி அவர்களைக் கட்டுப்படுத்துவதற்கான நடவடிக்கைகள் விரைவில் எடுக்கப்படும் என்றும் இராசா இரவீந்திரன் அங்கு உறுதியளித்தார்.

**பழைய மாணவர் சங்கங்கள்:**

மத்திய அரசாங்கமும் மாகாண அரசாங்கமும் வடமாகாண பாடசாலைகளுக்கு 2000 மில்லியன் ருபாய்களை ஒதுக்கி உள்ளது என்றும், இதைவிடவும் இன்னும் பல மில்லியன் ரூபாய்கள் பாடசாலைகளுக்கு ஒதுக்கப்பட்டு உள்ளதையும் சுட்டிக்காட்டிய இராசா இரவீந்திரன் பாடசாலைக் கட்டிடங்களுக்காகவோ தளபாடங்களுக்காகவோ பழைய மாணவர் சங்கங்கள் ஏன் நிதி அனுப்புகிறார்கள் என்று தங்களுக்கு தெரியவில்லை என்று ஆச்சரியத்துடன் கேட்டார். பாடசாலைகளுக்கு ஒதுக்கப்பட்ட நிதியையே பாடசாலைகள் பயன்படுத்தாமல் உள்ளன என்றும், அவ்வாறு பாடசாலைகளுக்கு நிதி தேவைப்பட்டால் அவர்கள் தங்களை அணுக முடியும் என்றும் அவர் தெரிவித்தார். பழைய மாணவர் சங்கங்கள் அனுப்புகின்ற நிதி ஊழல்கள் இடம்பெறுவதற்கே உதவுகின்றது என்றும் அவர் குற்றம்சாட்டினார்.

மாணவர்களுக்கு சத்துணவுத் திட்டத்தின் கீழ் சத்துணவும் வழங்கப்படுகிறது என்றும் பாடசாலைகள் போட்டிகளில் கலந்து கொள்கின்ற போது அவர்களுக்கு பயன்படுத்த பஸ்களும் வடமாகாண சபையில் உள்ளது என்றும் அவ்வாறான உதவிகளையும் பழைய மாணவர் சங்கங்கள் செய்ய வேண்டிய அவசியம் இல்லை என்றும் இராசா இரவீந்திரன் தெரிவித்தார். யாழ். இந்துக் கல்லூரி போன்ற பாடசாலைகள் பழைய மாணவர் சங்கங்கள் மூலம் பெறும் பணம் தொடர்பில் வெளிப்படைத்தன்மையுடன் செயற்பட வேண்டும் என்று கேட்டுக்கொண்டார். அங்கு கொக்குவில் இந்துக் கல்லூரிக்கு ஒருவர் 20 இலட்சம் அனுப்புவது பற்றி குறிப்பிட்ட போது நீங்கள் ஏன் பணம் அனுப்புகிறீர்கள் எனத் தெரியவில்லை எனத் தெரிவித்தார்.

**செய்ய வேண்டியவை:**

அங்கு முன் மொழியப்பட்ட திட்டங்களான மாணவர்கள், ஆசிரியர்களை ஊக்கப்படுத்தும் திட்டங்களை மேற்கொள்வது, மகிழ்வகங்கள் என்று சொல்லப்படும் மாணவர்களுக்கான உளநல ஆலோசனை மையங்களை ஏற்படுத்துவது, பின்தங்கிய பாடசாலைகளில் மேலதிக வகுப்புகளை நடத்த உதவுவது, ஆய்வுகூட வசதிகளுடன் கூடிய விஞ்ஞான மையம் ஒன்றை உருவாக்கி அதனை விஞ்ஞானக் கல்வியை ஊக்குவிக்கும் வகையில் பாடசாலை களை பயன்படுத்தச் செய்வது, தொண்டமானாறு வெளிக்களப் பரீட்சைகளை மேற்கொள்ள உதவுவது போன்ற விடயங்களை இராசா இரவீந்திரன் வரவேற்றார். (தொடர்ச்சி 03ஆம் பக்கம்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



(02ஆம் பக்கத் தொடர்ச்சி) பழைய மாணவர் சங்கங்கள், ஆலயங்கள் அடையாளம் காணப்பட்ட இத்திட்டங்களுக்கு உதவ முன்வர வேண்டும் என்றும் தெரிவிக்கப்பட்டது.

**கல்விநிலை:**

2014ம் ஆண்டின் பரீட்சைப் பெறுபேறுகள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட பகுப்பாய்வின் அடிப்படையில் வட மாகாணம் ஒன்பதாம் இடத்திற்குப் பின்தள்ளப்பட்டுள்ளது அதாவது, மாகாண அடிப்படையில் கடைசி இடத்தில் உள்ளது என்பது. கிளிநொச்சி மாவட்டம், மாவட்ட அடிப்படையில் 25வது இடத்திலுள்ளது. அதாவது மாவட்ட அடிப்படையில் கடைசி இடத்தில்.

வன்னியில் உள்ள உயர்தரப் பாடசாலைகளில் விஞ்ஞான, கணித, வர்த்தக பாடங்களைக் கற்பிப்பதற்கு 224 ஆசிரியர்களுக்கான வெற்றிடம் உள்ளது. ஆனால் யாழுப்பாணத்தில் சில பாடசாலைகளில் தேவைக்கு அதிகமான ஆசிரியர்கள் உள்ளனர்.

**எம்.கே.சிவாஜிலிங்கம்:**

ஆசிரிய நியமனங்களில் அந்தந்த கல்வி வலயங்களை வசிப்பிடமாகக் கொண்ட ஆரியர்களுக்கு முன்னுரிமை வழங்கப்பட வேண்டும் என்றும் நேர்முகப்பரீட்சை மூலம் தெரிவு செய்யப்படும் ஆசிரியர்கள், பற்றாக்குறை நிலவும் பாடசாலைகளில் குறைந்தது 5 வருடங்களாவது கடமையாற்ற வேண்டும் என்ற நிபந்தனையுடன் ஒரு ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட வேண்டும் என மாகாணசபை உறுப்பினர் எம். கே. சிவாஜிலிங்கம் தேசம் சஞ்சிகைக்குத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில் இராசா இரவீந்திரன் போன்ற உயர் அதிகாரிகளுக்கு சில அரசியல் வாதிகள் அழுத்தங்கள் கொடுத்திருக்கலாம் ஆனால் இவ்வாறான அழுத்தங்களுக்கு அவர்களைப் போன்றவர்கள் பணியக்கூடாது. இவ்வாறான அழுத்தங்களை வேண்டுகோள்களை இந்த அதிகாரிகள் நிராகரிக்க வேண்டும் என்றும் தெரிவித்தார்.

**மாகாணசபை உறுப்பினர் ஜி.ரி. லிங்கநாதன்:**

சிவாஜிலிங்கத்தின் கருத்தையொத்து கருத்து வெளியிட்ட வட மாகாணசபை உறுப்பினர் ஜி. ரி.லிங்கநாதன் அதிகாரமுடைய இருவருக்கு இடையே இவ்வாறான முரண்பாடுகள் நிலவுவதே இயல்பானதே. ஆனால் அதிகாரிகள் உறுதியுடன் இவற்றை நிராகரிக்க வேண்டும் எனத் தெரிவித்தார். மேலும் இராசா இரவீந்திரன் முற்றாக இவ்விடயங்களில் அரசியல்வாதிகளைக் குற்றம் சாட்ட முடியாது என்றும் ஏனெனில் நியமனங்கள், இடமாற்றங்கள் அதிகாரிகளின் அதிகாரத்திற்கு உடபட்டவை என்றும் ஜி.ரி. லிங்கநாதன் தெரிவித்தார். அதிகாரிகள் சரிவர தங்கள் கடமையைச் செய்வதில்லை என்றும் ஜி.ரி.லிங்கநாதன் குற்றம் சாட்டினார்.

**யாழ் பல்கலைக்கழகம் எச்சரிக்கை:**

வடமாகாணத்தில் கணித பாடத்தில் 50 வீதத்திற்கு குறைவானவர்களே சித்தியடைவதாகவும் கணித, விஞ்ஞான பாடங்களை உயர்தர வகுப்புக்கு தெரிவு செய்பவர்கள் 20 வீதத்திற்கும் குறைவாக உள்ளனர் என்றும் இராசா இரவீந்திரன் அக்கருத்தரங்கில் தெரிவித்தார். ஏற்கனவே கணித, விஞ்ஞான பாடங்களுக்கு ஆசிரியர் பற்றாக்குறை நிலவுகின்ற நிலையில் 20 வீத மானவர்கள் மட்டுமே உயர் தர வகுப்புக்கு கணித விஞ்ஞான பாடங்களைத் தெரிவு செய்தால் 2020இல் உயர்தர வகுப்புகளுக்கு கணித விஞ்ஞான பாடங்களைக் கற்பிப்பதற்கான ஆசிரியர்களை நியமிப்பதற்கு முடியாத நிலையேற்படும் என யாழ்.பல்கலைக் கழகம் தங்களை எச்சரித்து உள்ளதாகவும் இராசா இரவீந்திரன் அங்கு சுட்டிக் காட்டினார்.

அதுமட்டுமல்ல 25 வீதமான மாணவர்கள் தாய்மொழியான தமிழில் சித்தியடைவதில்லை என்ற புள்ளி விபரத்தையும் அவர் அங்கு வெளிப்படுத்தினார்.

**மாணவர்களும் பெற்றோர்களும்:**

இக்கல்வி வீழ்ச்சிக்கான காரணங்களுக்கு ஆசிரியர்கள், அதிபர்கள், அதிகாரிகள் தங்கள் கடமையைச் சரிவரச் செய்யாமல் இருப்பது முக்கிய காரணமாக இருந்தாலும் பெற்றோர்களும் மாணவர்களும் கல்விக்கு மதிப்பளிக்காமல் செயற்படுவதும் ஒரு முக்கிய காரணம் என எம். கே.சிவாஜிலிங்கம் தேசம் சஞ்சிகைக்கு சுட்டிக்காட்டினார். வெளிநாடுகளில் இருந்து கிடைக்கின்ற பணமும் வெளிநாட்டு மோகமும் மாணவர்களை கல்வியில் ஆர்வ மற்றவர்களாக்குவதாக அவர் குற்றம் சாட்டினார் •



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாடாளுமன்ற உறுப்பினர் சிறீதரனுக்கு ஒரு திறந்த மடல்



சிவஞானம் சிறீதரன்,
பாராளுமன்ற உறுப்பினர்,
கிளிநொச்சி, இலங்கை.

25 ஏப்ரல் 2016

**மாண்புமிகு பா. உ. சிவஞானம் சிறிதரன் அவர்களுக்கு,**

நீங்கள் மற்றுமொரு முறை லண்டனுக்கு வருவதாக அறிந்தேன். மிக்க மகிழ்ச்சி. இலங்கைப் பாராளுமன்ற உறுப்பினராக நான் உங்களை இங்கு வரவேற்பதில் மகிழ்ச்சி அடைகிறேன்.

உங்களுடைய இந்த வருகையின் போது உங்களிடம் சில விடயங்களை கேட்டு தெளிவுபடுத்துமாறு என்னை லண்டனில் வாழும் அரசியல் ஆர்வலர்கள் சமூகச்செயற்பாட்டாளர்கள் கேட்டுக்கொண்டனர். அவற்றைத் தொகுத்து தேசம் சஞ்சிகையினூடாக உங்கள் முன் வைக்கின்றேன்.

1.உங்களது தேர்தல் தொகுதியான கிளிநொச்சி கல்வித் தரத்தில் மாவட்ட அடிப்படையில் 25வது இடத்தில் அதாவது மிகக் கீழான கடைசி மாவட்டமாக உள்ளது. ஒரு பாராளுமன்ற உறுப்பினர் முன்னாள் அதிபர் என்ற வகையில் கிளிநொச்சி மாவட்டத்தின் கல்வி நிலையை உயர்த்த எவ்வித முயற்சியும் எடுப்பதாகத் தெரியவில்லை?

2.தற்போதைய வட மாகாணசபை கல்வி அமைச்சர் ரி. குருகுலராஜா உங்கள் ஆதரவுடன் மாகாண சபை உறுப்பினராகி உங்கள் உறுதுணையோடு வட மாகாணத்தின் கல்வி அமைச்சராக கடந்த இரண்டு ஆண்டுகளாக உள்ளார். அவருடைய சொந்த மாவட்டமே இலங்கையின் கீழான கல்வி மாவட்டமாக உள்ளது. கிளிநொச்சி மாவட்டத்தின்- வட மாகாணத்தின் கல்வி நிலையை மேம்படுத்த என்ன கொள்கைத் திட்டங்களை நீங்கள் மேற்கொள்ள உத்தேசிக்கின்றீர்கள்?

3.ஆசிரியர்கள், அதிபர்கள் நியமனங்கள், இடமாற்றங்களில் நீங்கள், மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்கள், மாகாணசபை உறுப்பினர்கள் அமைச்சர் ரி. குருகுலராஜா ஊடாக மேற்கொள்கின்ற தலையீடுகள் கல்வி நிர்வாகத்தை நிர்வகிக்க முடியாமல் தீவுப் பகுதிகள்,கிளிநொச்சி உட்பட்ட வன்னிப் பிரதேசத்தில் ஆசிரியர் பற்றாக்குறையை ஏற்படுத்துவதாக கூறப்படுகிறது.

4.இரணைமடுக் குளத்திற்கு மகாவலி நீரைக் கொண்டு வருவதற்கும் அதனை யாழ்ப்பாணம் கொண்டு செல்வதற்கும் நீங்கள் கடுமையான எதிர்ப்புத் தெரிவித்ததன் மூலம் எதிர்காலத்தில் யாழ். மாவட்டத்தில் குடி தண்ணீர் பிரச்சினை ஏற்படும் நிலையை ஏற்படுத்தி உள்ளீர்கள் என்றும் அபிவிருத்தித் திட்டங்களுக்கு ஒத்துழைப்பு வழங்க மறுத்து வருகிறீர்கள் என்றும் குற்றம் சாட்டப்படுகிறது.

5.முன்னைய அரசு வன்னியில் உள்ள முன்பள்ளிகளை இராணுவத்தின் கீழ் நடத்துவதாக குற்றம்சாட்டி இருந்தீர்கள். தற்போது உங்கள் கட்சியின் ஆசீர்வாதத்துடனேயே தற்போதைய அரசு ஆட்சி நடத்துகிறது. ஆனால் இந்த இராணுவக் கட்டுப்பாட்டின் கீழ் உள்ள முன்பள்ளி நிர்வாகத்தை, வடமாகாண கல்வி அமைச்சின் கீழ் கொண்டுவர ஏன் இதுவரை நடவடிக்கை எடுக்கவில்லை?

6.புனர்வாழ்வு அளிக்கப்பட்ட முன்னாள் போராளிகள் பலர் வன்னியில் உள்ள இராணுவத்தின் பண்ணைகளிலேயே வேலை செய்ய வேண்டி உள்ளது. அவர்கள் அவ்வேலைகளை கைவிட்டால் அவர்களுக்கு எவ்வித வாழ்வாதாரமும் இல்லை. ஆளும் அரசுடன் இணக்க அரசியலில், கூட்டாட்சியில் இருக்கும் நீங்கள் ஏன் இந்த விவசாயப் பண்ணைகளை வட மாகாணத்தின் நிர்வாகத்திற்குள் கொண்டு வர முடியவில்லை?

7.புனர்வாழ்வு அளிக்கப்பட்ட முன்னாள் போராளிகள் தமிழ் தேசியக் கூட்டமைப்பில் ஆசனம் கேட்ட போது நீங்கள் அவர்களை இராணுவ உளவாளிகளாக சித்தரித்தீர்கள். அவரகள் சயனைட் கடித்து இறந்து இருக்க வேண்டும் என்றும் கூறியதாக ஊடகங்களில் செய்திகள் வெளிவந்திருந்தது. தற்போது உங்கள் தலைவர் இரா. சம்பந்தன் விடுதலையான கைதிகளை முகம்கொண்டு பார்க்கவே விரும்புகிறார் இல்லை. ஏன் இவர்கள் கீழானவர்களாக நடத்தப்படுகிறார்கள்?

8.மாகாண சபை உறுப்பினர் அனந்தி சசிதரன் தற்போதைய அரசை ஆதரிக்க மறுத்து கருத்து வெளியிட்டார். அதற்காக கட்சி நடவடிக்கை எடுக்கப்போவதாகவும் மிரட்டியது. ஆனால் நீங்கள் முரண்படவில்லை. 2016 இல் தீர்வு என்று கூறிய உங்கள் தலைவர் சம்பந்தர் தற்போது அது தன் கணிப்பு என்கிறார். உங்களுக்கு அதற்கான காரணம் புரிகிறதா?

9.கிளி மக்கள் என்ற கிளிநொச்சியில் உதவிகளை மேற்கொள்கின்ற லண்டனைத் தளமாகக் கொண்டு இயங்கும் அமைப்பு, நீங்கள் உங்கள் தமிழ்வின் மற்றும் ஜேவிபி நியூஸ் மூலமாக தங்களை பழிவாங்குவதாக குற்றம்சாட்டுகின்றனர். இது உண்மையா?

10.உங்கள் அரசியல் எதிரிகளை பழிவாங்க நீங்கள் ஜேவிபி நியூஸ் என்ற இணையத்தை நடத்துவதாக குற்றம்சாட்டுகின்றனர். இது தொடர்பாக இவ்வாறான இணையங்களுக்கு எதிராக வட மாகாண சபையில் தீர்மானம் ஒன்றும் நிறைவேற்றப்பட்டது.

இவை தொடர்பாக உங்கள் மேலான கருத்துக்களை எதிர்பார்க்கிறேன். உங்களை நேரில் சந்திக்கும் வரை விடைபெறுகிறேன்.

நன்றி.

இங்ஙனம்
**த.ஜெயபாலன், தேசம்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**வருகின்ற லண்டன் மேயருக்கான தேர்தலில் லண்டன் தமிழர்கள் எவ்விடயங்களை கவனத்தில் கொண்டு தங்களது தெரிவை மேற்கொள்ள வேண்டும் என நினைக் கிறீர்கள்? யாரைத் தெரிவு செய்வது தமிழர்களுக்கு நல்லது என நினைக்கிறீர்கள்?**

பெரும்பான்மையான தெற்காசியர்கள் ஐரோப்பிய நகரங்களின் வறிய பகுதிகளிற்தான் செறிந்து வாழ்கிறார்கள். குறைந்த வீட்டு வாடகையைத் தேடி ஓடுவதும் - வேலைவாய்ப்புக்காக இடம்பெயர்வதும் என பலரும் சிதறிய வாழ்க்கையே வாழ்கிறார் கள். லண்டனில் வீட்டு வசதி மிகப்பெரும் பிரச்சினையான ஒன்றாக இருக்கிறது. குடும்பத்தில் இருவர் வேலை செய்தாலும் லண்டனுக்குள் ஒரு அறை வீடு கூட வாடகைக்கு எடுக்க முடியாத நிலைதான் இருக்கிறது. சாதாரன வேலை செய்பவர்கள் தமது சம்பளத்தை வைத்து — போக்குவரத்துச் செய்வது - வாடகை கட்டுவது — மற்றய பில்களைக் கட்டுவது — பிள்ளைகளுக்கான கல்விச் செலவுகள் செய்வது - என்பது முற்றிலும் சாத்திய மற்றது. பெற்றோல் ஸ்டேசன் மற்றும் டெஸ்கோ முதலிய




கடைகளில் வேலை செய்பவர்கள் லண்டனில் வாழ்வதற்கு ஏற்ப சம்பளத்தைப் பெறுவதில்லை. அரைவாசிக் காசு போக்கு வரத்துக்கும் பில்லுகளுக்குமே செலவாகிவிடும் நிலையில் மாதாமாதம் வாடகை கொடுக்கவும் சாப்பிடவும் தடுமாறும் வாழ்க்கையையே பலர் எதிர்கொண்டுள்ளனர்.

இதில் இருந்து தப்புவதற்காக பல்வேறு தியாகங்களை மக்கள் செய்துவருகின்றனர். சமறி வாழ்க்கை — அறைகளை வாடகைக்கு விடுவது — சாப்பாட்டில் மிச்சம் பிடிப்பது என பல உத்திகளை மக்கள் செய்யவேண்டியுள்ளது. எந்தெந்த வகையில் மிச்சம் பிடிக்க முடியுமோ அவ்வகையில் எல்லாம் மிச்சம்பிடிக்கும் கலாச்சாரம் வேர் கொள்வதற்கு பொருளாதாரம் பின்தங்கிய நிலமையே காரணம். இது தவிர குடும்பத்துக்கு வளங்கப்படும் பமிலி கிரடிட் மற்றும் ஏனைய பெனிபிட் பண உதவிகள் இன்றி வாழ முடியாத நிலையில்தான் பல குடும்பங்கள் வாழ்கின்றன. இந்த வசதிகள் தடைப்பட்டால் குடும்பத்துடன் தற்கொலை செய்வதைத் தவிர வேறு வழயில்லை சில குடும்பங்களுக்கு. இந்த வறுமையில் இருந்து மீற அவர்கள் இரண்டு வேலை செய்ய வேண்டி தள்ளப்படுகிறார்கள். நாளுக்கு பதினாறு மணிநேரத்துக்கும் மேலாக — கிழமைக்கு ஆறு நாள் ஏழுநாள் என அவர்கள் கடும் வேலை செய்துதான் உயிர்வாழ முடிகிறது.

வீட்டு வசதி, வைத்திய கல்விச் சேவைகள், சமுக சேவைகளைக் காத்துக்கொள்ளுதல், குறைந்தபட்ச ஊதியத்தை மணிக்கு பத்து பவுன்சுகளுக்கு அதிகரித்தல். போக்குவரத்துச் செலவைக் குறைத்தல் ஆகிய கோரிக்கைகள் மக்கள் மத்தியில் பலப் பட்டிருப்பதற்கு காரணம் மேற்சொன்ன நிலவரமே. இந்தக் கோரிக்கைகள் வெறும் வெற்றுக் கோசங்கள் அல்ல. இரத்தமும் தசையுமாக உருகி உருகி உதைத்துக் கொண்டிருக்கும் மக்களின் வாழ்வா சாவா என்பது சம்மந்தப்பட்ட கோரிக்கைகள்.

உழைக்கும் ஒருவன் ஏன் வறுமையில் வாழ வேண்டும்? அத்தகய உழைப்போருக்கு எதிரான பொருளாதார முறை யாருக்குத் தேவை என்ற கேள்விகள் மக்கள் மனங்களிற் பலப் பட்டு வரும் காலம் இது. இத்தகய கோரிக்கைகளை ஆதரிக்கும் சோசலிஸ்டான ஜெரமி கோர்பின் வரலாறு காணாத ஆதரவுடன் லேபர் கட்சியின் தலைமைக்கு தேர்ந்தெடுக்கப்பட்டிருப்பது அனைவருக்கும் தெரிந்ததே. இங்கிலாந்து வரலாற்றில் எந்தக் கட்சித் தலைவருக்கும் இத்தகய ஆதரவு இருந்ததில்லை. கோர் பினின் இந்த வரலாற்று வெற்றி மக்கள் மனங்களில் ஊறி யிருக்கும் வெறுப்பையும் எதிஉப்பையும் வெளிக்காட்டி யுள்ளது.

இதற்கு மாறாக அனைத்து சேவைகளையும் அடித்து மூடும் வேலையிலும் அவற்றை பெரும் வியாபாரி களுக்கு விற்கும் வேலையிலும் ஈடுபட்டு வருகிறது ஆளும் கண்சவேட்டிவ் கட்சி. இவர்கள் புதிய டாக்டர்களுக்கு எதிராக எடுத்த நடவடிக்கையால் அனைத்து வைத்திய சாலைகளிலும் டாக்டர்கள் போராட்டம் செய்து வருவது அறிந்திருப்பீர்கள்.

இதேபோல் நாடெங்கும் இருக்கும் ஆசிரியர் கள் மற்றும் பலவேறு அரச ஊழியர்கள் அரசுக்கெதிரான கடுமையான போராட் டங்களை முன்னெடுத்து வருகிறார்கள். இந் நிலையில் சிறுபான்மை மக்கள் எவ்வாறு கன்சவேட்டிவ் கட்சிக்கு வாக்களிக்க முடியும்? அத்தகய மக்களுக்கு எதிரான கொள்கை களை முன்னெடுக்கும் யாருக்குமே நாம் வாக்களிக்க முடியாது.

கன்சவேட்டிவ் கட்சிக்காக லண்டன் மேயர் தேர்தலில் நிற்பவர் ஒரு பெரும் மில்லியனர். இங்கிலாந்தில் வரி செலுத்தாமல் இருப்பதற்காக கள்ள வேலைகள் செய்து தனது வியாபாரத்தை வெளியிற் கொண்டு சென்றதாக அவர்மேல் குற்றச்சாட்டுள்ளது. சிறுபான்மை சமூகங்களின் நலன்களுக்கு முற்றிலும் எதிரான கொள்கை உள்ள பெரும் முதலாளி அவர்.

லேபர் கட்சி, கிறீன் கட்சி, ரெஸ்பக்ட் ஆகிய கட்சிகள் தவிர மற்ற வேட்பாளஉகள் துவேசிகளாகவும், பகிரங்கமாக புலம்பெயர் வோருக்கு எதிரானவர்களாகவும், பெரும் வியாபாரங்களின் நலன்களுக்காக இயங்குபவர்களாகவும்தான் இருக்கிறார்கள். அவர்களுக்கு எமது வாக்குகளை வழங்கி எங்களை நாங்களே கேவலப்படுத்திக் கொள்ளக்கூடாது.

லேபர் கட்சிக்காக நிற்கும் வேட்பாளர் சிடிக் கானும்கூட பெரும் முதலாளிகள் சார் வேட்பாளர்தான். அவர் தனது கட்சித் தலைவர் ஜெரமி கோர்பினின் கொள்கைகளுக்கு எதிரானவர். இந்நிலையில் நாம் வாக்களிப்பதற்கு சரியான வேட்பாளர் யாரும் இல்லை என்பதே உண்மை. இருப்பினும் இந்தத் தேர்தலில் லேபர் தோல்வியுற்றால் அதைப் பாவித்து கோர்பினைக் காலி பண்ணத் திரிகின்றனர் தொழிலாளர் கட்சிக்குள் இருக்கும் வலதுசாரிகள். இதற்காக பல்லைக் கடித்துக் கொண்டும் - மூக்கைப் பொத்திக்கொண்டும் (தொடர்ச்சி 07ஆம் பக்கம்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(06ஆம் பக்கத் தொடர்ச்சி)

பலர் சிடிக் கானுக்கு வாக்களிப்பர் என எதிர்பார்க்கலாம். ஆனால் எமக்கான சரியான தேர்வு இல்லாத நிலையில் வாக்களிக்காதோர் எண்ணிக்கைதான் அதிகமாக இருக்கப்போகிறது.

**2016 முடிவிற்குள் இலங்கை இனப் பிரச்சினைக்கு தீர்வு என்று சூளுரைத்த சம்பந்தன் ஐயா இப்போது அது தன்னு டைய கணிப்பு என்று அடக்கியே வாசிப்பது ஏன்?**

சம்மந்தன் ஐயாவுக்கு சாகிற காலத்தில் எதிர்கட்சி தலைவர் என்ற சனியன் பிடிச்சிருக்கிறது. தானாடாமல் அவரது ஐக்கிதேசியக் கட்சி தசைதான் ஆடுகிறது. அதுதானே தமிழ் வலதுசாரிய பாரம் பரியம். அவர்கள் எண்றைக்கு பதவிகளுக்கு அப்பால் நின்று சிந்தித்திருக்கிறார்கள். காங்கிரஸ் - தமிழரசுக்கட்சி - கூட்டணி - ஆகிய கட்சிகள் காப்பாற்றிய பரம்பரையையே கூட்டமைப்பும் காப்பாற்றுகிறது. மக்களை ஏமாற்றி வாக்குப் பறிப்பதற்கு எந்த பேச்சும் பேச தயாராக இருக்கும் வெறுமை நிறைந்த வெற்று அரசயல்வாதிகளின் கூட்டா மாறிவிட்டது கூட்டமைப்பு.

சுமந்திரனும் சம்மந்தனும் சேர்ந்து விட்டுத் தள்ளிய புளுடாக்கள் எல்லாம் சந்தையில் மலியத் தொடங்கி விட்ட நிலையில் - இவர்களைத் தள்ளி வைத்து விட்டு ஒரு மாற்று முற்போக்கு மக்கள் அரசியல் முன்னணி கட்டுவது பற்றிச் சிந்திப்பதில் செயற்படுவதில் நாம் எம் நேரத்தைச் செலவிட வேண்டும்.

**புதிய அரசு – புதிய எதிர்க்கட்சி – புதிய இணைக்க அரசியல். ஈபிடிபி காட்டிய இணக்க அரசியலின் வழியில் தற்போது தமிழ் தேசியக் கூட்டமைப்பும் பயணிக்கிறது. ஈபிடிபி – அரசு ததேகூ – அரசு இணக்க அரசியல் பற்றிய உங்கள் கணிப்பு என்ன?**

ஈபிடிபி செய்த இணக்க அரசியலுக்கும் சம்மந்தன் தலமையில் கூட்டமைப்புச் செய்யும் இணக்க அரசியலுக்கும் ஒரு முக்கிய வேறுபாடு உண்டு. ஈபிடிபியினரின் இணக்க அரசியலை இணக்க அரசியல் என்று சொன்னதால் மக்கள் மத்தியில் பெரும்பான்மை ஆதரவு இருக்கவில்லை. கூட்டமைப்பு ஆதரவை தக்க வைப்பதற்காக பொய்களுடன் பூசி மொழுகி இணக்க அரசியலைச் செய்கிறது.

எதிர்கட்சிதலைவர் என்பதற்கு எந்த அர்த்தமும் இல்லாதபடி ஐ.தே.க பொம்மையாக இயங்கி வருகிறார் சம்மந்தன் என்பது மிகையான கூற்றில்லை. தேசிய அரசு என்ற பெயரில் எல்லா ருமாக கூட்டுச் சேர்ந்து கும்மாளம் அடிக்கிறார்கள். மக்களின் சேவைகளை சூறையாடுவதற்கான அனைத்து ஆயத்தங்களும் செய்யப்படுகின்றன. மின்சாரம் தவிர அனைத்தையும் தனியார் கையில் மாற்றும் திட்டத்துடன் ஐ.தே.க மும்முரமாக ஈடுபட்டு வருவது ஒரு தேசிய ரகசியம். இதுக்கு எதிராக கூட்டமைப்பு ஒரு மூச்சுக்கூட விடவில்லை. வெள்ளை வானிலும் நீல வானிலும் ஆட்கள் கடத்தப்படுவது தொடர்கிறது. கேட்பார் இல்லை. அரசியற் கைதிகளை பற்றி எவ்வளவு அக்கறையோடு ஐயா இருக்கிறார் என்பதற்கான வீடியோ விளம்பரம் இணையத்தில் திரிவதைப் பார்த்திருப்பீர்கள்.

கூட்டமைப்பு பொய் சொல்வதையும் மக்களுக்கு வீண் நம்பிக்கை ஏற்படுத்துவதையும் நிறுத்த வேண்டும். மக்கள் உரிமைக்கான போராட்ட அரசியலை அவர்கள் ஒருபோதும் முன்னெடுக்கப் போவ தில்லை. நாம் சிந்திக்க வேண்டும். விழிப்படைய வேண்டும். ஒற்றுமை என்ற பெயரில் எங்கள் ஆதரவை கேட்டுக் கொண்டு எங்கள் உரிமைகளை விற்கிறார்கள் அவர்கள். இதற்கு எதிராக நாம் எமக்கான சக்தியை திரட்ட முன்வர வேண்டும்●

# மங்கையற்கரசி அமிர்தலிங்கத்தின் இறுதிப் பயணம்! கூட்டணித் தலைமைப் பொறுப்பை அமீரின் புதல்வர்கள் ஏற்க வேண்டுகோள்!!

தமிழீழ விடுதலைப் போராட்டத்தினை எழுச்சியடையச் செய்த காலம் சென்ற மங்கையற்கரசி அமிர்தலிங்கம் அவர்களின் இறுதி நிகழ்வுகள் மார்ச் 20, 2016 இல் சிறப்பாக நடைபெற்றது. உறவுகள், நட்புகள் அவற்றுக்கும் மேலான முரண்ட்ட அரசியல் கருத்தியலைக் கொண்ட அரசியல் ஆர்வலர்கள் என ஆயிரத்துக் கும் மேற்பட்டவர்கள் மங்கையற்கரசியின் இறுதி நிகழ்வில் கலந்து கொண்டு தங்கள் இறுதி அஞ்சலியைத் தெரிவித்தனர்.

மங்கையற்கரசி அமிர்தலிங்கத்தின் நினைவுகளில் கலந்து கொண்டவர்கள் பலருமே அவரை தனிப்பட்ட ஒரு தாயின், பெண்ணின் மறைவாக அதனைப் பார்க்கவில்லை. அமிர்த லிங்கம் தம்பதிகளின் புதல்வர்களான காண்டீபன், பகீரதன் ஆகியோரது இறுதி அஞ்சலி பேச்சுக்கள் கூட அவரை ஒரு அரசியல் பெண்ணாகவே காட்டி நின்றது.



இறுதி நிகழ்வில் தொலைபேசியூடாக தனது இரங்கல் உரையை வழங்கிய தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைவர் வீ.ஆனந்தசங்கரி கட்சியின் தலைமைப் பொறுப்பை பொறுப்பானவர்களின் கைகளில் ஒப்படைத்து கட்சியை பாதுகாக்க தான் தயாராக இருப்பதாக அந்நிகழ்வில் தெரிவித்தார். அதன் பின் லண்டன் வந்த வீ. ஆனந்தசங்கரி, காலம் சென்ற அமிர்த லிங்கத்தின் புதல்வர்களான காண்டீபன், பகீரதன் உடன் அவர் களின் தாயின் 31வது நாள் நினைவில் கலந்துகொண்டும் இருந்தார்.

தமிழர் விடுதலைக் கூட்டணிக்கு அமிர்தலிங்கம் குடும்பத்தில் இருந்து ஒருவர் வரவேண்டும் என்றும் அப்படி ஒருவர் வருவதனூடாக மட்டுமே தமிழர் விடுதலைக் கூட்டணியை மீளுயிர்ப்பிக்க முடியும் என்றும் பலர் கருதுகின்றனர். பகீரதன் குடும்பஸ்தர் என்ற காரணத்தினால் அவரால் இலங்கையில் சென்று அரசியலை மேற்கொள்வதற்கான வாய்ப்புகள் குறைவாகவே உள்ளது. ஆனால் மூத்தவரான காண்டீபன் அவ்வாறான குடும்ப பிணைப்புகள் இல்லாதவர் என்பதால் தாயகம் சென்று தன் தந்தையின் வழியில் கட்சியை முன்னெடுக்க முன்வரலாம். அவ்வாறு வரும்போது இன்றைய அரசியல் சூழலுக்கு முன் அனுபவமில்லாதபடியால் பல சவால்களை எதிர் கொள்ள அவர் தயாராக இருக்க வேண்டும் என அக்குடும்பத்தினரை நன்கு அறிந்த அரசியல் ஆர்வலர்கள் கருதுகின்றனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முன்னாள் எம்.பி சந்திரகுமார் ரிஎன்ஏ இல் இணையலாம்!

ஈபிடிபி இல் இருந்து ஏப்ரல் 17இல் வெளியேறிய முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் சந்திரகுமாரிற்கு ரிஎன்ஏ இல் இடம் கொடுக்கப்படுவதற்கே அதிக வாய்ப்புகள் இருப்பதாக ரிஎன்ஏ இற்கு நெருக்கமான வட்டாரங்கள் தேசம் சஞ்சிகைக்கு தெரிவிக் கின்றன. மு.சந்திரகுமார் ஈபிடிபி இல் இருந்த போதும் ரிஎன்ஏ தொடர்பாகவோ அல்லது அதன் நாடாளுமன்ற உறுப்பினர்கள் தொடர்பாகவோ ஒரு போதும் காட்டமான விமர்சனங்களை வைக்கவில்லை என்றும் எஸ்.சிறீதரனும் அவரும் கிளிநொச்சி யைத் தளமாகக் கொண்டு செயற்பட்டதால் இருவருக்கும் இடையே மட்டுமே போட்டிநிலை காணப்பட்டது என்றும் அரசியல் அவ்வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

மேலும் மற்றைய ரிஎன்ஏ உறுப்பினர்களோடு மு.சந்திரகுமார் பரஸ்பர உறவையே கொண்டிருந்தார் என்பதை மு.சந்திர குமாரிற்கு நெருக்கமானவர்கள் தேசம் சஞ்சிகைக்குத் தெரிவிக் கின்றனர். தனது வெளியேற்றத்திற்கு தமிழர்களின் உரிமைக் கோரிக்கையை காரணம் காட்டியதன் மூலம் மு. சந்திரகுமார் பெரும்பாலும் ரிஎன்ஏயை மனதில் இருத்தியே அம்முடிவுக்கு வந்திருக்கலாம் என்ற எண்ணம் அரசியல் வட்டாரங்களால் உணரப்பட்டு உள்ளது.

தமிழ் தேசியக் கூட்டமைப்பின் முக்கிய கட்சிகளான தமிழரசுக் கட்சியோ தமிழீழ விடுதலை இயக்கமோ மு.சந்திரகுமாரை உள்வாங்குவதில் எவ்வித பிரச்சினையும் இருக்காது என தமிழீழ விடுதலை இயக்கத்தின் முக்கியஸ்தர் ஒருவர் தேசம் சஞ்சிகைக்கு தெரிவித்தார்.

முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சந்திரகுமார் மக்கள் செல்வாக்கு உள்ள ஒருவர் என்பதையும் மக்களுக்காக பல செயற்பாடுகளைச் செய்த செயற்திறன் மிக்கவர் என்பதையும் கட்சி பேதமின்றி அனைவரும் ஏற்றுக்கொள்வது குறிப்பிடத் தக்கது.

# ஈலிங் ஆலயத் தலைவர் பேசுவதுடன் நில்லாது செயலிலும் காட்ட வேண்டும்

தமிழ் தேசியக் கூட்டமைப்பின் பிரித்தானி யக் கிளைத் தலைவர் ஆர்.டீ.ரட்ணசிங்கம் வடக்கு கிழக்கில் உள்ள மாணவர்க ளுக்கு ஆங்கிலக் கல்வியின் முக்கியத் துவத்தை ஆச்சுவே உயர்வாசற்குன்று முருகன் ஆலயத்தில் இடம்பெற்ற கருத் தரங்கில் ஏப்ரல் 24 அன்று சுட்டிக்காட்டி னார். அதற்குமுன்பேசிய கெ.சிவாப்பிள்ளை வட மாகாணத்தில் கணணிக் கல்வியின் முக்கியத்துவத்தை குறிப்பிட்டு விட்டு அங்கு 12 கணணி நிலையங்கள் மூடப்பட்டதைச் சுட்டிக்காட்டி இருந்தார்.

ஆர்.டீ.ரட்ணசிங்கம் ரிஎன்ஏ பிரித்தானியக் கிளையின் தலைவர் மட்டுமல்ல லண்ட னில் அதிக வருமானத்தை ஈட்டுகின்ற ஈலிங் கனகதுர்க்கை அம்மன் ஆலய நிர்வாகத்தின் தலைவரும் கூட. ஆலயம் தாயகத்திற்கு மூன்றில் ஒரு பங்கு நிதியை ஆவது அபிவிருத்தி நடவடிக்கைகளுக்கு வழங்க வேண்டும் என ஆலய யாப்பு கூறுகின்றது. அப்படி இருந்தும் இதற்கு முன்னைய நிர்வாகம் அம்மன் ஆலயத் ணதினால் உருவாக்கப்பட்ட 7 வரையான கணணி மையங்களை மூடியது. ஆதற்கு மாற்றீடாக கணணி மையங்கள் திறக்கப் படும் என்ற போதும் அதற்கான எவ்வித முயற்சிகளும் எடுக்கப்படவில்லை.

பொதுச் சபையால் ஏற்றுக் கொள்ளப்பட்ட அபிவிருத்தி நடவடிக்கைகளுக்கும் அவர் கள் நிதியை ஒதுக்க முன்வரவில்லை. நட்பு வட்டங்களிற்கு உள்ளேயே நிதி உதவித் திட்டங்கள் மேற்கொள்ளப்படு கிறது.

உதவி அமைப்புகளுக்கு எந்த அடிப்படை யில் நிதி வழங்கப்படுகிறது எந்த அடிப் படையில் நிராகரிக்கப்படுகின்றது போன்ற விபரங்கள் ஒளிவுமறைவாகவே பேணப் பட்டு வருவதாக ஆலயத்தின் பொதுச் சபைக் கூட்டங்களில் குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்படுகின்றது. லிற்றில் எய்ட் அமைப்பு வன்னியில் கணணி, தையல், ஆங்கில பேசுதிறன் வகுப்புகளை நடாத் துவதற்கு ஆலயம் நிதியுதவி வழங்க வேண்டும் என்று ஓராண்டுக்கு முன் பொதுச்சபையில் தீர்மானம் எடுக்கப்பட்ட போதும் இது வரை நிதியை வழங்க நிர்வாகம் முன் வராததால் தையல் ஆங்கில பேசுதிறன் வகுப்புகள் இடை நிறுத்தப்பட்டு கணணி வகுப்புகள் மட்டும் கிடைக்கின்ற நிதி வழங்கலுக்கு அமைய நடாத்தப்படுகிறது என அவ்வமைப்பினர் தெரிவிக்கின்றனர்.

மாணவர்களின் எதிர்காலத்தில் அக்கறை யாக கருத்து வெளியிடும் தலைவர் ஆர். டி.ரட்ணசிங்கம் இவ்விடயங்களில் செயற் திறனுடன் ஈடுபட்டு தனது தலைமையில் உள்ள ஈலிங் கனகதுர்க்கை அம்மன் ஆலயத்தின் துணையுடன் தாயகத்தின் பிற்படுத்தப்பட்ட பிரதேசங்களில் கணணி மற்றும்ஆங்கிலபேச்சுதிறன்வகுப்புகளை அம்மன் ஆலயத்தின் பெயரில் இயக்க வேண்டும் என ஆலய உறுப்பினர்கள் பலரும் எதிர்பார்க்கின்றனர்.

# இனவாத யாப்பு சீர்திருத்தத்தை ஆலயம் கைவிட்டது!

இலங்கை இந்துக்கள் தவிர்ந்த ஏனைய இன இந்துக்கள் ஆலயத்தின் உறுப் பினராகும் வாய்ப்பை இல்லாமற் செய்யும் யாப்பு சீர்திருத்தம் ஒன்று அண்மையில் ஆலய நிர்வாகத்தினால் அதன் உறுப்பி னர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டு இருந் தது.

இதற்குஎதிராகமுன்னாள்ஆலயநிர்வாகத் தலைவர் எஸ். கருணைலிங்கம் உட்பட பலர் எதிர்ப்பு தெரிவித்ததைத் தொடர்ந்து அந்த இனவாத யாப்புச் சீர்திருத்தம் கைவிடப்பட்டது.

ஆலய சிறிரங்கன் தலைமையிலான அறங்காவலர்களும் சட்டத்தரணியான ஆர்.டி. ரட்ணசிங்கம் தலைமையிலான ஆலய நிர்வாக சபையும் முற்றிலும் இனவாதமான ஒரு சீர்திருத்தத்தை எவ் வாறு முன்வைத்தனர் என்பது பலருக்கும் ஆச்சரியத்தை ஏற்படுத்தி இருந்தது.

இறுதியில் ஆலய அறங்காவல் சபையும் நிர்வாக சபையும் தங்கள் தவறை திருத்திக்கொண்டதில் ஜனநாயகத்திற்கும் மனித உரிமைகளுக்கு மதிப்பளிக்கின்ற பலரும் வரவேற்றுள்ளனர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொலிஸ் அதிகாரி கொலை செய்யப்பட்டு குப்பைத் தொட்டியில் வீசப்பட்டார்!

பிரித்தானியாவில் பொலிஸ் அதிகாரி ஒருவரை கொடூரமாக கொன்று அவரது உடலை துண்டு துண்டாக வெட்டி குப்பை தொட்டியில் வீசிய நபரை பொலிசார் அதி ரடியாக கைது செய்துள்ளனர்.

தெற்கு லண்டன் நகரை சேர்ந்த Gordon Semple (59) என்பவர் பொலிஸ் அதிகாரி யாக பணிபுரிந்து வந்துள்ளார். இவர் ஒரு ஓரினச்சேர்க்கையாளர்.

இதே பகுதியில் இத்தாலி நாட்டை சேர்ந்த ளுவநகயழெடீசணைணணை (49) என்ற நபர் சமூக ஆர்வலராக பணிபுரிந்து வந் துள்ளார்.

இந்நிலையில், கடந்த ஏப்ரல் 1 முதல் 7ம் திகதிக்குள் இவ்விருவரும் சமூக வலைத்தளம் மூலமாக சந்தித்ததாக கூறப்படுகிறது. அதே சமயம், ஏப்ரல் 1ம் திகதி முதல் பொலிஸ் அதிகாரி வீட்டிற்கு திரும்பவில்லை என புகாரும் பதிவு செய்யப் பட்டது.

பொலிசார் அவரை தீவிரமாக தேடி வந்த நிலையில், இத்தாலி நாட்டை சேர்ந்த நபரின் அடுக்குமாடி குடியிருப்பில் இருந்த குப்பை தொட்டியில் இருந்து தாங்க முடியாத துர்நாற்றம் வந்ததால் பொலிசார் அதனை சோதனை செய்துள்ளனர்.

குப்பை தொட்டிக்குள் காணாமல் போன தாக புகார் கூறப்பட்ட பொலிஸ் அதிகாரி கொலை செய்யப்பட்டு, அவரது உடல் துண்டு துண்டாக வெட்டி வீசப்பட்டுள் ளதை பொலிசார் கண்டுபிடித்தனர்.

உடல் உறுப்புகளை சேகரித்து பிரேத



பரிசோதனைக்கு அனுப்பிய பொலிசார், இந்த கொலைக்கு பின்னணியில் உள்ள தாக சந்தேகிக்கப்படும் அந்த இத்தாலி நபரை கைது செய்து 13-04-2016 அன்று நீதிமன்றத்தில் நிறுத்தினர்.

மேலும், அந்த நபர் மீது கொலை வழக் கும் பதிவு செய்யப்பட்டுள்ளது. குற்றம் நிரூபிக்கப்பட்டால் அவருக்கு ஒக்டோபர் மாதத்தில் தண்டனை விதிக்கப்படும் என தகவல்கள் வெளியாகியுள்ளன.

# இலங்கைக்கும் இந்தியாவிற்கிடையே பாலம் அமைப்பது குறித்து விரைவில் உடன்படிக்கை!



இலங்கை மற்றும் இந்தியாவிற்கு இடையில் பாலமொன்றை நிர்மாணிப்பது தொடர்பான உடன்படிக்கை, விரைவில் நிறைவு செய்யப்பட உள்ளதாக இந்திய மத்திய போக்குவரத்துத்துறை அமைச்சர் நிதின் கட்காரி தெரிவித்துள்ளார்.புதுடெல்லியில், ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் இந்த விடயத்தைக் குறிப்பிட்டதாக, இந்திய ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

இந்த சந்திப்பின் போது, இந்தத் திட்டம் குறித்து தற்போது பரிசீலனை செய்யப்பட்டு வருவதாகக் கூறியுள்ள அவர், இதுவரையில் இத்திட்டம் பூரணப்படுத்தப்படவில்லை எனவும் குறிப்பிட்டுள்ளார்.


இரு நாடுகளுக்கும் இடையில் பாலம் அமைப்பது குறித்து, இலங்கை ஜனாதிபதி மற்றும் பிரதமருடன் பேச்சுவார்த்தைகள் நடத்தப்பட்டுள்ளதாகவும் அமைச்சர் கூறியுள்ளார்.

இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையில் பாலம் அமைக்கும் திட்டம் குறித்து ஆசிய அபிவிருத்தி வங்கியும் பரிந்துரைகளை முன்வைத்துள்ளதாகவும் இந்திய ஊடகங்கள் குறிப்பிட்டுள்ளன.

# வாழ்க்கைச் செலவை குறைக்காவிட்டால் தோல்வி நிச்சயம் - அரசிற்கு எச்சரிக்கை!

பொதுமக்களின் வாழ்க்கைச் செலவுக ளைக் குறைக்க உடனடியாக நடவடிக்கை கள் எடுக்கப் படாவிட்டால் இனிவரும் தேர்தல்களில் தோல்வி நிச்சயம் எனப் பிரதி அமைச்சர்கள் சிலர் ஜனாதிபதிக்கும் பிரதமருக்கும் சுட்டிக்காட்டியுள்ளனர்.

குறுகிய காலத்தில் மக்களின் வாழ்க்கைச் சுமை பெருமளவு அதிகரித்துள்ளது. அவர் களின் மனதில் கனன்று கொண்டிருக்கும் தீக்காயங்கள் எந்நேரமும் பற்றி எரியக் கூடும். சாதாரண, நடுத்தர வர்க்கத்தினர் அன்றாட வாழ்க்கைச் செலவுகளை சமா ளிக்க முடியாமல் திணறுகின்றனர்.




இந்த விடயத்தில் அரசு அவர்களது அதிருப்தியை சம்பாதித்துள்ளது. இதன் பிரதிபலன் இனிவரும் தேர்தல்களில் நிச்சயமாகப் பிரதிபலிக்கும் என்பதை உணர்ந்து அரசு உடனடியாக வாழ்க்கைச் செலவுகளைக் குறைக்க நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என்று சுட்டிக் காட்டப்பட்டுள்ளது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காங்கேசன்துறை சீமெந்து தொழிற்சாலையை மீள இயக்க நடவடிக்கை!

காங்கேசன்துறை சீமெந்து தொழிற்சாலையை மீள இயக்குவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக வர்த்தக வாணிப அமைச்சர் ரிசாட் பதியுதீன் தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணத்திற்கு விஜயம் மேற்கொண்ட அமைச்சர் யாழ். மாவட்ட செயலகத்தில் காங்கேசன்துறை சீமெந்து தொழிற்சாலை யினை மீள இயக்குவது குறித்து அதிகாரிகளை சந்தித்து கலந்துரையாடினார்.

இந்த சந்திப்பின் நிறைவில் ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த ரிசாட் பதியுதீன்,

"காங்கேசன்துறை பகுதியில் சுண்ணக்கல் அகழ்வது தடை செய்யப்படும். இந்தப் பிரதேசத்து இளைஞர் யுவதிகள்தான் சீமெந்து தொழிற்சாலையில் வேலைக்கு உள்வாங்கப் படுவார்கள். வடமாகாணத்



தில் முதலீடு செய்யவரும் தனியார் முதலீட்டாளர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படவுள்ளது. இந்த பிரதேச பொருளாதார மேம்பாட்டிற்கும், இளைஞர் யுவதிகளின் வேலைவாய்ப்பினை வழங்குவதற்காகவும் சீமெந்து தொழிற்சாலை ஆரம்பிக்கப்படவுள்ளது.

மத்திய மாகாண சுற்றாடல் அமைச்சின் அறிக்கைக்குப் பின்னர் இது ஆரம்பிக்கப்படும். 1990ம் ஆண்டு மூடப்பட்ட சீமெந்து தொழிற்சாலை மட்டுமன்றி, பரந்தன் இராசாயன தொழிற்சாலை யினையும் மீள ஆரம்பிப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப் படவுள்ளதுடன், ஆனையிறவு உப்பளத்தினையும் மீளஆரம்பிப்பதற்கு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவும், பிரதமர் ரணில் விக்கிரம சிங்கவும் நடவடிக்கை மேற்கொண்டு வருகின்றார்கள்.

20 வீதமான உப்பினை வெளிநாட்டில் இருந்து இறக்குமதி செய்து வருகின்றோம். ஆனால், இந்த வருடம் 8 ஆயிரம் மெற்றிக்தொன் உப்பினை உற்பத்தி செய்துள்ளோம். அதேவேளை, அடுத்த வருடம் 32 ஆயிரம் மெற்றிக் தொன் உப்பினை உற்பத்தி செய்வதற்கு தீர்மானித்து வருகின்றோம்" என்றார்.

# சமஷ்டி குறித்து பேசவும் தயாரில்லை – அமைச்சர் மஹிந்த சமரசிங்க

சமஷ்டி ஆட்சிமுறை பற்றி பேச்சு நடத்துவதற்கு கூட ஆளும் பிரதான கூட்டணிக் கட்சிகளில் ஒன்றான ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி தயாரில்லை என்று அக்கட்சி கொழும்பில் நடத்திய ஊடகவியலாளர் சந்திப்பில் தெரிவிக்கப் பட்டுள்ளது.



சமஷ்டி ஆட்சிமுறை பற்றி பேசுவதற்கு நாம் தயாராக இல்லை. அதனால், நாம் வென்றெடுத்துள்ள அரசியல், பொருளாதார ஸ்திரத்தன்மை, ஸ்திரமற்ற நிலைக்குத்தான் செல்லும் என்று சுதந்திரக் கட்சியைச் சேர்ந்த அமைச்சர் மஹிந்த சமரசிங்க குறிப்பிட்டுள்ளார்.

அரசியலமைப்பின் 13-ம் திருத்தம் மூலம் மாகாண சபைகளுக்கு வழங்கி நடைமுறைப்படுத்தப் படாமல் இருக்கின்ற அதிகாரங்களை வழங்குவது பற்றி பேச்சு நடத்தினாலும் சமஷ்டி முறைக்கு ஒருபோதும் தமது கட்சி ஒத்துழைப்பு அளிக்காது என்றும் மஹிந்த சமரசிங்க கூறினார்.

மாகாண சபைகள் தீர்மானங்களை நிறைவேற்றி இங்கு அனுப்ப முடியும். ஆனால், எமது தரப்பிலிருந்து எந்தவிதமான ஒத்துழைப் பும் கிடைக்காது. வடக்கு-கிழக்கு மாகாணங்களை ஒன்றிணைப்பதற்கும் சுதந்திரக் கட்சி ஆதரவளிக்காது என்றும் சமரசிங்க கூறினார்.

# வடக்கு கிழக்கு இணைப்பு அவசியமில்லை - முஸ்லிம் காங்கிரஸ்

வடக்கையும் கிழக்கையும் ஒன்றிணைப்பதற்கான எந்தவொரு அவசியமும் ஏற்படவில்லை என்றும் அதற்கான தேவையுமில்லை என்றும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் கருத்து வெளியிட்டுள்ள கிழக்குமாகாண சுகாதார அமைச்சர் மொஹமட் நஸீர், வடக்கையும் கிழக்கையும் ஒன்றிணைப்பதென்பது, தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கத்தின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனின் முக்கிய குறிக்கோளாகும் என்றார். இருப்பினும், வடக்கிலுள்ள பொது மக்களுக்கோ அல்லது கிழக்கைச் சேர்ந்த மக்களுக்கோ



அவ்வாறானதொரு தேவையொன்று இது வரையில் ஏற்படவில்லை என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இதேவேளை, இது தொடர்பில் கருத்து வெளியிட்ட மு.காவின் பொதுச் செயலாளர் ஹசன் அலி, தமிழ் பேசும் மக்களுக்காக தனியானதொரு மாகாணம் அமைய வேண்டும் என்று வடமாகாண சபையினால் நிறைவேற்றப்பட்டுள்ள யோசனையை, அரசியல் பிரச்சினையாக மாற்றிக் கொள்ள வேண்டிய தேவையில்லை என்று தெரிவித்தார்.

எந்தவோர் அரசியல் கட்சிக்கோ அல்லது அமைப்புக்கோ, தனது யோசனையை முன்வைக்கக் கூடிய முழுச்சுதந்திரம் இருக்கின்றது என்றும் சுட்டிக்காட்டி யுள்ளார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# A KIND, POLITE AND SINCERE REQUEST TO TRUSTEES OF SHRI MAHALAKSMI TEMPE EASTHAM

April 24, 2016

Dear Sir/Madam,

NEW TEMPLE

We learned the construction work of the new temple will be over soon and the KUMBHABISHEHAM will be held in July 2016. This is great news for the entire Hindu population in UK and especially for the Hindus in east London .We all are eagerly waiting to see another big temple with Rajakopurram in Newham.

In the meantime we have great concern about your temple calendar. I am sure your temple authorities must have bought this copy from a shop in Chennai. We all know this panchngam is not calculated for your temple use, also this panchagam is calculated according to Thanchavoor Mathiasthanam. Even if you are using this panchangam in Mathurai the calculations will change. It is completely wrong to use this panchangam in London.

Dear Trustees, you are spending millions to build a huge, beautiful temple and most importantly your temple will be built by proper Aachaariar. There is no doubt the Aachaariar who is in charge will follow aahama method to build your temple. If you are building your temple according to aahamam why can't you follow your fasting days and special days corrects. You all know very well that in Hinduism the fasting days and Special days are correspondence to Sun rise and set times in each country. By using a Indian Panchangam which was calculated according to Indian Sun rise and set times; do you realise that your temple is not observing Pirathosa Viratham during the Pirathosa Kaalam.

Dear Trustees there are 32 Temples in the UK some are very small temples but they are spending money for their calendar calculations which are based on the UK Sun rise and set times. A kind and sincere request to the trustees, we are going to have a huge and beautiful temple in the middle of the Eastham High Street, please be kind enough to follow the UK time to calculate your fasting and special days.

We all know Mahlaksmi temple devotees are well educated and you don't need to worry about any changes and the devotees will be happier, that you are following the correct fasting days. Also by following correct calculation you are helping the younger generation who are very confused about the different day's celebration of special days. We thought a year ago, the trustees of Mahalakshmi temple have decided to use a Vaikia Panchangam which will calculated (in India) according to the Sun rise and set time. We kindly request you follow your decision for the sake of Hinduism and Eastham Hindu Community.

Yours faithfully
Hindu Devotees



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடக்கு, கிழக்கு இணைப்பு முஸ்லிம்களின் சம்மதத்துடனேயே நடைபெற வேண்டும் - சுமந்திரன்



**வடக்கு** - கிழக்கு இணைப்பு என்பது முஸ்லிம்களின் சம்மதத்துடன்தான் நடக்க வேண்டும் என்று தமிழ் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளரும் நாடாளு மன்ற உறுப்பினருமான எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்தார்.

ஒற்றையாட்சி முறைமை, நிறைவேற்று அதிகாரமிக்க ஜனாதிபதி முறைமை மற்றும், நாடாளுமன்றத்திற்கு உச்ச அதிகாரம் போன்றவை நீக்கப்பட்டு, முழுமையான சமஷ்டி முறைமை யின் கீழ் வழங்கப்படும் அதிகாரப் பகிர்வுதான் அர்த்தமுள்ள தீர்வாக அமையும். தற் போதைய அரசமைப்பைக் கொண்டு இதைச் செய்ய முடியாது. ஆகவே, புதிய அரசமைப்புத் தேவைப்படுகின்றது என வும் அவர் குறிப்பிட்டார்.

புதிய அரசமைப்பு தொடர்பில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் ஏற்பாடு செய்திருந்த முழுநாள் செயலமர்வு மட்டக்களப்பு ஈஸ்ட் லகூன் ஹோட்டலில் கடந்த 21ம் திகதி வியாழக்கிழமை நடைபெற்றது. இதில் விரிவுரையாளராகக் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் மேற்கண்ட வாறு கூறினார். அவர் தனது உரையில் மேலும் தெரிவிக்கையில்:

"அரசமைப்பின் ஆறாவது திருத்தம் காரணமாக தமிழர் பிரதிநிதிகள் இழக்கப் பட்டபோதும், 13ஆவது திருத்தச் சட்டம் ஊடாக அது ஓரளவு நிவர்த்தி செய்யப் பட்டது. ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் அந்த இடைவெளியை நிவர்த்தி செய்தது. 13ஆவது திருத்தச் சட்டத்தில் நான்கு விடயங்களை நீக்கும் முயற்சிக்கு ரவூப் ஹக்கீம் எதிர்ப்புத் தெரிவித்தார். அதை நான் வரவேற்கிறேன்.

அதிகாரம் அர்த்தமுடையதாகப் பகிரப்பட வேண்டும் என்ற நிலைப்பாட்டிலும் அரசமைப்பு தொடர்பான நிலைப்பாட்டிலும் தமிழ் தேசியக் கூட்டமைப்பும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸிம் ஒன்றிணைந்து நிற்கின்றன. இந்த நிலைப்பாடுதான் எம் இரண்டு இனங்களுக்கும் வெற்றியைக் கொண்டு வரும். இலங்கையால் உருவாக்கப்பட்ட இரண்டு அரசமைப்பி லும் தமிழர்கள் புறக்கணிக்கப்பட்டார்கள். இதனால்தான் யுத்தமே உருவானது. பெரும்பான்மைதான் ஆள வேண்டும் என்பதுதான் ஜனநாயகம் என்றாலும் கூட, பேரினவாத ஆட்சியாக அது இருக்க முடியாது.

இந்தப் பேரினவாத ஆட்சியைக் கொண்டு செல்வதற்காகத்தான் 13ஆவது திருத்தச் சட்டமும் கொண்டுவரப்பட்டது. இதனால் தான் மாகாணசபையும் தோல்வி யடைந்தது. மாகாண சபையின் அதிகாரம் ஆளுநரிடம்தான் உண்டு. மக்களால் தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதிகளிடம் இல்லை. மாகாணசபை உறுப்பினர் களுக்கு வாகனங்களும் தனிஅறைகளும் ஒதுக்கிக் கொடுத்து சில விடயங் களை நிறைவேற்றிக் கொள்ளும் வேலையைத் தான் இந்த மாகாண சபை செய்கின்றது. ஆகவேதான், இந்த அரசமைப்பு மாற்றப்பட வேண்டியுள்ளது.

தற்போதைய அரசமைப்பு ஒரு போதும் அதிகாரப் பகிர்வை நோக் கிச்செல்லாது. அது பேரினவாத ஆட்சியையே மேலும் விஸ்தரிக் கும். ஒற்றையாட்சி, நிறைவேற்று அதிகாரமிக்க ஜனாதிபதி முறைமை மற்றும் நாடாளுமன்றத்திற்கு அதிகாரத்தைக் குவித்தல் போன் றவை ஒருபோதும் அதிகாரப் பகிர்வை வழங்காது.


நிறைவேற்று அதிகாரமிக்க ஜனா திபதி முறைமை சிறுபான்மை இனமக்களுக்கு சாதகமானது என சிலர் கருதுகின்றனர். இரண்டு பிரதான கட்சிகளும் ஜனாதிபதி பதவிக்குப் போட்டியிடுவதால் அதைத் தீர்மானிக்கும் சக்தியாக தமிழர்கள் இருப்பர். அப்போது அந்த ஜனாதிபதி தமக்கு சாதகமாக இருப்பார் என சிலர் கருதுகின்றனர். அது பிழையானது. தேர்தல் முடிந்தால் எல்லாம் முடிந்துவிடும். சிங்கள வர்கள் பாதகமாக நினைக்கும் ஒன்றை ஜனாதிபதி தமிழர்க ளுக்காகச் செய்ய மாட்டார்.

ஆகவே, அதிகாரப் பகிர்வு உரியமுறையில் அமைய வேண்டும் என்றால் நிறைவேற்று அதிகாரமிக்க ஜனாதிபதி முறைமை ஒழிக்கப்பட்டே ஆக வேண்டும். ஒரு தனி மனிதனின் கைகளில் அதிகாரம் குவிந்து கிடக்கும் போது அது அதிகாரத்தைப் பகிர்வதற்குத் தடையாகவே இருக்கும். அதேபோல், அந்த அதிகாரத்தை நாடாளு மன்றத்தில் குவித்தாலும் அது சிக்கலான விடயமே. அதுவும் அதிகாரப்பகிர்வுக்கு உதவாது. ஓரிடத்தில் அதிகாரம் குவிந்து கிடப்பதும் அதிகாரப் பகிர்வு ஆகாது. அர்த்தமுள்ள அதிகாரப் பகிர்வுக்கு முழுமை யான தடையாக இருப்பது ஒற்றையாட்சி முறைமை தான். ஒற்றையாட்சி முறைமை மற்றும் நிறைவேற்று அதிகாரமிக்க ஜனாதிபதி முறைமை போன்றவை நீக்கப்பட்டு முழுமையான சமஷ்டி முறை மையின் கீழ் வழங்கப்படும் அதிகாரப் பகிர்வுதான் அர்த்தமுள்ள தீர்வாக அமையும்" என்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பயங்கரவாத தடைச்சட்டம் உடனடியாக நீக்கப்பட மாட்டாது!



பயங்கரவாத தடைச்சட்டத்தை அகற்ற வேண்டும் என்றால் அதற்கு இணையான அல்லது, நாட்டைப் பாதுகாக்கக்கூடிய சட்டமொன்று உருவாக்கப்பட வேண்டும். அவ்வாறான புதிய பலமான சட்டம் உருவாக்கப் படும்வரை பயங்கரவாதத் தடைச்சட்டம் நீக்கப்படாது என, பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கருணாசேன ஹெட்டியாராச்சி தெரிவித்துள் ளார்.

பயங்கரவாத தடைச்சட்டம் அகற்றிக் கொள்ளப்படுமா என்று ஊடகவியலாளர் ஒருவர் எழுப்பிய கேள்விக்குப் பதில ளிக்கையிலேயே அவர் இத னைக் கூறினார்.

நீதியமைச்சுடன் வெளிவிவகார அமைச்சு இணைந்து புதிய சட்டமொன்றை உருவாக்கும் பணிகளில் ஈடுபட்டுள்ளது. அதன் முதற்கட்ட வரைபுப் பணிகள் தற்போது பூர்த்தி யடைந்துள்ளன. பயங்கரவாத தடைச்சட்டத்துக்குப் பதிலாக புதிய சட்டத்தை உருவாக்கத் தேவையான நிபுணத்துவப் பயிற்சி மற்றும் தொழில்நுட்பப் பயிற்சி என்பவற்றுக்காக ஐக்கிய நாடுகளுடைய ஒத்துழைப்பும் பெறப்பட்டுள்ளது.

யுத்தம் நிறைவடைந்தாலும் பொருளாதார, தொழில்நுட்ப ரீதியாக பயங்கரவாதம், சர்வ தேசத்தில் தலையெடுத்துள்ளது. சாதாரண சட்டமொன்றை உரு வாக்கி, நாடாளுமன்ற அனு மதியுடன் அமுலாக்க 8 மாதங்கள் வரை செல்லுகின்ற நிலையில், நாட்டின் பாதுகாப்புக் கான பாரிய சட்டத்தை உரு வாக்க நீண்டகாலம் எடுக்கும். அவசரமாக அரைகுறையான சட்டத்தை உருவாக்க முடியாது. அதனைப் போல, அவசரப் பட்டு பயங்கரவாத தடைச் சட்டத்தை நீக்கி, நாட்டின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் ஏற் பட இடமளிக்க முடியாது என் றும் அவர் மேலும் கூறினார்.

# காலியில் கைதான முன்னாள் விடுதலைப்புலி சந்தேக நபர் 4 கொலைகளுடன் தொடர்புடையவராம்!

அண்மையில் காலியில் விடுதலைப்புலி களின் முன்னாள் உறுப்பினர் என்று கூறப்படும் நபர் ஒருவர் கைது செய்யப் பட்டார் அவர்நான்கு கொலை களுடன் தொடர்புடைவர் என சந்தேகிக்கப்படு கிறது.



பொலிஸ் விஷேட அதிரடிப்படையின் புலனாய்வு அதிகாரிகளுக்கு கிடைக்கப் பெற்ற தகவலின் அடிப்படையில் மேற் கொள்ளப்பட்ட சுற்றி வளைப்புக்களின் போதே இவர் கைது செய்யப்பட்டார். சந்தேகநபர் வசம் இருந்து துப்பாக்கி மற்றும் எட்டு ரவைகள், மகசின் ஒன்று மற்றும் கையடக்கத் தொலைபேசிகள் மூன்றும் மீட்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இவர் கொழும்பைச் சேர்ந்த 29 வயதான ஒருவர் எனத் தெரியவந்துள்ளதோடு, நான்கு கொலைச் சம்பவங்கள் தொடர்பில் தேடப்பட்டு வந்தவர் எனவும் பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

சந்தேகநபர் முன்னாள் விடுதலைப்புலி கள் இயக்க உறுப்பினர் எனவும், கடந்த காலங்களில் தென்மாகாணத்தில் இடம் பெற்ற சில குற்றச்செயல்களு டன் தொடர்பு பட்டவர் எனவும் கூறப்படுகின்றது.

இது தொடர்பிலான மேலதிக விசாரணை களை பயங்கரவாத விசாரணைப் பிரிவி னர் மேற்கொண்டு வருவதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அலுவலகம் தெரிவித் துள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாகரையில் அமையவுள்ள இறால் வளர்ப்பு திட்டத்திற்கு எதிர்ப்பு!

மட்டக்களப்பு மாவட்டத்தில் வாகரை பிரதேசத்தில் அமையவுள்ள அரச இறால் வளர்ப்பு திட்டத்திற்கு எதிர்ப்பு தெரிவித்து கடந்த18ம் திகதி திங்கட்கிழமை உள்ளூர் மக்கள் வீதி மறியல் போராட்டத்தில் ஈடுபட்டனர்.



அரசாங்கத்தின் தொழில் அபிவிருத்தி முதலீட்டு திட்டத்தின் கீழ் அரச நீர்வாழ் உயிரின வளர்ப்பு அபிவிருத்திச் சபையினால் பனிச்சங்கேணி வாவி யோரத்தில் உள்ள பகுதி ஒன்று இறால் வளர்ப்பு திட்டத்திற்கு என அடையாளமிடப்பட்டுள்ளது.

இந்தத் திட்டம் காரணமாக சதுப்பு நிலத் தாவரங்கள் அழியும் ஆபத்து ஏற்பட்டுள்ளதாக கூறும் ஆர்ப்பாட்டகாரர்கள், சுற்றுச்சூழல் பாதுகாக்கப்பட வேண்டியதன் அவசியம் பற்றியும் ஆர்ப்பாட்டத்தின் போது வலியுறுத்தினர்.

சதுப்புநிலத் தாவரங்கள் அழிக்கப்படுவதாலும் இறால் பண்ணையிலிருந்து வெளியேறும் கழிவுகளினாலும் வாவி மாசடையும் என்றும், மீன், நண்டு, இறால் ஆகியவற்றின் இனப்பெருக்கம் குறைவடையும் எனவும் அதனால் மீனவர்க ளின் வாழ்வாதாரம் பாதிக்கப்படும் என்றும் அவர்கள் கூறுகின்றனர். குறித்த திட்டத்திற்கு உள்ளூர் மக்களால் தெரிவிக்கப்பட்டுள்ள எதிர்ப்பு குறித்து கவனம் செலுத்தப்படும் என அரசாங்க அதிபரால் பிரதேச செயலாளர் ஊடாக உறுதிமொழி அளிக்கப்பட்டுள்ளது.

அந்த இடத்திற்கு நேரில் சென்ற நாடாளுமன்ற உறுப்பினர் ஞா.சிறிநேசன், உரிய அமைச்சரின் கவனத்திற்கு கொண்டு வந்து அந்தத் திட்டத்தை தடுப்பதாக உறுதி வழங்கினார். இதனையடுத்து ஆர்ப்பாட்டகாரர்கள் அங்கிருந்து கலைந்து சென்றனர்.

# இரா.சம்பந்தன் வட மாகாணசபை உறுப்பினர்களுடன் கலந்துரையாடல்!

எதிர்க்கட்சித் தலைவரும், தமிழ் தேசியக் கூட்டமைப்பின் தலைவருமாகிய இரா. சம்பந்தன், வடமாகாண சபையின் அவைத் தலைவர் சி.வி.கே.சிவஞானம் மற்றும் வடமாகாண அமைச்சர்கள், உறுப்பினர்களுக்கிடையிலான சந்திப்பு ஒன்று கடந்த 15ம் திகதி மாலை யாழ். கோப்பாய் வீதியில் உள்ள தனியார் விடுதி ஒன்றில் நடைபெற்றது. நாடாளுமன்றத்தில் புதிய அரசியல் யாப்பு தொடர்பில் கொண்டுவரப்பட்ட திட்டங்கள், அதனூடாக தமிழ் மக்களுக்கு ஏற்படுத்தப்பட இருக்கின்ற நன்மைகள், மீள்குடியேற்றப்பட்டுள்ள மற்றும் மீள் குடியேற்றப்படாத இடங்களில் மக்களுக் கான தேவைகள், நில அளவை மூலம் அத்துமீறி மக்களின் இடங்களை கைப்பற்றல், தற்போதைய எற்பட்டுள்ள ஆட்சி மாற்றங்களினால் தமிழ் மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் போன்றன தொடர்பில் இங்கு விரிவாக வடமாகாண சபையின் அவைத் தலைவர் சி.வி. கே.சிவஞானம் மற்றும் அமைச்சர்கள், உறுப்பினர்கள் எதிர்க்கட்சித் தலைவரு டன் கலந்துரையாடினர்.



இந்த கலந்துரையாடலில் வடமாகாண சபையின் 22 உறுப்பினர்கள் கலந்து கொண்ட நிலையில் வடமாகாண முதலமைச்சர் சி.வி.விக்கினேஸ்வரன், விவசாய அமைச்சர் ஐங்கரநேசன் கல்வி யமைச்சர் குருகுலராஜா ஆகியோர் இதில் கலந்து கொள்ளவில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 10 ஆண்டுகளுக்கு முன்னர் காணாமல் போனவர்கள் வெலிக்கடை சிறைச்சாலையில்!




10 ஆண்டுகளுக்கு முன்னர் காணாமற் போனதாக தெரிவிக்கப் படும் மூன்று இளைஞர்கள் மாலைதீவிலிருந்து கொழும்பிற்கு அழைத்து வரப்பட்டு வெலிக்கடை சிறைச் சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. வவுனியா - முத்தை யன்கட்டு மற்றும் புளியம்பொக்கணை ஆகிய இடங்களிலிருந்து இவர்கள் காணாமல் போனதாக முறையிடப் பட்டி ருந்தது.

தனது இளைய சகோதரன் 2005 இல் வீட்டைவிட்டு வெளியே விளையாடச் சென்றிருந்தபோது காணாமல் போயிருந்த தாகவும் சம்பவம் நடந்து ஆறு ஆண்டுகளின் பின்னர் அவர் தொலைபேசி யில் தொடர்பு கொண்டு தான் மாலைதீவு சிறை ஒன்றில் உள்ளதாக கூறியதாகவும் அவர்களை நேரில் சென்று பார்த்துவிட்டு திரும்பிய கௌரி ராஜா கவிதா பிபிசிக்கு தெரிவித்தார்.

தனது சகோதரன் உட்பட மூன்று இளைஞர்களும் மாலை தீவு சிறையிலிருந்து இலங்கைக்கு அழைத்து வரப் பட்டதையும் அவர் உறுதிப்படுத்தினார்.

# பொது விடுமுறைகளால் பொருளாதாரத்திற்கு பாதிப்பு!

இலங்கையில் வழங்கப்படும் பொது விடுமுறைகள் பொருளா தாரத்திற்கு பெரும்தடையாக அமைவதாகப் பொருளா தார நிபுணர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.


ஆசிய நாடுகளில், இலங்கையிலேயே வருடம் ஒன்றிற்கு அதிக விடுமுறைகள் வழங்கப்படுகின்றன. வருடம் ஒன்றிற்கு 25 பொது விடுமுறைகள் வழங்கப்படுகின்றன. சிங்கப்பூரில் 13 நாட்களும் ஜப்பானில் 17 நாட்களும், இந்தோனேஷியாவில் 19 நாட்களும், தாய்லாந்தில் 20 நாட்களும் பொது விடுமுறைகள் வழங்கப்படுகின் றன. அத்துடன், அமெரிக்காவில் 09 நாட்களும் அவுஸ்திரேலியாவில் 10 நாட்க ளும் பொது விடுமுறை களாக உள்ளன.

எனினும், இலங்கையில் பல்லின இனங் களை இலக்கு வைத்து இந்த விடுமுறை கள் ஒதுக்கப்படுகின்றன. 2012ஆம் ஆண்டு வெளியிடப்பட்ட மக்கள்தொகை கணக் கெடுப்பு விவரத்துக்கமைய 70 சதவீதத் திற்கும் மேற்பட்ட மக்கள் பௌத்தர்களாக உள்ளனர்.

தவிர இந்து, முஸ்லிம், கிறிஸ்தவர்கள் மற்றும் ஏனையவர்கள் என பல்லின மத, இன அடிப்படையில் விடுமுறைகள் வழங்கப்படுகின்றன. பௌத்தர்கள் புனித நாளாகக் கருதும் பௌர்ணமி தினங்கில் வழங்கப்படும் பொது விடுமுறைகளே, வருடத்தில் 12 நாட்கள் வழங்கப்படுகின் றமை குறிப்பிடத்தக்கது.

# சுவிட்சர்லாந்தில் புகலிடம் கோருவோரின் எண்ணிக்கை வீழ்ச்சியடைந்துள்ளது!

2016ம் ஆண்டின் கடந்த மூன்று மாத காலப்பகுதியில் 146 இலங்கை யர்கள் சுவிட்சர்லாந்தில் புகலிடம் கோரி விண்ணப்பம் செய்துள்ள னர். இது கடந்த ஆண்டின் இறுதிக் காலாண்டை விடவும் 45 வீத வீழ்ச்சியை பதிவு செய்துள்ளது என்று சுவிட்சர்லாந்தின் இராஜாங்க செயலாளர் வெளிநாட்டு ஊடகங்க ளுக்கு தெரிவித்துள்ளார்.




இதேவேளை இந்த ஆண்டின் கடந்த மூன்று மாத காலப்பகுதியில் சுவிட்சர்லாந்தில் புகலிடக் கோரிய விண்ணப்பங்கள் 8315 மொத்தமாக கிடைத்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள் ளது. இவ்வாறு புகலிடம் கோரி விண்ணோப்பம் செய்வோரின் அளவு குறைந்து கொண்டு செல்வ தாக சுவிட்சர்லாந்தின் குடிவரவு திணைக்களம் தெரிவிக்கின்றது.

# ஆட்கடத்தலை தடுக்கும் முயற்சிகளுக்கு அவுஸ்திரேலியா பாராட்டு!

இலங்கை அரசாங்கம் சட்ட விரோத ஆட்கடத்தலை தடுக்க மேற்கொண்டுள்ள முயற்சி களுக்கு அவுஸ்திரேலியா பாராட்டுக்களைத் தெரிவித்துள் ளது.

ஆட்கடத்தல் குறித்து ஆராயும் அவுஸ்திரேலியாவின் ஆணை யாளர் இலங்கை கடற்படை தளபதியை சந்தித்த போதே இதனை தெரிவித்துள்ளார். அத்துடன், இரு நாடுகளுக் கும் இடையிலான ஒத்துழைப்புக் களை மேலும் வலுப்படுத்து வது குறித்தும் இதன்போது நீண்ட கலந்துரையாடல் இடம் பெற்றுள்ளது.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கையில் மனித உரிமை மீறல்களில் ஈடுபட்டோர் தண்டனையிலிருந்து தப்புகின்றனர்!

இலங்கையில் ஆயுத மோதல்களுக்கு பின்னரான காலத்திலும் சித்திரவதைகள், பாலியல் வன்புணர்வுகள், ஊழல், மனித உரிமைகள் மீறலில் ஈடுபட்டோர் தண்டனையில் இருந்து தப்புகின்றனர் என அமெரிக்கா குற்றஞ்சாட்டியுள்ளது.

'இலங்கையின் மனித உரிமைகள் நடைமுறைகள் 2015 என்ற அறிக்கையை அமெரிக்க ராஜாங்கத் திணைக்களம் வெளியிட்டுள்ளது. அதிலேயே மேற்படி விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த ஆண்டில், சிவில் செயற்பாட்டாளர் கள் மற்றும் ஊடகவியலாளர்கள் துன்பு றுத்தப்படுதல், தடைசெய்யப்பட்ட விடுதலைப் புலிகள் இயக்கத்தின் அனுதாபிகள் எனக் கருதப்படுவோர் கண்டபடி கைது செய்யப்படுதல், தடுத்து வைக்கப்படுதல், சித்திரவதை செய்யப்படுதல், வல்லுறவுக்கு உட்படுத்தப்படுதல். இலங்கை படைகள் மற்றும் பொலிஸார் பாலியல் மற்றும் பாலின அடிப்படையில் வன்முறைகளில் ஈடுபடுகின்றனர். சிறைகளில் அதிகளவி லானோர் அடைக்கப் பட்டுள்ளமையால் ஏற்பட்டுள்ள இடநெருக்கடி மற்றொரு பாரிய மனித உரிமைப் பிரச்சினையாகும்.

உள்நாட்டில் இடம்பெயர்ந்த மக்களின் மனித உரிமைகள் இன்னமும் பிரச்சினை யாக உள்ளன. பெண்கள், குழந்தைகள் பாலியல் துன்புறுத்தல்களுக்கு உள்ளாக் கப்படுவதும் தொடர்கிறது. ஆயுத மோதல் களின் போதும், மோதல்களின் பின்னரும், குற்றமிழைத்தவர்கள், குறிப்பாக சித்திர வதைகள், பாலியல் வன்முறைகள், ஊழல், மனிதஉரிமை மீறல்களில் ஈடுபட்டவர்கள், தண்டனை யில் இருந்து தப்பித்துக் கொள்ளும்நிலை பரந்தளவில் தொடர்கிறது.



இலங்கை அரசாங்கம், ஒரு தொகையான இராணுவம், பொலிஸார் மற்றும் ஏனைய அதிகாரிகளை, நாடாளுமன்ற உறுப் பினர்கள் கொலைகள், கடத்தல்கள், ஊடகவியலாளர்கள் மற்றும் பொது மக்க ளின் கொலைகள் உள்ளிட்டவற்றுடன் தொடர்புடையவர்கள் என்ற சந்தேகத் தில், பழைய மற்றும் புதிய வழக்கு களில் கைது செய்து தடுத்து வைத்துள் ளது என்றும் இந்த அறிக்கையில் கூறப் பட்டுள்ளது.

அதேவேளை, இந்த அறிக்கையில், சுதந்திரமாக நடத்தப்பட்ட தேர்தலில் தெரிவு செய்யப்பட்ட அரசாங்கம் பதவியில் இருப்பதாகக் குறிப்பிட்டுள்ள இராஜாங்கத் திணைக்களம் இலங்கை அரசாங்கத்தின் பல்வேறு நடவடிக்கைகளை சுட்டிக்காட்டி பாராட்டியுள்ளது.

ஓமந்தை சோதனைச்சாவடி மூடப்பட் டமை, இலங்கை ஜனாதிபதியின் அதி காரங்களை மட்டுப்படுத்தும், 19 ஆவது அரசியலமைப்புத் திருத்தம், ஜெனிவா தீர்மானத்திற்கு இணை அனுசரணை வழங்கியமை, ஐ.நாவின் சிறப்பு அறிக்கை யாளர்கள் மற்றும் குழுவினர், ஐ.நா மனித உரிமை ஆணையாளரை வர வேற்றமை, தேசிய நல்லிணக்கத்துக்கான செயலகம் ஆரம்பிக்கப்பட்டமை, தேசிய கலந்துரையாடல் அமைச்சை உருவாக்கி யமை, காணாமற்போனோருக்கு, காணா மற்போனவர் சான்றிதழை வழங்க அமைச்சரவை அங்கீகாரம் அளித்தமை, பல்வேறு புலம்பெயர் தமிழர் அமைப் புகள், தனிநபர்கள் மீதான தடையை நீக்கியமை உள்ளிட்ட விடயங்களில் இலங்கை அரசாங்கத்தின் நகர்வுகளை அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத் தின் அறிக்கை பாராட்டியுள்ளது. அத்து டன் இலங்கை படைகள், காத்திரமான முறையில் சிவில் அதிகாரிகளால் நிர்வ கிக்கப்படுகின்றனர் என்றும் இந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

# வெளிநாடுகளில் வாழும் 1500 இலங்கையர்களுக்கு இரட்டைக் குடியுரிமை வழங்கப்பட்டது!

வெளிநாடுகளில் வாழும் 1500 இலங்கை யர்களுக்கு இரட்டைக் குடியுரிமை வழங் கப்பட்டுள்ளது. உள்விவகார மற்றும் வட மேல் மாகாண அபிவிருத்தி அமைச்சர் எஸ்.பி.நாவின்னவினால் கடந்த 10ம் திகதி இவை வழங்கப்பட்டுள்ளன.


இரட்டைக் குடியுரிமை வழங்கும் நடவடிக்கைகளை கடந்த மஹிந்த ராஜபக்ஸ அரசு இடைநிறுத்தியிருந்தது. மைத்திரி - ரணில் அரசு ஆட்சிப் பொறுப்பை ஏற்றுக்கொண்டதன் பின்னர் இதுவரையில் சுமார் 6000 பேருக்கு இரட்டைக் குடியுரிமை வழங்கப் பட்டுள்ளது. எதிர் வரும் காலங்களிலும் தகுதியான வர்களுக்கு இரட்டைக் குடியு ரிமை வழங்கப்படும் என அமைச்சர் நாவின்ன தெரிவித்துள்ளார்.

வாக்களிக்கும் உரிமை யைத் தவிர்ந்த ஏனைய அனைத்து உரிமைகளும் இரட் டைக் குடியுரிமை வழங் கப்படு வோருக்கு கிடைக் கும் என அமைச்சர் கூறி யுள்ளார். 19 ஆவது திருத்தச் சட்டத்தின் அடிப்படையில் இரட்டைக் குடியுரிமை உடையவர்கள் இலங்கையில் வாக்களிக்க முடியாது என்பது குறிப்பிடத்தக்கது.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இறுதி யுத்தத்தில் ஆயிரக்கணக்கான மக்கள் இறந்ததற்கு சம்பந்தரும் சேனாதியுமே காரணம்!

## தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைவர் வீ.ஆனந்தசங்கரியுடன் நேர்காணல் - த.ஜெயபாலன்

**தேசம்:** தற்போதைய புதிய அரசு பற்றியும் அவர்கள் சிறுபான்மைச் சமூகங்களுக்கான தீர்வினை முன்வைப்பது தொடர்பாகவும் உங்கள் நிலைப்பாடு என்ன?

**ஆனந்தசங்கரி:** முதலில் இது ஒரு தேசிய அரசாங்கம் என்பதை ஒத்துக்கொள்ள முடியாது. நான் சொல்லும் கருத்து சிலருக்கு - வெளிப்பார்வைக்கு தவறாக தெரியலாம். அனைவரும் சேர்ந்து ஒன்றாக இயங்குவதுதான் தேசிய அரசாங்கம். இங்கு அமைச்சரவையில் இருப்பவர்கள் ஒருவருக்கொருவர் சண்டை பிடித்துக் கொண்டிருப்பதையே காண்கின்றோம். முன்னைய ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஸ எதிரணியினரை சேர்த்து கூட்டம் ஒன்றைவைத்த போது அளும்தரப்பிலிருந்து 40 பேர் அதில் கலந்து கொண்டிருக்கின்றனர்.

தமிழ் தேசியக் கூட்டமைப்பை வைத்துக்கொண்டு பிரச்சினைக்கு தீர்வு காண முடியாது. அது பெயரளவில்தான் கூட்டமைப்பு. கூட்டமைப்பிலுள்ள நான்கு கட்சிகளில் இரண்டு கட்சிகள்தான் இயங்குகின்றன மற்றைய இரு கட்சிகளும் ஒதுக்கப்பட்டுள்ளன. முக்கிய சந்திப்புகளில் குறித்த இரண்டு கட்சியின் பிரதிநிதிகளே பங்கேற்கின்றனர். குறிப்பாக சித்தார்த்தனை அவர்கள் எதற்கும் அழைப்பதில்லை.

தமிழ் தேசியக் கூட்டமைப்புடன் கூட்டுச் சேர்வதை தென் னிலங்கையிலுள்ள சிங்களவர்கள் விரும்பவில்லை. ஆனால் நாட்டில் ஆட்சிமாற்றம் ஒன்று ஏற்பட வேண்டும் என்பதை தமிழ்,சிங்கள மக்கள் தாங்களாகவே விரும்பி முடிவெடுத்தனர். இந்நிலையில் தமிழ் தேசியக் கூட்டமைப்பு மௌனம் சாதிக்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேண்டும் என்று நான் கூறியிருந்தேன். இன்றும் தாங்கள் தான் இந்த புதிய அரசாங்கத்தை கொண்டுவந்தவர்கள் என்று கூட்டமைப்பினர் செல்லும் இடங்களிலெல்லாம் கூறிவருகி வருகின்றனர். இவர்களால் ஒரு ஐந்து வீதம் வாக்குகள் கூடியிருக்கலாம் ஆனால், அது சிங்கள மக்கள் மத்தியில் பாரிய பாதிப்பை ஏற்படுத்தியது. சிங்கள மக்களின் வாக்குகள் குறைவடைந்தன.

**தேசம்:** 2016 முடிவடைவதற்குள் ஒரு தீர்வைக் கண்டு விடுவோம் என இரா.சம்பந்தன் சூளுரைத்து இருந்தார். அது சாத்தியமா? தற்போதைய அரசின் அரசியல் யாப்பு சீர்திருத்தம் அதைநோக்கி நகர்வதாக நீங்கள் கருதுகிறீர்களா?

**ஆனந்தசங்கரி:** சம்பந்தர் சமஸ்டி அடிப்படையில் தீர்வு காண்போம் என்று கூறுகின்றார். அதேவேளையில் அரசாங்கத் திலுள்ள பொறுப்பு வாய்ந்த அமைச்சர்கள் - குறிப்பாக பிரதமர் கூட சமஸ்டியை ஏற்றுக்கொள்ளத் தயார் இல்லை என்று கூறுகின்றார்கள். ஆனால் பிரச்சினைக்கு தீர்வு காண்போம் என்றும் கூறுகின்றார்கள். வடக்கு கிழக்கு இணைப்பு என்பது இனி கனவிலும் நடக்காது. முஸ்லிம்கள் தங்களுக்கு தனிஅலகு வேண்டும் என்று கேட்கின்றார்கள். அது குறித்த விவாதங்களும் இடம்பெற்று வருகின்றது. வடக்கு கிழக்கு இணைப்பிற்கு முஸ்லிம்கள் இடமளிக்க மாட்டார்கள்.

**தேசம்:** புதிய கூட்டுமுன்னணி ஒன்றை உருவாக்கும் உங்கள் முயற்சி எவ்வளவில் உள்ளது - மக்கள் ஆதரவற்ற இம்முன்னணி எவ்வாறு தமிழ் தேசியக் கூட்டமைப்பை எதிர்கொள்ளும் - முன்னர் உருவாக்கப்பட்ட தமிழ் அரங்கத்தில் இருந்து என்ன படிப்பினைகளைப் பெறுகின்றீர்கள்?

**ஆனந்தசங்கரி:** பத்திரிகைகளில் சில தவறான செய்திகள் வருகின்றன. சில பத்திரிகைகள் நல்ல செய்திகளைப் போடுவ தில்லை. உதாரணத்திற்கு கூறினால் - கருணா அம்மானை நான் கலைத்துப் பிடிக்கப் போகவில்லை. கருணா சொன்னார் ஆனந்தசங்கரி ஐயாவின் கட்சி நேர்மையாக செயற்படுகிறது. அவருடன் சேர விரும்புகின்றேன் என்று. சொன்னவுடன் அதனை தவறாக கூறிவிட்டார்கள். அண்மையில் டக்ளஸ் தேவானந்தாவும், சிறி ரேலோவை சேர்ந்தவர்களும் சந்திக்க வந்தார்கள். இப்போது அதைப் பற்றி விமர்சிக்க தொடங்கி விட்டனர்.

யார் ஒற்றுமையாகின்றீகளோ அங்கு நான் வருவேன் என்று தான் நான் கூறி வருகின்றேன். வடக்கு முதலமைச்சரிடம் கூறினேன் தயவு செய்து புதிய கட்சி ஒன்றை ஆரம்பியுங்கள் அதற்கு நான் முழு ஆதரவையும் தருகின்றேன் என்று. தமிழர் விடுதலைக் கூட்டணியை நீங்கள் பொறுப்பெடுங்கள் நான் எனது பதவியை விட்டு தருகின்றேன் என்றும் கூறினேன். அவர் சொன்ன பதில் முதலில் நீங்கள் அனைவரும் ஒன்று சேருங்கள் பின்னர் நான் அதைப்பற்றி யோசிக்கின்றேன் என்பது. அடுத்தடுத்த நாள் ஒரு முப்பது பேர் சேர்ந்து ஒரு பேரவையை உருவாக்கியிருக்கின்றார்கள். நான் பேரவையை குறை கூற வில்லை. பேரவை என்பது பெருமளவில் பங்கேற்பு இருக்க வேண்டும்.60 வருடம் அரசியலில் இருந்தவன், 18 வருடங்கள் எம்.பியாக இருந்து அநியாயமான முறையில் தோற்கடிக்கப்பட்டு, மோசடி மூலம் அரசியலில் இருந்து ஒதுக்கப்பட்டவன் நான். நான் துரோகி அல்ல. என்னை விட்டுவிட்டு யாரோ முப்பது பேர் சேர்ந்து பேரவை என்றால், அதனை என்னால் ஏற்றுக்கொள்ள முடியாது. என்னைக் கேட்டிருந்தால் போயிருப்பேன். யாராவது பொறுப்பானவர்கள் ஒரு அமைப்பை தொடங்கினால் அதற்கு நான் ஆதரவளிப்பேன்.

**தேசம்:** உங்கள் தலைமையை மீறி உங்கள் கட்சி உறுப்பினர்கள், உங்களுடைய மகன் போன்றவர்களே இயங்கு கின்ற போது, அடுத்தடுத்து தேர்தலில் தோல்விகளே எஞ்சுகின்ற போது நீங்கள் ஏன் நாடாளுமன்ற அரசியலில் இருந்து ஒதுங்கிக் கொள்ள முயலவில்லை?

**ஆனந்தசங்கரி:** தந்தை செல்வாவும் தோல்வியைக் கண்டவர்தான். ஜீ.ஜீ.பொன்னம்பலமும் தோல்வியடைந்தவர் தான். சுந்தரலிங்கமும் தோற்றவர்தான். 2002ம் ஆண்டு நடைபெற்ற தேர்தலில் 36 ஆயிரம் வாக்குகளைப் பெற்றேன். மோசடி எதுவும் இல்லாமல் நடைபெற்ற தேர்தல் அது. அடுத்து நடைபெற்ற தேர்தலில் என்னையே வாக்களிக்க விடவில்லை. என்னைப்பற்றி மோசமான பிரச்சாரங்கள் மேற்கொள்ளப்பட்டன. நான் ஒரு சமூக சேவையாளனாக இருந்தே அரசியலுக்கு வந்தேன். அரசியலுக்கு வந்து சமூக சேவை செய்யவில்லை. எனவே, இறுதிவரை எனது அரசியல் தொடரும்.

**தேசம்:** என் உள்ளத்தில் புதைந்திருக்கின்ற பெரும் மன உளைச்சலை என் வாழ்வின் கடைசிவட்டத்தில் ஒழிக் கொண்டி ருக்கின்ற நேரத்திலாவது கூறிவிட வேண்டும் என தவிப்புடன் நீங்கள் 'அறிந்ததும் அறியாததும்' என்ற நூலை வெளியிட்டு இருக்கிறீர்கள்.

இந்நூல் வாசிப்பு என்னுள் எழுப்புகின்ற சில கேள்விகள்:

தமிழ் கூட்டணி பின் தமிழர் விடுதலைக் கூட்டணி உரு வாக்கத்தின் காரணம் இனத்தைக் காப்பாற்ற என்று குறிப் பிட்டு உள்ளீர்கள். உண்மையான காரணம் இரு கட்சித் தலைமைகளும் தமிழரசுக் கட்சி, தமிழ் காங்கிரஸ் ஆகிய கட்சிகளின் வாக்கு வங்கியில் ஏற்பட்ட வீழ்ச்சியல்லவா?

**ஆனந்தசங்கரி:** தந்தை செல்வா அப்போது தேர்தல் முடிந் தவுடனேயே ஜீ.ஜீ.பொன்னம்பலத்தின் வீடு தேடிச் சென்றார். தன்னை தோற்கடித்தவர் வீடுதேடிச் செல்ல ஜீ.ஜீ கேட்டார் நான் உங்களுக்கு என்ன செய்ய வேண்டும் என்று. நாங்கள் இனிமேல் பிரிந்திருக்க முடியாது என்று சொன்னார். அப்பொதே தந்தை செல்வா தமிழரசுக் கட்சி என்று ஒன்று இனிமேல் இல்லை என்று முடிவெடுத்தார். தனது முதிய நிலையிலும் ஜீ.ஜீயை கூட்டணியின் தலைவராக்க முன்வந்தவர் செல்வா. மலையகத்தின் தலைவர் தொண்டமானையும் அதன் தலைவர் களில் ஒருவராக்கினார்.

**தேசம்:** நடந்து முடிந்த வன்னி யுத்தத்தில் இலங்கை அரசு எவ்வளவிற்கு யுத்தக் குற்றங்களில் ஈடுபட்டார்களோ அதற்கும் மேலாக தமிழீழ விடுதலைப் புலிகள் மிக மோசமான யுத்தக் குற்றங்களில் ஈடுபட்டு இருந்தார்கள். அதனை விசாரிப்பதற்கு தமிழ் தேசியக் கூட்டமைப்பே தயாரக இருக்கும் போது நீங்கள் யுத்தக் குற்றங்களுக்காக விடுதலைப் புலிகளும் விசாரிக்கப்பட வேண்டும் என்ற நிலைப்பாட்டை எதிர்ப்பதாக கூறியுள்ளீர்கள்.

**ஆனந்தசங்கரி:** எனது தனிப்பட்ட கருத்து இராணுவம் என்பது ஒரு சட்டபூர்வமான அமைப்பு. விடுதலைப்புலிகள் அவ்வாறு இல்லை. அதனாலேயே அவ்வாறு கூறினேன்.

இறுதிக்கட்டப் போரின் போது அரசாங்கத்திற்கும், விடுதலைப் புலிகளுக்கும் கடிதங்கள் எழுதினேன். அதேபோல் தமிழ் தேசியக் கூட்டமைப்பினருக்கும் எழுதினேன்.

கடைசி யுத்தத்தில் மக்கள் இருக்க இடமில்லாமல் உண்ண உணவின்றி பாரிய துன்பத்தில் இருக்கின்றார்கள் அவர்களை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காப்பாற்ற நடவடிக்கை எடுங்கள் முடியாவிட்டால் உங்கள் பதவிகளை விட்டு விலகுங்கள் என கூட்டமைப்பினருக்கு கூறினேன்.

பிரபாகரனுக்கு எழுதினேன். தம்பி, கிளிநொச்சியையும் விட்டாச்சு. இனி எத்தனை வருடம் சென்றாலும் யுத்தத்தை வெற்றி கொள்ள முடியாது. தயவு செய்து ஏதேனும் ஒரு உடன் பாட்டிற்கு வந்து இந்த யுத்தத்தை முடித்து விட்டு, மக்களை சாவிலிருந்து காப்பாற்றுங்கள். யுத்தத்தில் சிக்கியுள்ள மூன்று இலட்சத்திற்கு மேற்பட்ட மக்களின் சாபத்திற்கு ஆளாகாதீர்கள் என்று. அவரும் அதனை கேட்டுக்கொள்ளவில்லை.

அரசாங்கத்திற்கு எழுதினேன். நீங்கள் ஒரு அரசாங்கம். வீடுதலைப்புலிகள் போன்ற அமைப்பு அல்ல. உங்களுக்கு இந்த மக்களை காப்பாற்ற வேண்டிய பொறுப்புள்ளது. ஏதேனும் ஒரு நாட்டோடு தொடர்பு கொண்டு இந்த மக்களை காப்பாற்ற நடவடிக்கை எடுங்கள் என்று கூறினேன். இந்த மூன்று கடிதங்களும் பகிரங்கமாகவே பத்திரிகைகளில் வந்தன. மூன்று தரப்பினருமே அதனை செய்யவில்லை.

அடுத்தது, இந்திய வெளியுறவுச் செயலராக இருந்த சிவசங்கர் மேனன் கூட்டமைப்பிற்கு கடிதம் எழுதினார். அவசரமாக சந்திக்க வேண்டும் வாருங்கள் என்று. இவர்கள் தாங்கள் வர மாட்டோம் என்று கூறிவிட்டார்கள். இன்று இத்தனை சனங் கள் செத்ததற்கு காரணம் நாங்கள் வரமாட்டோம் என்று இவர் கள் மறுத்தமையே ஆகும். இந்திய வெளியுறவுச் செயலர் என்றால் இந்த யுத்தத்தையே நிறுத்தக்கூடிய தகுயுள்ளவர். ஏன் அழைக்கின்றார் என போய் சந்தித்திருக்கலாம்.அவர் அழைத்தே இவர்கள் செல்லவில்லை.

**தேசம்:** உங்களுடைய நூல் தமிழரசுக் கட்சியின் தற்போதைய தலைவர் மாவை சேனாதிராஜா மீது கடுமையான குற்றச் சாட்டுகளைப் பதிவு செய்துள்ளது. மாவை சேனாதிராஜா ஆரம்பம் முதலே சந்தர்ப்பவாதியாகச் செயற்பட்ட ஒரு மனித ராகவே அறியப்பட்டவர். அப்படி இருந்தும் நீங்கள் ஒரு தடவை அல்ல - இரு தடவை அவரை நாடாளுமன்றத்திற்கு நியமன உறுப்பினராக அனுப்பி வைத்துள்ளீர்கள். உங்கள் கட்சிக்குள் அன்றும் இன்றும் இவ்வாறான கொள்கையற்ற மனிதர்கள், வன்முறைப் போக்குடையவர்கள் முக்கிய நிலைகளில் உள்ள னர். இது உங்கள் தலைமையின் பலவீனம் அல்லவா?

**ஆனந்தசங்கரி:** அது சரி. நான் அவ்வாறானதொரு மனித னாக பிறந்து விட்டேன் எல்லோரையும் நம்பினேன். இந்த இனத்திற்கு சேனாதிராஜா செய்த துரோத்தைப் போல் வேறு எவரும் செய்யவில்லை.

**தேசம்:** நான் மிகவும் வேதனையுடன் வாசித்த பகுதி இது. 1994ம் ஆண்டு ஒரு கட்சிக்கு 9 ஆசனங்கள், 2004ம் ஆண்டு ஒரு கட்சிக்கு 22 ஆசனங்கள், 2010இல் 16 ஆசனங்கள், 2015இல் 15 ஆசனங்களை கொடுத்த மக்கள் என்னுடைய கட்சிக்கு ஆறு மாதங்களுக்குக்கேனும் ஒரு சந்தர்ப்பத்தை தந்து பாருங்கள் என வருந்திக்கேட்டும் ஒரு ஆசனமும் தராமல் எம்மை ஒதுக்கிவிட்டார்கள். இனிமேல் தருவார்கள் என்ற எதிர்பார்ப்பு உங்களிடம் இன்னும் உள்ளதா?

**ஆனந்தசங்கரி:** இனிமேல் தேர்தலில் நிற்க மாட்டேன். முன்னரும் ஒரு தடவை இவ்வாறு கூறினேன். பின்னர் சிலரின் வெண்டுகோளுக்கு இணங்க போட்டியிட்டேன்.இனி போட்டியிட மாட்டேன். ஆனால், நம்பிக்கைக்குரியவர்களுக்கு வாக்களிக்குமாறு மக்களிடம் கேட்பேன்.

தமிழ் தேசியக் கூட்டமைப்பை கைவிட்டு அதில் அங்கம் வகிக்கும் அத்தனை பேரும் தவிகூ விற்கு புத்துயிர் கொடுக்க வேண்டும் என்று கேட்டு உள்ளீர்கள். கோயிலுக்குச் சென்று விரதம் இருந்துவிட்டு வெளியில் வந்து ரவுடித்தனம் பண்ணும், பெண்கள் மீது - ஒடுக்கப்பட்ட சாதிகள் மீது வன்முறையை பயன்படுத்தும் ஜனநாயகத்தை மதிக்காத தமிழ் தேசியவாதக் கட்சிகளை அப்படியே உலுத்துப் போகவிட்டால் என்ன?

**ஆனந்தசங்கரி:** எனக்கொரு நம்பிக்கை உள்ளது. கூட்டமைப்பில் இப்போதுள்ள அங்கத்தவர்கள் அரசியலில் அனுபவமற்றவர்கள். அப்பாவிகள். அவர்கள் உணர்ந்து வர வேண்டும். எனது 65 வருட அரசியல் அனுபவத்திலிருந்து சொல்கின்றேன். தந்தை செல்வாவின் சிந்தனை தனது வாழ்விற்குப் பிறகு தமிழரசுக் கட்சி இருக்கக் கூடாது என்பதே. தான் இருக்கும் போதே அது இருக்கக் கூடாது என்று நினைத் தார்.

தமிழர் விடுதலைக் கூட்டணியே தமிழ் மக்களுக்கு வழிகாட்டி யாக இருக்க வேண்டும் என்று கூறினார். தற்போது இளைஞர் கள் தவறாக வழிநடத்தப்படுகின்றார்கள். இறுதி யுத்தத்தில் ஆயிரக்கணக்கான மக்கள் இறந்ததற்கு சம்பந்தரும் சேனாதி யுமே காரணம். இறுதிக்கட்டத்தில் விடுதலைப்புலிகளின் முக்கி யஸ்தர்கள் இவர்களுடன் தொலைபேசியில் தொடர்பு கொண்ட போது இவர்கள் அதற்கு பதிலளிக்கவில்லை.

**தேசம்:** அரசியலில் நான் என்ன தவறு செய்தேன் என்று கேள்ளவி எழுப்பி உள்ளீர்கள். இடதுசாரி அரசியலில் உங்கள் அரசியல் வாழ்வை ஆரம்பித்த நீங்கள் தமிழ் தேசிய அரசியல் சகதிக்குள் வீழ்ந்ததை தவறு என எனக்கு வழங்கிய நேர் காணல் ஒன்றில் கூறியதாக ஞாபகம்.

**ஆனந்தசங்கரி:** அன்று என்.எம்.பெரேராவுக்கு கடிதம் ஒன்று எழுதினேன். உங்களை விட்டுப் பிரிந்து போனது தவறு என்று. இவ்வறான தவறுகளை அமிர்தலிங்கம் போன்ற வர்களும் செய்திருக்கின்றார்கள். அமிர்தலிங்கமும் என். எம்.பெரேராவின் சிக்ஷ்யனாகத்தான் இருந்திருக்கின்றார். தனிச் சிங்கள மசோதா கொண்டு வரப்பட்ட நாட்களில் காலி முகத்திடலில் வைத்து அடித்தார்கள். நாகநாதன் உடையும் அவிழ்ந்த நிலையில் ஓடினார். தந்தை செல்வாவை எவரும் தொடவில்லை. அமிர்தருக்கு காயம். இரத்தம் குடிப்போம் என்று கூக்குரலிட்டார்கள். அந்த காலகட்டத்தில் என்.எம் பெரேரா பிரதமராக வர வாய்ப்பு இருந்தது. 'அவனும் சிங்களவன்தான் இவனும் சங்களவன்தான்' என்று கூறி நம்மவர்கள் அதனைக் கெடுத்தனர்.

தற்போதைய ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன நல்ல மனிதர். ஆறுமாதங்களுக்கு முன்னர் அவரை நான் சந்தத்து இந்திய மாதிரியிலான தீர்வுத் திட்டத்தை ஆராயும்படி அவரிடம் கூறினேன். வேறு வழியில்லை. தென்னாபிரிக்க அரசியல் யாப்பு குறித்த சிறுபுத்தகத்தையும் அவரிடம் வழங்கினேன்.அதிலுள்ள வற்றை ஆராயும் படியும் கூறினேன்.

பொறுப்புள்ள எம்.பி ஒருவர் பிரபாகரன்தான் தனது தலைவன் என்று கூறுகின்றார். இன்னொருவர் நாங்கள் கிட்டத்தட்ட வந்திட்டம் அடுத்த பாய்ச்சல் தமிழீழம் தான் என்று சொல்ல, சிங்களவர் சும்மா இருப்பார்களா? வகுப்புவாதத்தை தூண்டிக் கொண்டு சமஸ்டியை தருமாறு கேட்பது எவ்வாறு?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரபாகரனின் சடலம் எரிக்கப்படவில்லை புதைக்கப்பட்டது – சரத் பொன்சேகா!

தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனின் சடலம் எரிக்கப்பட்டதாக வெளியிடப்பட்டுள்ள தகவலை முன்னாள் இராணுவத் தளபதியும் தற்போதைய அமைச்சருமான சரத் பொன்சேகா மறுத்துள்ளார். பிரபாகரனின் சடலம் புதைக்கப்பட்டது என சரத் பொன்சேகா தெரிவித்துள்ளார்.

நந்திக்கடல் இறுதிக் கட்ட போரின் பின்னர் பிரபாகரனின் சடலம் மீட்கப்பட்டது எனவும், பிரபாகரனின் சடலம் எரிக்கப்பட்டு அஸ்தி கடலில் வீசப்பட்டதாக மற்றுமொரு முன்னாள் இராணுவத் தளபதியும் தற்போதைய இராஜதந்திரியுமான தயா ரட்நாயக்க கூறியுள்ளார்.

விடுதலைப்புலிகளின் புலனாய்வுப் பிரிவு பொறுப்பாளர் பொட்டு அம்மானின் சடலமும் எரிக்கப்பட்டு அஸ்தி கடலில் வீசப்பட்டதாகவும் தயா ரட்நாயக்க தெரிவித்திருந்தார்.

இத்தகவல்கள் பிழையானது என சரத் பொன்சேகா தெரிவித்துள்ளார். முழுமையாக அறிந்திராத விடயம் ஒன்று பற்றியே தயா ரட்நாயக்க கருத்து வெளியிட்டுள்ளதாகவும் இறுதிக் கட்ட போரின் போது தயா ரட்நாயக்க போர்க் களத்தில் இருக்கவில்லை எனவும் சரத் பொன்சேகா மேலும் தெரிவித்துள்ளார்.



# ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் பெயர் மாறுகின்றது!



ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் (ஈ.பி.ஆர்.எல்.எப்) பெயரில் மாற்றம் செய்யப்படவுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

அக்கட்சியின் பெயரில் உள்ள ஈழம் மற்றும் புரட்சி என்ற இரு சொற்களையும் நீக்கிவிட அக்கட்சி தீர்மானித்துள்ளதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன. இதற்கமைய 'தமிழ்ச் சமூக ஜனநாயகக் கட்சி' என்ற பெயரில் அக்கட்சியின் பெயர் மாற்றம் பெறவுள்ள தாகவும் மேற்படி தகவல்கள் தெரிவிக்கின்றன.

தற்போது ஈ.பி.ஆர்.எல்.எப் கட்சி, இரண்டு பிரிவு களாக இயங்குகின்றது. இதில் ஒரு பிரிவினரான பத்மநாபா ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி, ஈழம் என்ற பதத்தை நீக்கத் தீர்மானித்துள்ளதாகவும் தமிழ் சமூக ஜனநாயக் கட்சி என்ற பெயரில் புதிய கட்சிஅமைக்கப்பட உள்ளதாகவும் இது தொடர்பான அறிவிப்பு வெளியிடப்படும் என்றும் கூறப்படுகின்றது.

இதேவேளை, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் இணைந்து கொண்டுள்ள ஈ.பி. ஆர்.எல்.எப் கட்சியில் பெயர் மாற்றம் இடம்பெறாது எனவும் பத்மநாபா பிரிவினரே இவ்வாறு பெயர் மாற்றத்தை செய்ய உள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இது குறித்து பத்மநாபா ஈழமக்கள் புரட்சிகர முன்னணியின் செயலாளர் நாயகம் சுகு என்ற சிறிதரன், ஊடகமொன்றுக்குக் கருத்துத் தெரிவிக்கையில், பத்மநாபா ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி என்ற நீளமான பெயரை சுருக்குவதற்கான கலந்துரையாடல் தொடர்வதாகவும், பரந்துபட்ட சமூக ஜனநாயகக் கட்சி ஒன்றின் அவசியம் கருதி தமிழ்ச் சமூக ஜனநாயகக் கட்சி என்ற பெயரில் அரசியல் கட்சியை உருவாக்கும் முயற்சியில் ஈடுபட்டு உள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.

# மாலைதீவில் தடுத்து வைக்கப்பட்டுள்ள இலங்கையர் 14 பேரை இலங்கை சிறைகளுக்கு மாற்ற நடவடிக்கை!

மாலைதீவில் தடுத்து வைக்கப்பட்டுள்ள இலங்கையைச் சேர்ந்த 14 பேரை இலங்கைச் சிறைச்சாலைகளுக்கு மாற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

கடற்படையினரின் கப்பல் மூலம் கைதிகள் 14 பேரையும் நாட்டிற்கு அழைத்து வர நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக சிறைச் சாலைகள் ஆணையாளர் நாயகம் நிஷான் தனசிங்க தெரிவித்தார்.

வெளிவிவகார அமைச்சு மற்றும் பாதுகாப்பு அமைச்சு ஆகியவற்றின்



ஒத்துழைப்புடன் இந்த நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுவதாக அவர் குறிப்பிட்டுள்ளார். கைது செய்யப்பட்டவர்களுள் அநேக மானோர் போதைப்பொருள் வைத்திருந்த குற்றச்சாட்டில் கைது செய்யப் பட்டவர்கள் எனவும் சிறைச்சாலைகள் ஆணையாளர் நாயகம் சுட்டிக்காட்டியுள்ளார்.

மேலும் அவர்களுக்கு 10 முதல் 25 வருடங்கள் வரை தண்டனை விதிக்கப் பட்டுள்ளதாகவும் சிறைச்சாலைகள் ஆணையாளர்நாயகம் நிஷான் தனசிங்க தெரிவித்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தர்மகர்த்தாக்கள் கோவில் நடத்துகின்றார்களா அல்லது இறைச்சிக்கடை நடத்துகின்றார்களா? - நீதிபதி இளஞ்செழியன் கேள்வி!



யாழ். குடாநாட்டு கோவில்கள் சிலவற்றில் விலங்குகளை வெட்டி வேள்வி நடத்துவதற்கு எதிராக யாழ்ப்பாணம் மேல்நீதிமன்றம் இடைக்காலத் தடையுத்தரவு ஒன்றை பிறப்பித்துள்ளது. கடந்த 1ம் திகதி, வெள்ளிக்கிழமை இத்தடை உத்தரவு பிறப்பிக்கப் பட்டுள்ளது.

ஆலயங்களில் விலங்குகளைப் பலிகொடுத்து நடத்தப்படும் வேள்விகளை உடனடியாகத் தடுத்து நிறுத்த இடைக்கால உத்தரவு பிறப்பிக்குமாறு கோரி அகில இலங்கை சைவ மகாசபை தாக்கல் செய்திருந்த மனு மீதான விசாரணையின் போதே இந்த உத்தரவை நீதிபதி இளஞ்செழியன் பிறப்பித்துள்ளார்.

இறைச்சிக்கடைச் சட்டத்தின் கீழேயே இந்த வேள்விகளுக்கான ஆடு கோழி என்பவற்றை வெட்டுவதற்கான அனுமதி வழங்கப் படுவதனால், ஆலயங்களுக்கு அத்தகைய அனுமதி வழங்குவது சரியானதா என்றும், மிருக பலி கொடுத்து வேள்வி நடத்தும் ஆலயங்களின் தர்மகர்த்தாக்கள் கோவில் நடத்துகின்றார்களா அல்லது இறைச்சிக்கடை நடத்துகின்றார்களா என்றும் நீதிபதி தனது உத்தரவில் கேள்வி எழுப்பியிருக்கின்றார்.

பாடசாலையில், சந்தியில் மக்கள் கூடும் மைதானத்தில் ஆடு, மாடு, கோழி வெட்டுவதற்கு பிரதேச சபையினரும் சுகாதார பணிமனை உயரதிகாரிகளும் அனுமதி அளிக்க முடியுமா? அவ்வாறு அனுமதி வழங்குவது குற்றச்செயல் அல்லவா? கோவில்களில் மக்கள் கூடும் விழா வில் வேள்வி என்ற பெயரில் ஆடு கோழி என்பவற்றைப் பலியெடுத்து, வெட்டி இறைச்சிகடை போல் நடத்தி, அவற்றை அங்கிருப்பவர்களுக்கு விற்பனை செய்வது குற்றமில்லையா?

இக்குற்றத்தைப் புரியும் கோவில் தர்மகர்த்தாக்களை இறைச்சிக்கடைச் சட்டத்தின் கீழ் மற்றும் விலங்குகளைக் கொடுமைப்படுத்தும் சட்டத்தின் கீழ் கைது செய்து அவர் களுக்கு எதிராக வழக்கு நடத்த முடியுமா? - இது போன்ற கேள்விகளையும் தனது கட்டளையின் போது நீதிபதி இளஞ்செழியன் எழுப்பினார்.

# குமார் குணரட்னத்திற்கு ஒரு வருட சிறைத்தண்டனை!

முன்னிலை சோசலிச கட்சியின் அரசியல் குழு உறுப்பினர் குமார் குணரட்னத்திற்கு ஒரு வருட சிறை தண்டனை விதிக்கப் பட்டுள்ளது. மேலும் அவருக்கு 50,000 ரூபாய் அபராதமும் விதிக்கப்பட்டுள்ளது.

முன்னர் ஜே.வி.பியில் இருந்த அவர், கருத்து வேறுபாடு காரணமாக அக்கட்சியிலிருந்து விலகி, அவுஸ்திரேலியாவுக்கு சென்று அந் நாட்டின் குடியுரிமையையும் பெற்றுக் கொண்டார்.

பின்னர், ராஜபக்ஸ ஆட்சிக் காலத்தில் இலங்கைக்கு மீண்டும் சுற்றுலா விசாவில் வந்த அவர் (இலங்கைப் பிரஜை அல்லாத நிலையில்) அரசியல் நடவடிக்கைகளில் ஈடுபட்டதாக குற்றம் சாட்டப்பட்டு கைது செய்யப்பட்டு பின்னர் அவுஸ்திரேலியாவுக்கு நாடு கடத்தப் பட்டார்.

பின்னர் கடந்த ஜனாதிபதி தேர்தல் காலப் பகுதியில் எந்த சட்ட சிக்கல்களோ அல்லது தொந்தரவுகளோ இன்றி இலங்கைக்கு வந்து முன்னிலை சோசலிசக் கட்சிக் காக அரசியல் நடவடிக்கைகளை முன்னெடுத்தார். பாரிய சர்சைகளுக்கு பின்னர் நாட்டை விட்டு வெளியேற்றப்பட்ட அவர், மீண்டும் அந்த அரசாங்கத்தின் ஆசிர்வாதத்துடனேயே நாட்டுக்குள் வந்து அரசியல் செய்தமை குறித்து பலர் பல்வேறு கருத்துக்களை வெளியிட்டனர்.

எதுஎவ்வாறு இருப்பினும் முன்னிலை சோசலிசக் கட்சி அப்போதைய அரசாங்கத்தின் ஒப்பந்தத்தினை தன்னை வைத்து நிறைவேற்றுவதாக எழுந்த குற்றச் சாட்டை அவர் மறுத்தார்.

இதேவேளை, தேர்தலின் பின்னர் குமார் குணரட்னம் என்பவர் குடிவரவு குடியகல்வு சட்டங்களை மீறி நாட்டில் தங்கியிருப்பதாக, குடிவரவு குடியகல்வு அதிகாரிகளால் சுட்டிக்காட்டப்பட்ட வேளை, அவரை நாட்டில் இருந்து வெளியேற்றக் கூடாது என, முன்னிலை சோசலிசக் கட்சியால் அடிப்படை உரிமை மனு ஒன்று உயர்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப் பட்டது.

எனினும் அந்த மனுவை ஆராய்ந்த நீதிமன்றம் 2015ம் ஆண்டு பெப்ரவரி




18ம் திகதி அவரை நாட்டில் இருந்து வெளியேற்ற முடியும் என குறிப்பிட்டது.

இதனையடுத்து தலைமறைவாக இருந்த குமார் குணரட்னம் கடந்த நவம்பர் 4ம் திகதி கேகாலை - அகுருகெல்ல பகுதியில் வைத்து கைது செய்யப்பட்டதோடு, பின்னர் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்த அவர் விளக்க மறியலில் வைக்கப்பட்டார். இந்நிலையில் தற்போது அவருக்கு மேற்படி தீர்ப்பினை நீதிமன்றம் வழங்கியுள்ளது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# எதிர்கால தீர்மானங்களை நான் மட்டும் தீர்மானிக்க முடியாது. இன்று அறுதியிட்டுக் கூறவும் இயலாது. - முன்னாள் பா.உ. மு.சந்திரகுமாருடன் நேர்காணல்

**– த.ஜெயபாலன்**

முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் தோழர் மு.சந்திரகுமார் ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியில் இருந்து வெளியேறியது தொடர்பாக தேசம்நெற் இன் கேள்விகளுக்கு வழங்கிய பதில்கள் இங்கு பதிவு செய்யப்படுகிறது.

**தேசம்:** ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் உருவாக்கத்தில் ஒருவராக இருந்த நீங்கள் தற்போது அக்கட்சியில்இருந்து வெளியேறுவதாக அறிவித்துள்ளீர்கள். ஏன் இந்த திடீர்முடிவு?

**தோழர் மு.சந்திரகுமார்:** முதலில் இது ஒரு திடீர் முடிவல்ல. நான் வேலை செய்த பிரதேசங்களில் உள்ள மக்கள் மற்றும் என்னுடைய ஆதரவாளர்கள் இடையே காணப்பட்ட உணர்வுகளின் விளைவாகும். அத்துடன் நிகழ்ந்து கொண்டிருக்கும் அரசியற் சூழ்நிலையின் விளைவாகவும் இது அமைகிறது.

**தேசம்:** கட்சிக்குள் ஒரு முரண்பாடு ஏற்பட்டு இருந்தால் நீங்கள் ஏன் கட்சிக்குள் அதனை எழுப்பி இருக்கலாமே? நீங்கள் கட்சியில் இருந்து வெளியேறுவது இது முதற்தடவையல்ல. முன்னைய வெளியேற்றத்திற்கும் தற்போதைய வெளியேற்றத்திற்கும் என்ன வேறுபாடு?

**தோழர் மு.சந்திரகுமார்:** கட்சிக்குள் முரண்பாடுகளை பேசித் தீர்த்தல் என்பது மிக முக்கியமான ஒரு அம்சமே. இந்த அடிப்படையில் என்னுடைய அபிப்பிராயங்களை முன்வைத்து வந்திருக்கிறேன். முன்னைய வெளியேற்றம் என்பது யுத்தச் சூழலில் இருந்த அரசியல் நிலைமைகளின் விளைவானது. இன்றைய வெளியேற்றம் என்பது புதிதாக உருவாகியிருக்கும் அரசியற் சூழலை மையமாகக் கொண்டதும் யுத்தத்திற்குப் பின்னரான அரசியல் தேவையின் விளைவானதுமாகும்.

**தேசம்:** நாடாளுமன்ற உறுப்பினர்களாக தெரிவுசெய்யப்பட்டவர்களில் நீங்கள் மக்களுக்காக உழைத்தவர் என்ற அபிப்பிராயம் பொதுவாகப் பலரிடமும் உள்ளது. அப்படி இருந்தும் கடந்த தேர்தலில் நீங்கள் தோல்வி அடைய என்ன காரணம்?

**தோழர் மு.சந்திரகுமார்:** தமிழ் மக்களுடைய உணர்வு நிலைகளில் சேவைகளை விடவும் தமது தேசிய அடையாளங்களைப் பாதுகாப்பதும் அதற்கான உரிமை சார்ந்த அடிப்படைகளை முன்னிறுத்துவதுமே முக்கியமாக இருக்கிறது. இதனால்தான் மக்களுக்கு அளப்பரிய சேவைகளைச் செய்த பலர் என்னைப் போல தேர்தலின் போது மக்களால் கண்டுகொள்ளப்படாமல் விடப்பட்டிருக்கிறார்கள். ஆனால், அவர்களுக்கு ஒரு வரலாற்று முக்கியத்துவம் உண்டு என்பதை மக்கள் காலம் கடந்தே உணர்கிறார்கள்.

இலங்கைச் சூழலில் இன அடையாளங்களைச் சார்ந்து சிந்திக்க வேண்டியதொரு நிலை தோற்றுவிக்கப் பட்டிருக்கிறது. இதனால் எந்த அடையாளத்தினால் ஒடுக்கப்பட்டோமோ, அந்த அடையாளத்துடனேயே அதற்கெதிராக நாம் போராட வேண்டியுமிருந்தது. ஆகவே, மக்கள் தமது தெரிவுகளில் எதனை முதன்மைப்படுத்துவது என்பதைப்பற்றி வெளிப்படுத்தும் முறையாகவே தேர்தல் முடிவுகள் அமைகின்றன. இதுதான் என் விடயத்திலும் நடந்தது.

**தேசம்:** கடந்த நாடாளுமன்றத் தேர்தலில் வெற்றி பெற்றிருந்தால் நீங்கள் கட்சியில் இருந்து வெளியேறும் முடிவுக்கு வந்திருக்க மாட்டீர்கள் என நினைக்கிறேன். நீங்கள் கட்சியில் இருந்து வெளியேறுவதற்கு காரணம் எனக் குறிப்பிட்ட விடயங்கள் ஒரு இலட்சிய இலக்கே அல்லாமல் நடைமுறைச் சாத்தியமானதல்ல. நீங்கள் தனித்தோ தற்போதுள்ள எந்த அரசியல்கட்சியுடன் இணைந்தோ அந்த இலட்சிய இலக்கை அடைய முடியும் என நினைக்கிறீர்களா?

**தோழர் மு.சந்திரகுமார்:** கட்சியிலிருந்து வெளியேறிய என்னுடைய இந்த நடவடிக்கை தேர்தல் வெற்றி தோல்விகளின் விளைவானது அல்ல. இதைக் கட்சியிலுள்ள பலரும் உணர்வார்கள். கட்சிக்கு நெருங்கிய வட்டாரங்களில் இருந்தவர் களுக்கும் இது தெரியும்.

இனி அடுத்த விடயம், என்னுடைய வெளியேற்றத்துக்கான காரணத்தை நான் தெளிவாகவே குறிப்பிட்டிருக்கிறேன். நான் குறிப்பிட்ட விடயங்கள் நடைமுறைக்குச் சாத்தியமாக்கப்பட வேண்டியவை மட்டுமல்ல, சாத்தியமாகக் கூடியவையும் கூட. அதாவது பாரபட்சமற்ற சமூக நீதியுடனான இனச்சமத்துவத்தையும் ஜனநாயக வலுவுடனான சட்டவாட்சியையுமே நான் வலியுறுத்துகிறேன். இன்றைய உலகம் என்பது இன, மத, சாதிய, பால் வேறுபாடுகளைப் பன்மைத்துவத்துவ அங்கீகாரத்தினூடாக அவற்றின் தனித்துவங்களுடன் இணைத்திருப்பதாகும். இந்த அடிப்படையிலேயே என்னுடைய நோக்கங்களும் இலக்கும் அமைந்திருக்கின்றன. இதை நீங்கள் ஏன் நடைமுறைக்குச் சாத்தியமற்றது எனக் கருதுகிறீங்கள் என்று புரியவில்லை.

தற்போதைய தமிழ் அரசியற் சூழலில் உள்ள போதாமைகளே என்னை இவ்வாறு சிந்திக்கத் தூண்டின.

**தேசம்:** நீங்கள் தனித்து நின்று அடுத்த தேர்தலை எதிர்கொள்ள முடியும் என்று நான் நினைக்கவில்லை. நீங்கள் எந்தக் கட்சியுடன் இணைந்து செயற்படும் எண்ணத்தில் உள்ளீர்கள்?

**தோழர் மு.சந்திரகுமார்:** சமூக அரசியற் செயற்பாட் (தொடர்ச்சி 28ஆம் பக்கம்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சம்பந்தனின் சந்திப்புகளும், சர்ச்சைகளும்!

தமிழ் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் கடந்த வாரம் வடக்கில் பல சந்திப்புக்களை நிகழ்த்தியிருக்கின்றார். கடந்த நாடாளு மன்றத் தேர்தலின் பின்னர், முதற்தட வையாக இவ்வாறான சந்திப்புகளை அவர் மேற்கொண்டார்.

நாடாளுமன்றத் தேர்தலின் பின்னரான காலகட்டத்தில், தமிழ் தேசியக் கூட்டமைப் பிற்குள் பல்வேறு விமர்சனங்களை எதிர்கொண்டு வருகின்றார் சம்பந்தன். அரசாங்கத்தின் நிகழ்ச்சி நிரலுக்கு அமை வாக அவர் நடந்து கொள்வதாகவே பொதுவான குற்றச்சாட்டு முன்வைக்கப் பட்டுள்ளது. இந்நிலையில், சில தெளிவு படுத்தல்களை மேற்கொள்ள வேண்டிய தேவைக்காக அவர் இச்சந்திப்புகளை மேற்கொண்டிருக்கலாம். ஆனால், இந்த சந்திப்புகள் சிலவற்றில் அவர் நடந்து கொண்டமுறை, வெளியிட்ட சில கருத்துக் கள் சர்ச்சைகளை ஏற்படுத்தியுள்ளது.

முல்லைத்தீவு மக்கள் அமைப்புக்களை மாங்குளத்தில் வைத்து சம்பந்தன் சந்தித் தார். பின்னர் கிளிநொச்சியில் சிறிதரன் எம்.பியின் அலுவலகத்தில் சந்திப்பு ஒன்று இடம்பெற்றது. இதன் பின்னர் யாழ்ப்பாணத்திலும் சந்திப்புகள் இடம் பெற்றன.

அரசியல் கைதிகளின் விடுதலை தொடர் பில் இடம்பெற்ற சந்திப்பு ஒன்றில் சம்பந்தன் நடந்து கொண்ட விதம் பலரையும் விசனத்திற்கும், வெறுப்பிற்கும் உள்ளாக்கியுள்ளது. அண்மையில் சிறை யிலிருந்து விடுதலையான அரசியல் கைதிகள் இருவர் சம்பந்தனை சந்தித்து கைதிகள் விடுதலை தொடர்பிலும், அவர்கள் சிறைச்சாலையில் நாளாந்தம் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் குறித்தும் எடுத்துரைத்தனர். அவர்களின் விடுதலை குறித்து அரசாங்கத்திடம் வலியுறுத்தும்– அழுத்தம் கொடுக்கும் தகைமை கூட்ட மைப்பினதும், எதிர்கட்சியினதும் தலை மைப் பொறுப்பிலுள்ள சம்பந்தனுக்கு மட்டுமே உள்ளது என்பதாக அவர்கள் சம்பந்தனிடம் கூறினர். இச்சந்திப்பு காணொளியாக ஊடகங்களில் வெளி யானது.

**– விஸ்வா**

சில நிமிடங்கள் மட்டுமே இடம்பெற்ற இச்சந்திப்பில், சந்திக்க வந்திருந்த இருவரது முகங்களையும் சம்பந்தன் பார்க்கவே இல்லை. பத்திரிகை ஒன்றை வைத்து பார்த்துக் கொண்டு, வேண்டா வெறுப்பாக அவர்களுக்கு பதில் சொல்லிக் கொண்டிருந்தார். கைதிகளை விடுவிக் கும் திறப்பு தன்னிடமில்லை என்று ஒரு கட்டத்தில் அவர் குறிப்பிட்டார்.

அவரது பேச்சும், உடல் மொழியும் மக்களால் தெரிவு செய்யப்பட்டு உயர்ந்த பொறுப்பிலிருக்கும் ஒரு தலைவருக்குரிய பண்பாக அமைந்திருக்க வில்லை. இச்சந்திப்பை அவர் விரும்பியிருக்கா விடில் அதனைத் தவிர்த்திருக்கலாம். அதனை விடுத்து, சந்திக்க வந்தவர் களின் முன்பாக அவர் அவ்வாறு நடத்திருக்கக் கூடாது என்பதே பலரது அபிப்பிராயம்.

சம்பந்தன் மற்றும் சுமந்திரன் ஆகியோரை குறிவைத்து அடிக்கடி தாக்குதல் நடத்தி வரும் முன்னாள் நாடாளுமன்ற உறுப் பினர் சுரேஸ் பிரேமச்சந்திரனை மனதில் வைத்தும் சம்பந்தன் சில கருத்துக்களை யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற ஊடகவிய லாளர்கள் சந்திப்பில் குறிப்பிட்டுள்ளார்.

தமிழ் தேசிய கூட்டமைப்பு ஒரு இலக்கை நோக்கி பயணித்துக் கொண்டிருப்பதாக வும், ஆனால், அதனை குழப்ப வேண்டும் என்ற நோக்கில் சிலர் கூட்ட மைப்பிற்குள் ளும் இருக்கிறார்கள் என அவர் குறிப் பிட்டார்.

முன்னதாக, யாழ். ஊடக அமையத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கருத்து தெரிவித்த சுரேஸ் பிரேமச்சந்திரன், வடக்கு மாகாணத்தில் இடம்பெற்று வரும் நில அபகரிப்புக்கள், பௌத்த மயமாக்கல் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு தொடர்பாக கூட்டமைப்பு அரசாங்கத்துடன் பேச்சு நடத்த வேண்டும் எனவும், தமிழ் தேசியக் கூட்டமைப்பு மற்றும், எதிர்க்கட்சி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தலைமை, மாவட்ட அபிவிருத்திக் குழு தலைமை, பிரதேச அபிவிருத்திக் குழு தலைமை ஆகியவற்றை வைத்திருந்து என்ன பலன்? என கேட்டிருந்தார்.

இது தொடர்பில் ஊடகவியலாளர்கள் எழுப்பிய கேள்விக்கு பதில் அளித்த சம்பந்தன், தமிழ் தேசிய கூட்டமைப்பு ஒரு இலக்கை நோக்கி பயணித்துக் கொண்டிருக்கிறது. இதனை குழப்ப பலர் நினைக்கிறார்கள். அதாவது குழம்பிய குட்டைக்குள் மீன் பிடிக்க நினைக்கிறார்கள். இவ்வாறான பலரில் சிலர் தமிழ் தேசிய கூட்டமைப்பிற்குள்ளும் இருக்கிறார்கள் என்றார்.

இதன் பின்னரும் சுரேஸ் பிரேமச்சந்திரன் சமபந்தன் யாழ்ப்பாணத்தில் தெரிவித்த சில கருத்துக்களை விமர்சித்துள்ளார். 2016 இல் தமிழ் மக்களுக்கு அரசியல் தீர்வு கிடைக்கும் என உறுதியாக கூறி வந்த சம்பந்தன் இப்போது அது தனது கணிப்பு மட்டுமே என்று கூறுகின்றார். இது மக்களை குழப்பத்திலாழ்த்தியுள்ளது என அவர் கூறியிருக்கின்றார்.

"ஆட்சி மாற்றம் ஏற்பட்டுள்ளது. மைத்திரிபால சிறிசேன பதவிக்கு வந்துள்ளார். அவர் இந்தப் பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வு காண விரும்புகிறார் என்பது என் கணிப்பு. ரணில் அவருக்கு துணையாக பிரதமராக வந்துள்ளார். அவருக்கு அதே சிந்தனை உள்ளது என்பது என் கணிப்பு. அனைவரும் விசுவாசமாக செயற்பட்டால் இந்த வருடத்திற்குள் இது நிறைவடைய வேண்டும் என்பது என் கணிப்பு"

இவ்வாறு சம்பந்தன் யாழ்ப்பாணத்தில் வைத்து கூறியிருந்தமை தொடர்பிலேயே சுரேஸ் மேற்கண்டவாறு குறிப்பிட்டிருக்கின்றார்.

இவை ஒரு புறமிருக்க, வட மாகாணசபையின் ஆளும் கட்சி உறுப்பினர்களுடனான சந்திப்பின் போது, சம்பந்தர் இராஜதந்திரத்துடன் கருத்துக்களை வெளியிட்டிருந்தமையினையும் இங்கு குறிப்பிட வேண்டும்.

வட மாணசபையின் ஆளும் தரப்பிற்குள் முரண்பாடுகள் தோன்றியிருக்கும் நிலையில், அது தொடர்பில் உறுப்பினர்கள் சம்பந்தரிடம் எடுத்துரைத்தனர். வட மாகாண சபை அமைச்சர்களை மாற்றி அந்த இடத்திற்கு புதியவர்களை நியமிக்க வேண்டும் என விடுக்கப்பட்ட கோரிக்கையை சம்பந்தன் நிராகரித்தார். வட மாகாண சபையின் சில குறைபாடுகள் குறித்த விமர்சனங்கள் இருக்கலாம். ஆனால் அது முதலமைச்சரின் குறைபாடோ அல்லது அமைச்சர்களின் குறைபாடோ இல்லை. அவர்கள் வினைத்திறன் அற்றவர்கள் எனச் சொல்ல முடியாது. அடிப்படையில் 13 ஆவது திருத்தச் சட்டத்தில் உள்ள குறை பாடுகளே இவற்றுக்குக் காரணம் எனவும் சம்பந்தன் தெரிவித்தார்.

இந்தக் கூட்டத்தில் கலந்துகொண்ட வட மாகாண சபை பிரதி அவைத் தலைவர் அன்ரனி ஜெயநாதன், வடக்கு மாகாண அமைச்சர்களை மாற்ற வேண்டும் என உறுப்பினர்கள் 16 பேர் கையெழுத்திட்ட கடிதத்தை சம்பந்தனிடம் கையளித்தார்.

ஆனால்,ஒரு சிலரை இலக்கு வைத்து அமைச்சரவையை மாற்றும் முடிவை அனுமதிக்க முடியாது என்றார் சம்பந்தன்.

மாகாண சபையில் சில குறைபாடுகள் இருப்பதான விமர்சனங்களை ஏற்றுக் கொண்ட அவர், ஆனால் அது முதலமைச்சர் அல்லது அமைச்சர்களின் வினைத்திறன் அற்ற செயற்பாடுகளால் ஏற்பட்ட தென்பதை ஏற்றுக்கொள்ள முடியாது எனத் தெரிவித்தார். வட மாகாண முதலமைச்சர் மற்றும் அமைச்சர்கள் சிறப்பாக செயலாற்றுவார்கள் என்ற நம்பிக்கை உள்ளது எனவும் அவர் கூறினார்.


அத்துடன், புதிய அரசாங்கத்தின் செயற் பாடுகள் தொடர்பில் அவசரப்படக் கூடாது என்பதையும் சம்பந்தன் மக்கள் சந்திப்புக்களில் தெளிவுபடுத்தினார். முன்னைய, ராஜபக்ஸ அரசாங்கத்தில் நடைபெறாத சில விடயங்கள் இப்போது நடைபெற்றுள்ளன. வடக்கு கிழக்கில் கட்டம்கட்டமாகவேனும் மக்களின் காணிகள் விடுவிக்கப்பட்டு வருகின்றன. மேலும் சில விடயங்கள் நடைபெற்று வருகின்றன.

புதிய அரசாங்கத்தின் இந்த செயற்பாடுகளில் வேகம் போதாதிருந்தாலும் காரியங்கள் நடைபெற்று வருவதை நாம் நிராகரிக்க முடியாது. ராஜபக்ஸ அரசாங்கம் தொடர்ந்து இருந்திருக்குமானால் இவற்றில் எதுவுமே நடைபெற்றிருக்காது என்றும் சம்பந்தன் தெரிவித்துள்ளார்.

தமிழருக்கு எதனையும் வழங்கக் கூடாது என்று தெற்கில் இனவாத கூச்சல்கள் இடம்பெற்று வருகின்றது. அதனைக் கடந்தே புதிய அரசாங்கம் தனது கடமைகளை செய்ய வேண்டியுள்ளது.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தமிழ் மக்களுக்கான தீர்வினை வழங்க வேண்டும் என சிங்கள மக்கள் மத்தியில் கூறி வருகின்றார். மீண்டும் வன்முறைகள் நாட்டில் இடம் பெறாமலிருக்க வேண்டுமானால் தமிழ் மக்கள் கோரும் நியாயமான அதிகாரங்களை நாம் அவர்களுக்கு வழங்க வேண்டும் என அவர் பொலன்னறுவை போன்ற சிங்களப் பிரதேசங்களில் சிங்கள மக்கள் மத்தியில் ஜனாதிபதி உரையாற்றி வருகின்றார். இவை ஊடகங்களில் வெளிப்படுத்தப் படுவதில்லை. சிங்கள ஊடகங்கள் மட்டுமன்றி தமிழ் ஊடகங்களும் இவ்வாறான செய்திகளை வெளிபடுத்துவதில்லை என்றும் சம்பந்தன் கிளிநொச்சியில் இடம்பெற்ற சந்திப்பில் வைத்து குறிப்பிட்டுள்ளார்.

இவ்வாறு யதார்த்தமான சில கருத்துக்களையும் வெளியிட்டுள்ள சம்பந்தன் சில சந்திப்புகளில் நடந்து கொண்ட முறையினால் அவரது இந்த சந்திப்புகள் ஒட்டுமொத்தமாகவே சர்ச்சைக்குரியதாக மாறிவிட்டது.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ஈழ அகதிகளும் மனிதர்கள் தானே?

85 குடும்பங்கள் வாழும் ஒரு சிறு குடியிருப்புத்தான் நாகாவதி அணை ஈழ அகதிகள் முகாம் ஆகும். இது தர்மபுரி மாவட்டம், பென்னாகரம் தாலுக், அரகாசணஹள்ளி பஞ்சாயத்தில் அமைந்துள்ளது.

1987இல் ஆரம்பிக்கப்பட்ட இம்முகாமில், தார் சீட்டுகளால் வேயப்பட்ட, 10X10 அடி பரப்பும் 6 அடி உயரமும் கொண்ட, லயம் கணக்கான தற்காலிக கொட்டகைத் தொகுப்புகள் அமைக்கப் பட்டன. 1992இல் இக்கொட்டைகளுக்கு அஸ்பெர்ரஸ் கூரைகள் மாற்றப்பட்டன. 85 குடும்பங்களில் 43 குடும்பங்கள் தமது புதிய தலைமுறையினருடன் இன்னமும் (இந்நாள்வரை) தற்காலிகமாகப் போடப்பட்ட அதே கொட்டகைளிலேயே வசிக்க கட்டாயப்படுத்தப்பட்டுள்ளார்கள்.

தமக்கு புதிய வீடுகள் தேவையென்று 29.9.2007இல் இருந்து, 03.02.2015வரை 12 மனுக்கள் உரிய அரசு அதிகாரிகளிடம் அளித்துள்ளனர். மாவட்ட ஆட்சியர் உட்பட பலர் வந்து பார்த்தும் சென்றனர். 43 புதிய வீடுகள், பெண்களுக்கான குளிய லறைத் தொகுப்பு இரண்டு (தற்போது குளியலறை எதுவுமே யில்லை), 5 அறைகள் கொண்ட மலசலகூடத் தொகுப்பு ஒன்று, தெருவிளக்குகள், வீதி, (43 வீட்டுக்கும் வீதிகள் இல்லை), வடிகால் வசதி ஆகியவை செய்து தரப்படும் என ஒத்துக்கொண்டார்கள். மாவட்ட ஆட்சியர் உட்பட அனைத்து அதிகாரிகளும் நேரில் வருகை தந்து மக்களுக்கு வாக்குறுதி அளித்தார்கள்.

228குடும்பங்கள் **P.W.D** குவாட்டர்ஸ் வீடுகளில் வசிக்கிறார்கள். இவ்வீடுகளும் அவை கட்டிய காலத்தில் இருந்து எந்தத் திருத்த மும் செய்யப்படவில்லை. இவற்றில் சில உடைந்து விழும் நிலையில் உள்ளன. அவ்வீடுகள் அனைத்தும் திருத்தித் தரப்படும் எனவும் உறுதியளிக்கப்பட்டது.

இவை அனைத்திற்கும் அவசியமான விவரங்கள் அனைத்தும் இருதடவை விலாவாரியாக பெற்றுக்கொள்ளப்பட்டன. பணம் ஒதுக்கப்பட்டு விட்டது எனவும் கூறினார்கள். தொகையும் வாய் மூலம் கூறப்பட்டது.

ஆனால், கடந்த வருடம் இது தொடர்பாக எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. பொறுப்பான பதில் எதுவும் கூடத் தெரிவிக்கப் படவில்லை. இதனால், நிர்வாகக் குழு கலைந்தது, தலைவரும் பதவி விலகினார். இன்று முகாமிற்கென தலைவர் எவரும் இல்லை.

இந் நிலையில், 40 வீடுகளுக்கும் கூரை மட்டும் மாற்றப்படும் என தற்போது பேசுகிறார்கள். 23-03-2016 புதன் கிழமை கூரை மட்டும் மாற்றுவதற்கு சாமிபூசை போடுவதற்காக **P.W.D Contractor** ஒருவர் முகாம் வந்தார். மக்கள் அதற்கு சம்மதிக்காமல் திருப்பி அனுப்பி விட்டார்கள். கூரை மட்டும் மாற்ற நாம் சம்மதிக்க மாட்டோம் என சம்பந்தப்பட்ட மக்கள் அதிகாரிகளுக்கு மனு கொடுத்துள்ளார்கள்.

அவ்விதமானால் இதுவரை முகாம் மக்கள் ஆசைகாட்டி அதிகாரிகளால் ஏமாற்றப்பட்டு வந்தார்களா என்ற சந்தேகம் எழுகிறது. இல்லையேல் இதற்கென ஒதுக்கப்பட்ட நிதி வேறு திட்டங்களுக்குத் திருப்பப்பட்டு விட்டதா என்று கேட்கத் தோன்றுகிறது.

முகாம் மக்களின் அனைத்து முயற்சிகளும் புறக்குடத்தின் மீது ஊற்றப்பட்ட நீர்போல வீணாகி விட்டது. தமது நேரடி அதிகாரிகளுக்கு மனுக்கள் மீது மனுக்களாகக் கொடுக்கும் முகாம் மக்களின் எந்த முயற்சியும் பலனளிக்க மாட்டாது என்றே தோன்றுகிறது. ஆகவே அரசு அதிகாரிகளால் ஏற்றுக்கொள்ளப்பட்ட முகாம் மக்களின் இக்கோரிக்கைகள் பொது வெளிக்கு முன்வைக்கப்படுகின்றன. (25-03-2016)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மங்கையற்கரசி அமிர்தலிங்கம்

## இறுதி விடைபெறும் தமிழ் தேசிய விடுதலைப் பெண்!

மங்கையற்கரசி அமிர்தலிங்கம் தமிழ் தேசியத்தின் ஒரு அடையாளமாகவே பார்க்கப்பட்டார். கிட்டத்திட்ட நான்கு தசாப்தங்களுக்கு முன் தனது எழுச்சிப்பாடல்களால் தமிழ் தேசியத்தை எழுச்சியுறச் செய்த அவர் நூற்றுக் கணக்கான ஆயிரக்கணக்கான இளைஞர்களை அணிவகுத்து வந்து தன் கணவருக்கு இரத்தத் திலகமிட வைத்தார்.



அன்று அவ்வாறு திலகமிட்ட பால மோட்டை சிவம் போன்ற இளைஞர்கள், நரைத்த முடியும் நரைத்த தாடியுமாக அவரின் இறுதி நிகழ்வில் கலந்து கொண்டு அஞ்சலி செய்ய அணிவகுத்து நின்றமை கால இடைவெளியையும் அது அரசியலில் ஏற்படுத்திய அகன்ற இடைவெளியையும் முரண்நகையாகக் காட்டி நின்றது.

அன்று தளபதியாக கொண்டாடப்பட்ட அ.அமிர்தலிங்கம் அவர்களுக்கு இரத்தத் திலகமிட்டவர்களில் எனது சகோதரனும் ஒருவர். அவரைப் போன்ற பல ஆயிரம் இளைஞர்கள் தங்கள் இளைமைக் காலத்திலேயே வரலாறாகிப் போனார்கள். அல்லது வரலாறாக்கப்பட்டார்கள்.

நானும் எனது வரலாற்றுக் கடமையாக அவருக்கு அஞ்சலியைச் செலுத்த அணி வகுத்து நின்ற போது நினைவுகள் பின்நோக்கி நகர்ந்தது. யூலை 13, 1989இல் படுகொலை செய்யப்பட்ட அ. அமிர்தலிங்கம் அவர்களின் பூதவுடல் தமிழ் மக்களின் அஞ்சலிக்காக யாழ். கொண்டு வரப்பட்ட போது சாரை சாரையாக மக்கள் பல மணிநேரம் காத்து நின்று அவருக்கு தமது இறுதி அஞ்சலியைச் செலுத்தினர். அப்போது நானும் அன்றும் இன்றும் எனது நண்பனான பொன். சிவகுமாரும் சென்று எமது இறுதி அஞ்சலியைச் செலுத்தியதும் அன்று எம்மோடு அஞ்சலி செலுத்திய பொன். சிவபாலன் மேயராகி பின் படுகொலை செய்யப் பட்டதும் வரலாறு.

தமிழீழ விடுதலைப் போராட்ட வரலாற்றின் முதல் அத்தியாயம் திரு - திருமதி அமிர்த லிங்கம் என்றால் அது மிகையல்ல. தமிழீழக் கோரிக்கையை தமிழர் விடுதலைக் கூட்டணி முன் வைத்ததும் அதனை அமீர் தம்பதிகள் முன்னெடுத்ததும் இன்றும் அரசியல் சர்ச்சைக்குரியதாகவே உள்ளது. அன்று சரிந்து கொண்டிருந்த தமிழ் தேசிய தலைவர்களின் வாக்கு வங்கியை தக்க வைப்பதற்காகப் பயன்படுத் தப்பட்ட துருப்புச் சீட்டாகவே தமிழீழக் கோரிக்கையை, தமிழ் தேசிய அரசியலை விமர்சிப்பவர்கள் பார்க்கின்றனர். பிற்காலத்தில் படுகொலை செய்யப்பட்ட தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் வே.பிரபாகரன், தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர்களைப் படுகாலை செய்வதற்கு இந்தக் காரணத்தையே முன் வைத்தார்.

தமிழீழக் கோரிக்கையை முன்வைத்த காரணம் தொடர்பில் இறுதிநிகழ்விலும் சிறுகுழுக்களாக நின்று உரையாடல்கள் இடம்பெற்றது. ஒரு அரசியல் குடும்ப உறுப்பினரின் இறுதிநிகழ்வில் அரசியல் உரையாடலை நடத்துவதுதான் அவருக்கு செய்கின்ற மிகப்பொருத்தமான கௌரவமாக இருக்க முடியும். தமிழீழக் கோரிக்கையை தமிழர் விடுதலைக் கூட்டணி என்ன காரணத்திற்காக முன் வைத்திருந்தாலும், வெகு சீக்கிரமாகவே புற யதார்த்தம் அவர்களை அதனை கைவிடச் செய்தது.

ஆனால், தமிழீழ விடுதலைக்கு போராடப் புறப்பட்ட இளைஞர் அமைப்புகளோ அவர்களை அவர்களது அரசியல் தவறுக்காக அவர்களது அரசியல் உரிமையை மறுக்கத் தலைப்பட்டனர். தமிழீழ விடுதலைப் புலிகள் இன்னும் சற்று மேலே சென்று அவர்களுக்கு மரண தண்டனையையே விதித்தனர். ஆனால் தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைமைகளுக்கு தண்டனை வழங்குகின்ற அளவுக்கு, தமிழீழ விடுதலைப் புலிகள் உட்பட முன்னணியில் நின்ற எந்த இளைஞர் போராட்ட இயக்கமும் அடிப்படை நேர்மையுடன் செயற்பட்டு இருக்கவில்லை என்பதும் மிக மோசமான அரசியலை அவர்கள் கொண்டிருந்தனர் என்பதுமே உண்மை.

அரசியல் என்பது இயலாததை இயலுமாக்குகின்ற கலை என்பார்கள். தனது வரலாற்றுத் தவறை உணர்ந்து கொண்டாரோ இல்லையோ அ.அமிர்த லிங்கம் இந்தியாவின் ஊடாக உருவாக்கிய இலங்கை- இந்திய ஒப்பந்தத்தின் அடிப் படையில் உருவாக்கப்பட்ட, வடக்கு-கிழக்கு இணைந்த மாகாண சபையே சுதந்திரத்திற்குப் பின்னான இலங்கையில் தமிழர்களுக்காக உருவாக்கப்பட்ட ஒரு உயர்ந்தபட்ச அரசியல் தீர்வாக இன்றும் உள்ளது. ஆனால் அ.அமிர்தலிங்கம் அடைந்த அரசியல் தீர்வை இன்று வரை தக்க வைக்க வைத்துக்கொள்ள முடியாதவர்களாகவே தமிழ் அரசியல் தலைவர்கள் இன்றும் உள்ளனர்.

1987இல் ஒரு சில ஆயிரம் பேர்களின் இழப்புகளே (சகோதரப் படுகொலை கள் உட்பட) ஏற்பட்ட நிலையில் உருவாக் கப்பட்ட வடக்கு-கிழக்கு இணைந்த மாகாண சபையை மறுத்தவர்கள் கிட்டத்தட்ட கால்நூற்றாண்டுக்குப் பின், பிரிக்கப்பட்ட வடக்கு கிழக்கு மாகாண சபைகளில் தொங்கிக் கொண்டு அரசியல் செய்கின்றனர். இவர்கள் எவ்வித நெருடலும் இன்றி தங்கள் வாகன மற்றும் வசதிகளை கவனித்துக்கொண்டு மக்களை மறந்துவிட்டனர். இவர்களோடு ஒப்பிடுகையில் தங்கள் இளமையையும் வாழ்வையும் அரசியலில் அர்ப்பணித்த திரு. திருமதி அமிர்தலிங்கம் தம்பதியினரின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரசியல் வாழ்வு மதிப்புக்குரியதே.

அன்றும் இன்றும் அ.அமிர்தலிங்கம் தம்பதிகளை அரசியல் இருட்டடிப்புச் செய்கின்றஅரசியலைதமிழீழவிடுதலைப் புலிகளும் அவர்களது ஊடகங்களும் தொடர்ச்சியாக மேற்கொண்டு வருகின் றன. முள்ளிவாய்க்கால் வரை வன்னி மக்களை இழுத்துச் சென்று அவர்களின் படுகொலைக்கு காரணமான இந்த ஊடகங்கள் தங்கள் வரலாற்றுத் தவறு களை இன்னமும் கற்றுக் கொள்ள வில்லை. மங்கையற் கரசியின் மறை வைக் கூட பதிவுசெய்ய இந்த ஊடகங்கள் மறுக்கின்றன. ஆனால், அவரின் கண வர் வென்றெடுத்த வடக்கு-கிழக்கு மாகாண சபையில் ஒரு ஆசனமாவது கிடைத்துவிட வேண்டும் என்பதற்காக இவர்கள் பட்டபாடும், மண் கவ்வியதும் யாவரும் அறிந்ததே.

தமிழீழ விடுதலைப் போராட்டத்தினை எழுச்சியடையச் செய்த காலம் சென்ற மங்கையற்கரசி அமிர்தலிங்கம் அவர்க ளின் இறுதி நிகழ்வுகள் மார்ச் 20- 2016 இல் சிறப்பாக நடைபெற்றது. உறவுகள், நட்புகள் அவற்றுக்கும் மேலான முரண் பட்ட அரசியல் கருத்தியலைக் கொண்ட அரசியல் ஆர்வலர்கள் என ஆயிரத் துக்கும் மேற்பட்டவர்கள் மங்கையற் கரசியின் இறுதி நிகழ்வில் கலந்து கொண்டு தங்கள் இறுதி அஞ்சலியைத் தெரிவித்தனர்.

மங்கையற்கரசி அமிர்தலிங்கத்தின் நினைவு நிகழ்வுகளில் கலந்து கொண்ட வர்கள் பலருமே அவரை தனிப்பட்ட ஒரு தாயின், பெண்ணின் மறைவாக அதனைப் பார்க்கவில்லை. அமிர்தலிங் கம் தம்பதிகளின் புதல்வர்களான காண்டீபன், பகீரதன் ஆகியோரது இறுதி அஞ்சலி பேச்சுக்கள் கூட அவரை ஒரு அரசியல் பெண்ணாகவே காட்டி நின்றது.

அவரது இறுதி நிகழ்வில் கலந்து கொள்வதற்காக நாடாளுமன்ற உறுப்பி னரும் தமிழீழ மக்கள் விடுதலைக் கழகத்தின் தலைவருமான தருமலிங்கம் சித்தார்த்தன் இலங்கையில் இருந்து வந்திருந்தார். அ.அமிர்தலிங்கம் தம்பதி களுடன் எப்போதும் நல்லுறவைப் பேணி வந்த தமிழீழ விடுதலைக் கழகம். அரசியல் ரீதியிலும் தமிழர் விடுத லைக் கூட்டணியுடன் பெருமளவில் முரண்பட்டுக் கொள்ளவில்லை. மேலும், சித்தார்த்தனின் தந்தை முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் தருமலிங்கம் தமிழர் விடுதலைக் கூட்டணியைச் சேர்ந்தவர் என்பதும் இங்கு குறிப்பிடத் தக்கது.

சித்தார்த்தன் தனது இரங்கல் உரையில் அ. அமிர்தலிங்கம் தம்பதிகளுடனான தனது நெருக்கத்தை நினைவு கூர்ந்தது டன். தமிழ் பெண்கள் அரசியலில் இருந்து ஒதுங்கி இருந்த போது தமிழ் தேசிய அரசியலில் மங்கையற்கரசி அமிர்தலிங்கம் முன்னின்று செயற் பட்டதை சுட்டிக்காட்டினார். பா உ சித்தார்த்தன் மேலும் தெரிவிக்கையில், தமிழ் தேசிய எழுச்சியிலும் தமிழ் மக்க ளின் உரிமை களுக்கான ஜனநாயகப் போராட்டங்களிலும் துணிச்சலுடன் பங் கேற்ற முதல் தமிழ் பெண் போராளியாக அவரை வரலாறு பதிவு செய்யும் எனக் குறிப்பிட்டார்.

கிங்ஸ்ரன் சேர்பிரன் லிபிரல் டெமொகிரட் கட்சியின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் எட் டேவி தனது இரங்கல் உரையில் மங்கையற்கரசி தமிழ் மக்களின் அரசியலில் ஒரு முக்கிய பெண்ணாக இருந்த போதும் தாங்கள்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு நாளும் அரசியல் பற்றி கதைத்தி ருக்கவில்லை என்றும் அதனை கதைத் திருக்கலாம் எனத் தான் தற்போது எண்ணுவதாகவும் குறிப்பிட்டார். சமூக நிறுவனங்களில் அவரது ஈடுபாட்டை நினைவுகூர்ந்த எட் டேவி, மிகப் பண்பானவராக மங்கையற்கரசி அமிர்த லிங்கத்தை நினைவுகூர்ந்தார்.

மங்கையர்கெல்லாம் அரசி என்று தனது உரையில் அவருக்கு முடிசூட்சிய கவுன்சிலர் போல் சத்தியநேசன், அவர் இறுதிவரை பதில் தேடிய இரு கேள்விகளுக்கு பதில் கிடைக்காமலேயே மரணமடைந்தார் எனத் தெரிவித்தார். தனது கணவர் செய்த தவறு என்ன? ஏன் அவரைப் படுகொலை செய்தார்கள்? என்ற கேள்விகளை மங்கையற்கரசி தனக்கு சந்தர்ப்பம் வழங்கப்பட்ட அரசியல் அரங்குளில் எப்போதுமே எழுப்பி வந்தார். அதற்கான விடையை இப்போதாவது சம்பந்தப்பட்டவர்கள் முன் வைத்து அவரது ஆத்மாவை சாந்தி யடையச் செய்ய வேண்டும் என்றும் கவுன்சிலர் போல் சத்தியநேசன் அங்கு கேட்டுக்கொண்டார்.

இந்நிகழ்வில் ஈலிங் அம்மன் ஆலயத்தின் சார்பில் உரையாற்றிய இரத்தினசிங்கம், பாண்டி பசார் துப்பாக்கிப் பிரயோகத்தில் ஈடுபட்டவர்களை விடுவிப்பதில் அவர் கள் மேற்கொண்ட முயற்சிகளை அங்கு நினைவு கூர்ந்தார். அவ்வாறு விடு விக்கப்பட்டவர்களில் ஒருவரான வே. பிரபாகரனே பின்னாளில் அமிர்தலிங்கம் உட்பட தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைவர்களை படுகொலை செய்வதற்கு காரணமானார். பாண்டி பசார் சம்பவத் தில் வே.பிரபாகரனை மோட்டார் சைக் கிளில் ஏற்றிச் சென்ற சி.ராகவன் மங்கையற்கரசிக்கு தனது அஞ்சலியைச் செலுத்துவதற்கு அங்கு வந்திருந்தார்.

தமிழ் தேசிய அரசியலில் அதன் ஆரம்ப காலகட்டத்தில் முக்கிய பாத்திரங்கள் ஏற்ற பலரும் தங்கள் இறுதி அஞ்சலியைச் செலுத்த அங்கு கூடி இருந்தனர்.

அமிர்தலிங்கம் தம்பதிகளின் இரண்டா வது மகன் பகீரதன் அமிர்தலிங்கம், தனது தாயின் நினைவுகளை வரலாற்று நினைவுகளுடாகப் பகிர்ந்து கொண்டார். அவருடைய நினைவுப் பதிவுகள் மிகவும் உருக்கமானதாக அமைந்திருந்தது. சிறைசென்ற தாயை தாங்கள் பார்க்கச் சென்றபோது அவருடன் அணையாமல் இருந்ததால் ஏற்பட்ட தாய்மையின் வலியை அங்கு நினைவு கூர்ந்தார் பகீரதன். தனது தாய் யாருக்கு உணவு பரமாறினாரோ அவர்களே பின்னாளில் தனது தந்தையை படுகொலை செய்த போது அவர்பட்ட துடிப்பையும் வலியை யும் பகீரதன் அனைவரதும் கண்முன் கொண்டுவந்து நிறுத்தினார். அதனைச் செய்தவர்கள் பிற்காலத்தில் படுகொலை செய்யப்பட்ட போதும் தனது தாய்மையின் வலியுடன் அவர் துடித்ததையும் பகீரதன் அங்கு நினைவு கூர்ந்து வரலாற்றின் முரண்நகையை கோடிட்டுகாட்டினார்.

மங்கையற்கரசியின் இறுதி நிகழ்வில் இன்னமும் தமிழீழ விடுதலைப் புலிகளின் அனுதாபிகளான கோபிரட்ணம் (ஒரு பேப்பர்), தமிழீழ விடுதலைப் புலிகளின் பொறுப்பாளராக இருந்த நடேசனின் சகோதர், மாவீரர் தினங்களை ஏற்பாடு செய்வதில் முன்நிற்கும் தம்பிராஜா உட் பட பலர் கலந்து கொண்டனர்.

மங்கையற்கரசி அமிர்தலிங்கம் அவர் களின் இறுதி நிகழ்வில் அவர் பிற் காலங்களில் ஈடுபாடு காட்டிய சமூக அமைப்புகளின் பிரதிநிதிகள் பலரும் தங்கள் இரங்கலை வெளியிட்டனர். அரசியலில் அமிர்தலிங்கம் தம்பதிகளு டன் தொடர்புட்டு செயற்பட்ட புஸ்பராணி, கலாநிதி நித்தியானந்தன், ஐ.தி. சம்பந்தன், மு.நித்தியானந்தன் என்று பலர் தங்கள் அரசியல் நினைவுகளைப் பகிர்ந்து கொண்டனர் ●

---

(22ஆம் பக்கத் தொடர்ச்சி) டாளர்கள் ஒரு போதும் எதிர்மறையாகச் சிந்திக்க முடியாது. நல்லவற்றைச் சாத்தியப்படுத்து வதற்கு அர்ப்பணித்து உழைப்பதைப் பற்றியும் அவற்றைச் சமூக நன்மையாக மாற்றுவதைப் பற்றியுமே சிந்திப்பார்கள். ஆகவே எதிர்காலத்தில் நான் எப்படிச் செயற் படுவது, எவ்வாறான தீர்மானங்களை எடுப்பது, தேர்தல்களை எப்படி எதிர்கொள் வது என்பதையெல்லாம் நான் மட்டும் தனித்துத் தீர்மானிக்க முடியாது. அதைப் போல இன்று அவற்றைப் பற்றி அறுதியிட் டுக் கூறவும் இயலாது. சமூக, அரசியல் தீர்மானங்களும் செயற்பாடுகளும் சூழலை யும்வரலாற்றையும் சமூகநிலைமைகளை யும் கருத்தில் எடுத்தே தீர்மானிக்கப்பட வேண்டியவை.

**தேசம்:** ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியில் இணைவதற்கு அதிக வாய்ப்புகள் இருப்ப தாக தெரிகிறது?

**தோழர் மு.சந்திரகுமார்:** அவ்வாறு இணையப் போவதில்லை. அதில் உண்மை இல்லை.

**தேசம்:** பா.உ. எஸ். சிறீதரன் இருக்கின்ற போது தமிழ் தேசிய கூட்டமைப்புடன் இணை வதற்கான வாய்ப்புக்கள் இருக்கின்றதா?

**தோழர் மு.சந்திரகுமார்:** நட்புறவு ரீதியில் பல கட்சிகளுடன் கலந்துரை யாடி வருகின்றேன். ஆனால், கட்சியில் இணைவது குறித்து கலந்துரையாட வில்லை.

**தேசம்:** ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி தோழர் தவராஜா போன்றவர்களை தொடர்ந்தும் தக்க வைப்பதற்கு என்ன செய்ய வேண்டும் என்று நினைக் கிறீர்கள்?

**தோழர் மு.சந்திரகுமார்:** தோழர் தவராஜா போன்றவர்களை தொடர்ந்தும் தக்க வைப்பதற்கு என்ன செய்ய வேண்டும் என்பதை ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியே தீர்மானிக்க வேண்டும்.

**தேசம்:** கடந்த பல ஆண்டுகளாக இணைந்து பணியாற்றிய கட்சித் தோழர் களுக்கு நீங்கள் என்ன கூற விரும்பு கிறீர்கள்?

**தோழர் மு.சந்திரகுமார்:** சூழ்நிலை களின் யதார்த்தங்களைப் புரிந்து கொண்டு செயற்படுவது அவசியம் என்பதே வரலாற்றின் விதி. இதை அவர்களும் அறிவார்கள் என நம்புகிறேன்.

**தேசம்:** செயலாளர் நாயகம் தோழர் டக்ளஸ் தேவானந்தா எந்த விடயங்களில் மாற்றங்களை ஏற்படுத்தினால் நீங்கள் மீண்டும் ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியில் இணைவது பற்றி மீளச் சிந்திப்பீர்கள்?

**தோழர் மு.சந்திரகுமார்:** தமிழ் மக்கள் ஒரு பொதுத்தளத்தில் பல்வேறு நல்ல சக்திகளும் ஒன்றிணைகின்ற பேரிணை வொன்றையே விரும்புகிறார்கள். அதைப் பற்றிச் சிந்திக்கும்போது அதற்கான சாத்தி யங்கள் உருவாகலாம்.

**தேசம்:** இதுவரை கால உங்கள் அரசியலில் சாதித்த விடயங்கள் என்ன? இனி சாதிக்க விரும்புவது என்ன?

**தோழர் மு.சந்திரகுமார்:** சாதித்தவற் றைப் பற்றி மக்களே சொல்ல வேண்டும். சாதிக்கவுள்ளவை தமிழ் பேசும் மக்களு டைய பொது ஐக்கியத்தில் உருவாகும் அரசியல் விளைவுகளாகும்.

**தேசம்:** மூன்று தசாப்தங்களுக்கு மேலாக ஒரே அரசியல் பயணத்தை மேற்கொண்டுவிட்டு தற்போது அதில் இருந்து புதிய, தெரியாத பாதையில் பயணிப்பது என்ற முடிவு எப்படிஉள்ளது?

**தோழர் மு.சந்திரகுமார்:** புத்துணர்ச்சி யாகவே உணர்கிறேன் ●



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருகோணமலையில் படுகொலை செய்யப்பட்ட மாணவர்களுக்கு நீதி கோரி அமெரிக்காவில் ஆர்ப்பாட்டம்!

கடந்த 2006 ஆம் ஆண்டு திருகோணமலையில் இராணுவத்தினரால் படுகொலை செய்யப்பட்ட ஐந்து மாணவர்களுக்கு நீதி வழங்குமாறு இலங்கை அரசை வலியுறுத்தி அமெரிக்காவில் ஆர்ப்பாட்டம் ஒன்று இடம்பெற்றுள்ளது.




இந்த ஆர்ப்பாட்டம் சர்வதேச மன்னிப்பு சபையின் ஏற்பாட்டில் இடம்பெற்றுள்ளது. திருகோணமலையில் ஐந்து மாணவர்கள் படுகொலை உட்பட, 15 மனித உரிமைகள் மீறல் சம்பவங்கள் தொடர்பில் விசாரித்த குழு 2009 ஆம் ஆண்டு தனது அறிக்கையை அப்போதைய ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஸவிடம் வழங்கியது.

ஆனால், இந்தச் சம்பவங்கள் குறித்து இதுவரை சந்தேகத்தின் அடிப்படையில் எவரும் கைது செய்யப்படவில்லை. இந்நிலையில் கொல்லப்பட்ட மாணவர்களின் பெற்றோர் தமது பிள்ளைகளுக்கு நீதி வேண்டி நீண்டகாலம் காத்திருக்கின்றனர். எனவே, பொறுப்புக் கூறும் அதிகாரிகள் அநீதியான முறையில் கொலை செய்யப்பட்ட மாணவர்களின் பெற்றோருக்கு நீதி கிடைக்கச் செய்ய வேண்டும் என இந்த ஆர்ப்பாட்டத்தின் போது சர்வதேச மன்னிப்பு சபை இலங்கை அரசாங்கத்தைக் கேட்டுள்ளது.

---



# லண்டனில் உருவாகும் அரைநிர்வாண உணவகம்!

**60ஆம்** நூற்றாண்டை சேர்ந்த ரோமானியர்கள் தாங்கள் உண்ணும் உணவுப் பொருட்கள் ஆடைகளில் சிந்தி விடுவதால் அதனை தவிர்ப்பதற்காக அரைநிர்வாணம் மற்றும் நிர்வாணமாக அமர்ந்து சாப்பிடும் உணவகங்களை அமைத்தனர்.

ரோமானியர்களிடம் நல்ல வரவேற்பை பெற்ற இந்த உணவகம் தற்போது லண்டனிலும் வரவிருக்கின்றது. ஏற்கனவே ஐரோப்பிய நாடுகளில் அரை நிர்வாண முறையில் அமர்ந்து மது அருந்தும் மதுபார்கள் உள்ளன என்பது குறிப்பிடத்தக்கது.

இந்த மதுபார்களில் வாடிக்கையாளர்கள் அமர்ந்தும் மது அருந்தும் இருக்கையானது நன்றாக வடிவமைக்கப்பட்டு சற்று நாகரீகமாக இருக்கும். இந்நிலையில், அரை நிர்வாண மதுபார்களுக்கு நல்ல வரவேற்பு இருப்பதால், அதனை அடிப்படையாக கொண்டு லண்டனில் உணவகம் ஒன்று உருவாக்கப்பட்டு வருகின்றது.

இந்த உணவகம் முற்றிலும் மூங்கிலைக் கொண்டு வடிவமைக்கப் பட்டிருக்கும். மேலும் வாடிக்கையாளர்களை சுற்றி மெழுகுவர்த்தி வெளிச்சங்களே இருக்கும்.

மேலும், இந்த உணவகத்தில் இரண்டு அறைகள் இருக்கும். உட்புறமாக இருக்கும் அறையில் நிர்வாணமாக இருக்கும் வாடிக்கையாளர்களும், வெளிப்புற அறையில் அரைநிர்வாண வாடிக்கையாளர்களும் அமர்ந்து உணவருந்தலாம்.

இந்த உணவகத்திற்கு செல்ல வேண்டுமானால், http://thebunyadi.com/ என்ற இணையதளத்தில் பெயரை பதிவு செய்த பின்னர், அவர்களிடம் இருந்த அந்த நபருக்கு ரகசிய கோட் அனுப்பப்படும், அதன் பின்னரே இந்த உணவகத்திற்கு செல்ல முடியும்.

இந்நிலையில், வரவிருக்கின்ற இந்த உணவகத்திற்கு செல்வதற்காக 10 ஆயிரம் பேர் தங்களுடைய பெயர்களை பதிவு செய்து காத்திருக்கின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அகதிகளின் கைத்தொலைபேசி, கணனி உரையாடல்கள் பிரித்தானியாவில் ஒட்டுக் கேட்கப்படுகின்றன!

பிரித்தானியாவில் குடியேறியுள்ள அகதிகளின் கைத்தோலைபேசி மற்றும் கணனி மூலமாக பரிமாற்றப்படும் தகவலகளை அந்நாட்டு குடியமர்வு அதிகாரிகள் ஒட்டுக் கேட்பதாக தற்போது தகவல்கள் வெளியாகியுள்ளன.

பிரித்தானிய நாட்டின் 1997ம் ஆண்டு கொண்டுவரப்பட்ட பொலிஸ் சட்ட விதிகளில் கடந்த 2013ம் ஆண்டு சில திருத்தங்கள் கொண்டு வரப்பட்டன.

இந்த திருத்தங்கள் மூலம் பிரித்தானிய குடியமர்வு அதிகாரிகள் அந்நாட்டில் உள்ள அகதிகளின் வீடுகள், கார்கள், செல்போன் மற்றும் கணணிகளில் நுழைந்து அவர்களுக்கு தெரியாமலேயே தகவல்களை சேகரிக்க சட்டப்பூர்வமாக அதிகாரம் அளிக்கப்பட்டுள்ளது.

அதாவது, கடந்த 2013ம் ஆண்டு முதல் குடியமர்வு அதிகாரிகள் இந்த இரகசிய நடவடிக்கையை மேற்கொண்டு வருகின்றனர் என்பதை குடியமர்வு துறை அலுவலகமே உறுதி செய்துள்ளது.

இது குறித்து பிரித்தானிய குடியமர்வு துறை அமைச்சரான ஜேம்ஸ் புரோகென் ஷைர் பேசுகையில், குடியமர்வு துறை அதிகாரிகளுக்கு அகதிகளின் கைத் தொலைபேசிகள் மற்றும் கணனிகளில்



நுழைந்து தகவல்களை சேகரிக்க உத்தர விட்டுள்ளது உண்மைதான்.

ஆனால், பிரித்தானியாவில் அகதிகள் தொடர்பான குற்றங்கள் நடைபெறும் பட்சத்தில், அல்லது தேசிய அளவில் நடைபெறும் குற்றங்களில் அகதிகள் அல்லது புலம்பெயர்ந்தவர்களுக்கு தொடர்பு இருந்தால் மட்டுமே அவர்களுடைய தகவல்கள் பரிமாற்றம் இரகசியமாக கண்காணிக்கப்படும் என தெரிவித்துள்ளார்.

அதாவது, பிரித்தானியாவில் குடியேறியுள்ள அகதிகள் அல்லது புகலிடத்திற்காக காத்திருக்கும் நபர்களுக்கு ஏதேனும் குற்றச்செயலில் தொடர்பு இருந்தால், அவர்களுடைய தகவல் பரிமாற்றங்கள் அவர்களுக்கு தெரியாமலேயே கண்காணிக்கப்படும்.

தற்போது வரை பிரித்தானிய எல்லைகளில் பணியாற்றும் சுமார் 700 பொலிசாருக்கு இந்த கூடுதல் அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது.

எனினும், குற்றம் புரிந்தவராக இருந்தாலும் கூட அவர்களுக்கு தெரியாமல் அவர்களுடைய தகவல்களை இரகசியமாக கண்காணிப்பது தனிநபர் சுதந்திரத்திற்கு எதிரானது என தற்போது எதிர்ப்புகள் கிளம்பியுள்ளன.

# லண்டனில் வித்தியாசமாக விழிப்புணர்வு நடத்தியவர்கள் கைது!



லண்டனில் காற்று மாசு வேகமாக அதிகரித்து வருவது தொடர்பாக நூதனமுறையில் விழிப்புணர்வு ஏற்படுத்தியவர்களை பொலிசார் கைது செய்தனர்.

லண்டனில் காற்று மாசு வேகமாக அதிகரித்து வருகிறது. இதன் காரணமாக பொதுமக்களுக்கு பெரிதும் பாதிப்பு ஏற்படும் நிலை ஏற்பட்டுள்ளது. எனவே, இது தொடர்பாக மக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தும் விதமாக கிரீன்பீஸ் அமைப்பினர் நூதன முயற்சியில் இறங்கினர்.

லண்டன் நகரில் உள்ள லோர்ட் நெல்சன், சேர் வின்ஸ்டன் சேர்ச்சில், விக்டோரியா மகாராணி ஆகியோரது சிலைகளில் முகமூடி அணுவித்தனர். அதிகாலையிலேயே சிலைகளுக்கு முகமூடி அணிவிக்கும் பணியை தொடங்கிய அவர்கள் சுமார் 17 சிலைகளுக்கு முகமூடி அணிவித்துள்ளனர். இது குறித்து தகவல் கிடைத்த பொலிசார் 8 பேரை கைது செய்தனர்.

லண்டன் நகரை உடனடியாக சுத்தப் படுத்த வேண்டும். இல்லையென்றால் லண்டனில் மட்டும் 10 ஆயிரம் பேரும், பிரித்தானியா முழுவதும் 40 ஆயிரம் பேரும் ஆண்டுதோறும் இறக்க நேரிடும் என்றும் கிரீன்பீஸ் அமைப்பினர் கோரிக்கை வைத்துள்ளனர்.

புகழ் பெற்றவர்களின் சிலைகளில் முகமூடி அணிவித்த அவர்களது செயல்களுக்கு சமூக வலைத்தளங்களில் எதிர்ப்பு மற்றும் ஆதரவும் பெருகியுள்ளது.

## இலங்கை மேற்கொள்ள வேண்டிய பணிகள் இன்னும் உள்ளன - பிரித்தானியா

நல்லெண்ண முயற்சிகளில் இலங்கையில் முன்னேற்றங்கள் திருப்தி தருகின்ற போதும் இன்னும் இலங்கை மேற்கொள்ள வேண்டிய பணிகள் உள்ளன என்று பிரித்தானியா தெரிவித் துள்ளது.

பிரித்தானியாவின் பொது நலவாய அலுவலக அமைச்சர் ஹூகோ ஸ்வைரி



இந்தக் கருத்தை நாடாளுமன்றத்தில் தெரிவித்துள்ளார். பிரித்தானியாவை பொறுத்த வரையில் எதிர்வரும் ஜூன் மாதத்தில் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபையில் சமர்ப்பிக்கப் படவுள்ள முன்னேற்ற அறிக்கையை எதிர்ப்பார்ப்பதாகவும் ஸ்வைரி தெரிவித் துள்ளார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கணவருக்கு போதிய வருமானம் இல்லாததால் மனைவியை நாடு கடத்த முடிவு!

பிரித்தானியவில் கணவருக்கு போதிய வருமானம் இல்லாததால் அவருடைய மனைவியை நாடுகடத்த அந்நாட்டு குடியமர்வு அதிகாரிகள் முடிவு செய்துள்ளதாக தகவல்கள் வெளியாகி யுள்ளன.

அமெரிக்க நாட்டை சேர்ந்த கேட்டி ஜேம்ஸ் (40) என்ற பெண் பிரித்தானியாவை சேர்ந்த டோமினிக் (42) என்பவரை கடந்த 2005ம் ஆண்டில் இணையத்தளம் மூலம் சந்தித்துள்ளார்.

இருவருக்கும் காதல் ஏற்பட, காதலியை திருமணம் செய்ய டோமினிக் அமெரிக்கா சென்றுள்ளார். 2006ம் ஆண்டு இருவரின் திருமணமும் முடிந்த பிறகு பிரித்தானிய நாட்டில் தற்காலிக விசாவில் கேட்டி ஜேம்ஸ் குடியேறியுள்ளார். இந் நிலையில், சில மாதங்களுக்கு முன்னர் கேட்டி ஜேம்ஸின் விசா காலம் முடிவடைந்துள்ளது. இதனை புதுபிக்க அவர் விண்ணப்பம் செய்த போது, அவரது கோரிக்கையை குடியமர்வு அதிகாரிகள் ரத்து செய்துள்ளனர்.

கேட்டி ஜேம்ஸின் கணவருக்கு குறைவான ஊதியம் மட்டுமே வருவதால், கேட்டி ஜேம்ஸ் உடனடியாக அமெரிக்க நாட்டிற்கு திரும்ப வேண்டும் என அதிகாரிகள் உத்தரவிட்டுள்ளனர்.

பிரித்தானிய சட்டப்படி, அந்நாட்டு குடிமகன் வெளிநாட்டு பெண்ணை திருமணம் செய்தால், அவருக்கு சராசரியாக ஆண்டு வருமானம் 18,600 பவுண்ட் இருக்க வேண்டும்.

மேலும், குழந்தையுடன் குடும்பம் நடத்த வேண்டும் என்றால், 22,400 பவுண்ட் வருமானம் இருக்க வேண்டும்.

ஆனால், டொமினிக்கிற்கு இதைவிட குறைவாகவே வருமானம் வருவதால், அவரது மனைவி பிரித்தானியாவில் தங்க முடியாது என குடியமர்வு அதிகாரிகள் உறுதிப்பட தெரிவித்துள்ளனர்.

பிரித்தானிய அரசின் இந்த அதிரடி உத்தரவை தொடர்ந்து, இப்பிரச்சினையை பிரதமர் கமெரூனின் கவனத்திற்கு கொண்டு செல்ல உள்ளதாக டோமினிக் தெரிவித்துள்ளார்.

# ஜுராசிக் கடற்கரையில் நிலச்சரிவு!



பிரித்தானியாவின் புகழ்பெற்ற ஜுராசிக் கடற்கரையில் திடீரென்று நிலப்பரப்பு இரண்டாக பிளந்து அப்பகுதியில் மிகப்பெரிய நிலச்சரிவு ஏற்பட்டுள்ளது.

புகழ்பெற்ற ஜுராசிக் கடற்கரையில் ஏற்பட்ட இந்த திடீர் நிலச்சரிவால் அப்பகுதியில் சுமார் 900 அடி அளவிற்கு பிளவும் ஏற்பட்டுள்ளது.

இதனால் அப்பகுதியில் உள்ள டன் கணக்கிலான மண் குவியல் சரிந்து விழுந்துள்ளது. இது அப்பகுதியில் பெய்த கன மழையால் ஏற்பட்டிருக்கலாம் என தெரிவிக்கப்படுகிறது.

இதனை அப்பகுதியில் நடைப் பயிற்சியில் ஈடுபட்டிருந்த நபர் ஒருவர் படம் பிடித்துள்ளார். அவர் தமது **Drone** எனப்படும் குட்டி விமானத்தால் இந்த படங்களை எடுத்துள்ளதாக கூறப்படுகிறது.

மேலும், அப்பகுதி மிகவும் ஆபத்தான நிலையில் இருப்பதாக உணர்ந்த அந்த நபர் உடனடியாக சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு தகவல் தெரிவித்துள்ளார்.

அதிகப்படியான மழை காரணமாக தண்ணீர் அப்பகுதியில் உள்ள சுண்ணாம்புக் கற்களினூடே கலந்திருக்கலாம் என்றும். இதன் காரணமாக எடை அதிகரித்ததால் அப்பகுதியில் உள்ள மண் மேடு உடைந்து இரண்டாக பிளந்து நிலச்சரிவு ஏற்பட்டிருக்கலாம் என கூறப்படுகிறது.

இந்த கடற்கரை பகுதியானது ஐக்கியநாடுகள் சபையினால் அங்கீகரிக்கப்பட்ட உலக பாரம்பரிய தளங்களில் ஒன்று என்பது குறிப்பிடத்தக்கது.

# தமிழ் தேசியக் கூட்டமைப்பினர் இனவாதத்தை தூண்டுகின்றனர் – ஜே.வி.பி

வடபகுதி அரசியல்வாதிகள் தொடர்பில் மக்கள் மத்தியில் பாரிய எதிர்ப்பு ஏற்பட்டுள்ளது என்றும், தமிழ் தேசியக் கூட்டமைப்பின் தலைவர்கள் தமக்கு ஒரே ஒரு காரணியாக இருக்கும் இனவாதத்தை மீண்டும் மேலெழுப்புவதாகவும் ஜே.வி. பியின் நாடாளுமன்ற உறுப்பினர் விஜித்த ஹேரத் தெரிவித்துள்ளார்.

மேலும், ஜே.வி.பி உயர் நீதிமன்றத்திற்கு சென்றமையாலேயே வடக்கையும் கிழக்கையும் பிரிக்க முடிந்தது எனவும் அவர் இதன்போது சுட்டிக்காட்டியுள்ளார்.

தமிழ் இனவாதிகள் தனிநாடு, வடக்கு - கிழக்கு இணைப்பு போன்ற தந்திரங்களை பயன்படுத்தி மீண்டும் தமிழ் மக்களை ஏமாற்றி வருகின்றனர் எனவும் விஜித்தஹேரத் மேலும் கருத்து வெளியிட்டுள்ளார். கட்சி தலைமையகத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பு ஒன்றிலேயே அவர் இதனைக் கூறியுள்ளார்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

07800596786

# 2016 சித்திரை வருடப்பிறப்பும் பஞ்சாங்க குளறுபடியும்

இவ்வருட சித்திரை வருடம் இலண்டன் நேரப்படி 13.04.2016 பிற்பகல் 3.18ல் பிறந்ததுயாவரும் அறிந்ததே. சூரியஅஸ்த மனத்திற்கு முன்னர் வருடம் பிறந்ததால் ஐரோப்பா, கனடா போன்ற நாடுகளில் 13.04.2016 வருடம் கொண்டாடப்பட்டது. அதேசமயத்தில் இலங்கை, இந்தியா வில் வருடம் 13.04.2016 சூரிய அஸ்த மனத்திற்கு பின் பிறந்ததால் அங்கு மறுநாள் காலை 14.04.2016ல் கொண் டாடப்பட்டது.

ஊரில் வேறுநாள் என்று குழப்பம் அடை யாமல் இங்கிலாந்து சூரிய உதயப்படி சரியாக கணிக்கப்பட்ட விசேட நாட்களில் உங்கள் வழிபாடுகளை செய்து வரங்களை பெறுமாறு தாழ்மையுடன் வேண்டுகி றோாம்.

லண்டன் தமிழர் தகவல்கள் மாபெரும் கண்டுபிடிப்பு லண்டனிலும் புலம்பெயர் நாடுகளிலும் செய்யும் நற்காரியங்கள் அரைகுறையானவையாம்.

இத் தருணத்தில் ஓர் வேடிக்கையான விடயத்தைப் பார்ப்போம். இத்துடன் லண்டன் தமிழர் தகவல் இதழில் வந்த ஓர் கட்டுரை இணைக்கப்பட்டுள்ளது.

இதை எழுதியவர் தேவலோக குருக்க ளாம். தயவு செய்து இணைப்பில் சுட்டிக் காட்டிய இரு பந்திகளை வாசியுங்கள். முதலாவது பந்தியில் கூறுகின்றனர். இலண்டன் நேரப்படி சித்திரைவருடம் 13.04.2016 அன்று 1 மணி 6 நிமிடத் திற்குப் பிறப்பதால் இலண்டனில் 13.04. 2016இலும், இலங்கையிலும், இந்தியா விலும் சூரிய அஸ்தமனத்தில் பிறப்பதால் 14.04.2016இலும், சித்திரை வருடம் கொண்டாடப்படுகிறது என்று. கடைசிப் பந்தியில் வெளிநாடுகளில் இயற்கை முழுமை அடைய வில்லையாம். இந்த ஜோதிட பூசணத்தின் கருத்துப்படி நாங்கள் இனி திவசம், கலியாண வீடெல்லாம் இலங்கையிலும், இந்தியாவிலும் தான் செய்யவேணும். இது என்ன அநியாயம்.

இந்துசமய விரதநாட்கள், திதி என்பன நடசத்திரகால எல்லைப்படி நிர்ணயிக்கப் படுவன. உதாரணமாக சூரிய பகவான் மகர ராசிக்குள் பிரவேசிக்கும்போது தை பிறக்கிறது. அதேபோல் சிவராத்திரி விர தத்தில் லிங்கோற்சவ பூசையில் மாசி தேய்பிறை சதுர்த்தசி இருக்க வேண்டும். இவரின் கட்டுரைப்படி இந்திய ஆலயங் களின் நாட்களைப் பின்பற்றுவதும் சிவ ராத்திரி விரதத்தை சித்திரை மாதத்தில் அனுஸ்டிப்பதும் ஒன்றாகும். முன்னுக்குப் பின்னாக எழுதும் இந்த தேவலோகம் ஒரு ஜோதிட பூசணமாம்.

# பஞ்சாங்கக் குளறுபடி! இப்படியும் நடக்கிறது! அப்பாவி இந்துக்கள் ராகுகாலத்தில் திருமணம் செய்யும் கொடுமை

ஈலிங்ககனக துர்க்கை அம்மனின் பஞ்சாங்கத்தை பாவிக்கும் இந்துக் கள் நற்காரியங்களை ராகுகாலத்தில் செய்யும் கொடுமை. ராகுகாலம் மரண யோகத்திற்கு நிகரானது என்பதை நீங்கள் அறிந்ததே. ராகு காலம் பகல் நேரஅளவில் கணிக் கப்படுகிறது. என்பதை ஈலிங்க அம்மன் நிர்வாகத்தினர் நன்கு அறி வார்கள். அதாவது பகல் நேரம் கூட இருந்தால் ராகுகாலம் கூடுதலாக இருக்கும்.

ஆனால் ஈலிங்க அம்மனுக்கு கணிக்கப்படும் பஞ்சாங்கத்தில் ஐரோப்பிய நாடுகளில் கோடை காலத்தில் பகல் நேரம் கூடுதலாக வும் மாரிகாலத்தில் குறை வாகவும் உள்ள உண்மை கருத்தில் கொள்ளப்படவில்லை.




இப்பஞ்சாங்கத்தை பின்பற்றுபவர்கள் திருமணம், பூப்புனித நீராட்டு போன்ற நற்காரியங்களை ராகுகாலத்தில் நடத்தும் மாபெரும் கொடுமைக்கு தள்ளப்படுகிறார்கள். இது பற்றி சில சிவாச்சாரியார்களிடம் கேட்டபோது அவர்கள் பின்வருமாறு கூறினார்கள்.

இவ்வுண்மையை ஈலிங் நிர்வாகத்தினருக்கு ஏனைய 21 ஆலய சிவாச்சாரியார்களால் உணர்த்தப்பட்டாலும் இதன் அபாயம் அவர்களுக்கு விளங்கவில்லை. மாபெரும் தவறைப் பற்றி ஒன்றிய நிர்வாகத்துடன் தொடர்பு கொண்டு கேட்டபோது பிழையை உணர்த்தும் முகமாக ரகுநாத ஐயருக்கு இரண்டு முறை ஒன்றியத்தின் சார்பாக தொடர்பு கொண்டபோது அவரிடமி ருந்து எப்பதிலும் கிடைக்கவில்லை என்று கூறினார்கள்.

அப்பாவி இந்துக்களை படுகுழியில் தள்ளும் இத்தவறை திருத்த நாம் எம்மால் ஆன எல்லா முயற்சி களையும் எடுத்துக் கொண்டு இருக்கிறோம். அதேநேரம் இக் கட்டுரையை வாசிக்கும் இந்துக்கள் ஈலிங்க அம்மன் பஞ்சாங்கத்தில் இராகு காலம் பிழையாகக் கணிக் கப்படுவதை விளங்கியோ, விளங் காமலோ ஈ லிங்க அம்மன் நிர்வா கத்தினர் இப்பஞ்சாங்கத்தை கணிக்கும் இரகுநாத ஐயாவிடம் சுட்டிக்காட்டத் தயங்குகிறார்கள்.

இந்தியா, இலங்கையில் கோடைக் காலத்தில் மாரிகாலத்தில் சூரியன் உதயம் மறைவு சம அளவாக இருக்கும். ஆனால், இங்கிலாந்து மற்றைய ஐரோப்பிய நாடுகளில் கோடை காலத்தில் பகல் நேரம் கூடவாக இருப்பதால் ராகுகாலம் கூட வாக இருக்கிறது.

ஆனால் ஈலிங் அம்மன்பஞ்சாங்கத்தில் மாரிகாலத்தில் உள்ளபகல் நேரஅளவில்தான் ராகுகாலம் கணிக்கப்படுகிறது. இத் தவறினால் கோடைகாலத்தில் ராகு காலம் கூட இருப்பது காட்டப்படவில்லை. இத்தவறினால் இப்பஞ்சாங்கத்தை பாவிக் கும் அப்பாவி இந்துக்கள் பயங்கர விளைவுகளை எதிர் நோக்க லாம்.

மின்னஞ்சல் முகவரி: thesam97@hotmail.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org